
www.tamilarangam.net

# எரிமலை

ஜுன் 1996



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இழவு வீட்டில் இருத்தலென
இது என்ன கோலம்.
அட பைத்தியக்காரா
அழுவதை நிறுத்து.
இனி;
மீதமுள்ள காலமெல்லாம் இருளென
யார் சொன்னது?
வசந்தத்துக்கு முந்திய இலையுதிர்ப்பை
வரட்சியென்றா எண்ணினாய்?
பட்டுப்போய் மொட்டை மரமாக
நமக்கென்ன வேரறுந்து போச்சா?
இது புதிய துளிர்ப்புக்கான உதிர்வு
எரிதாங்கக் கூடியது எம் மண்.
இடிதாங்கக் கூடியது எம் மனை.

பாறை பிளந்து ஊற்றுக்கண் தேடிய
பரம்பரையல்லவா நீ?
அழிவுன்னை என்ன செய்யும்?
ஊர் திரும்பும்போது வீதியெல்லாம்
கள்ளி முளைத்திருக்கும்.
கதவின்றி வீடு ஓவென்று கிடக்கும்.
அதனாலென்ன
வியர்வைத் துளிர்ப்பில்
மீண்டும் எல்லாம் வெளிச்சமாகும்.
இப்போ ஊர் திரும்ப வேண்டுமே.
பகை துரத்துவதும் உன்பணியே.
பலம் வேண்டும்.
வரம் நல்காய்.

— மாலிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





கலை பண்பாடு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

ஜூன் 1996

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrénées,

75020 Paris.

Tel: 43 58 11 42


www.tamilarangam.net

# விடுதலைப்புலிகளின் எதிர்த் தந்திரோபாயம்

விடுதலைப் புலிகளை அழித்து, தமிழ் மக்களை சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்குள் கொண்டு வருவதுதான் சிறிலங்கா அரசாங்கத்தின் யுத்த தந்திரோபாயத்தின் நோக்கம் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இத் தந்திரோபாயம் உறுதியான, தீர்க்கதரிசனமான தளத்தில் இடப்பட்டுள்ளதா என்பதுதான் சந்தேகத்திற்கிடமானது. இத் தந்திரோபாயத்தின் அடிப்படைப் பலவீனங்கள் சிலவற்றைப் பார்ப்போம்: ஒன்று, சுதந்திரம் என்ற அபிலாஷை எதுவுமற்ற வெறும் மந்தைகளாகத் தமிழ் மக்களைக் கருதியது. அவர்களது உரிமைகளைக் கொடுக்காது, உணவு போன்ற அன்றாடச் சலுகைகளைக் கொடுத்தே ஏமாற்றிவிடலாம் என்று அரசாங்கம் எண்ணிச் செயல்படுகின்றது.

இரண்டாவது, வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்கி போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பது; அதேபோன்று சிங்களப் பொதுமக்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் மீது யுத்தச் செலவீனம் என்ற பழுவை ஏற்றி அவர்களின் வயிற்றலடித்து செலவு மிகுந்த யுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது. இவை இரண்டும், நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்திற்கு இட்டுச் செல்கின்றன. மூன்றாவது, இந்தியாவில் ஒருபோது ஏற்பட்ட தனக்குச் சாதகமான சூழ்நிலையை ஒரு நிரந்தர நிலைப்பாடாகக் கொண்டு செயல்படுவது. சிறிலங்காவிற்கான ஆதரவு ஒரு தற்காலிகமானதே தவிர நீண்டகால அடிப்படை அற்றது என்பதை அண்மைக்கால இந்தியத் தேர்தலே உணர்த்தியிருக்க வேண்டும். எனவேதான் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அந்த நட்பை நிலைநிறுத்திக்கொள்ள இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார். பிரதமர் உட்பட பல அமைச்சர்களைச் சந்தித்துத் தலைகீழாய் நின்றாயினும் காரியத்தைச் சாதிக்க முயல்கிறார்.

நான்காவதாக குறுகிய அரசியல் லாபத்திற்கான விடயங்களைக் குறிப்பிடலாம். தேர்தல் ஒன்று வருமாயின், யாழ் குடாநாட்டு மக்களின் வாக்குகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பெற்றுவிடலாம் என்று அபத்தமாகச் செயல்படுவது. இம்முயற்சியில், தனக்கு ஆதரவான கொழும்புத் தமிழ்க்குழுக்களைக் கூடப் புறந்தள்ளி விட்டு சில்லறைச் சலுகைகள் மூலம் குடாநாட்டு மக்களின் ஓட்டுக்களைப் பொறுக்கலாம் என்பது பெரும் பகற் கனவாய் முடியும்.

ஐந்தாவது, ஏற்கனவே முடமாக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை பாராளுமன்ற தெரிவுக்குழு போன்ற பாதாளப் பாதைகளில் நகர வைக்க முயல்வது. இது வெறும் ராஜதந்திர முயற்சியே தவிர, நேர்மையான தீர்வு முயற்சி அல்ல என்பதை உலகம் உணரத் தொடங்கி விட்டது. கொழும்புத் தமிழ்க் குழுக்களையே திருப்திப்படுத்த முடியாத நிலையில், யாழ் மக்களோடு நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்போவதாகக் கூறும் சந்திரிகாவின் கேலிநாடகத்தையும் உலகசமூகம் காணத் தவறவில்லை.

இவற்றிக்கெதிரான விடுதலைப்புலிகளின் எதிர்த்தந்திரோபாய நடவடிக்கைகள் சிறிலங்கா அரசாங்கத்தை மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளிவிடுகின்றன. விடுதலைப்புலிகள் தமது கெரில்லா உத்திகளைத் தீவிரப்படுத்தி யாழ்குடாநாடு, தென்தமிழீழம், எல்லைப்புறங்கள் என்று பரவலாகவும், வேகமாகவும் நடத்திவரும் தாக்குதல்கள், யாழ்குடாநாட்டு ஆக்கிரமிப்பை விஸ்தரிப்பதா அல்லது குடாநாட்டிலிருந்து தேவையான ஏனைய பகுதிகளுக்குத் துருப்புக்களை மாற்றுவதா என்ற தடுமாற்றத்தை இராணுவ தலைமைப்பீடத்துக்குக் கொடுத்துள்ளது. தாக்குதல், தற்காப்பு, விநியோக நோக்கங்களுக்காக அரசாங்கம் செய்யும் செலவீனம் அதனைப் பொருளாதார ரீதியாக மிகவும் பலவீனப்படுத்தி வருகின்றது.

அகதிகளுக்கான அத்தியாவசிய தேவைகளை தமிழர்புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புக்கள் கவனித்து வருகின்றன. சர்வதேச நிவாரண அமைப்புக்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி, உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களை இராணுவக் கருவியாக்கி, பஞ்ச நிலையைத் தோற்றுவித்து போராட்டத்தைச் சிதைக்கும் அரசின் நோக்கமும் உடைக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேசரீதியாக திட்டமிட்டு நடாத்தப்படும் மகாநாடுகள் அரசின் முகமூடியை சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்துகின்றன. நீதியான சமாதானத்தை எவ்வாறு கொண்டுவருவது, எந்த அடிப்படைகளில் தீர்வினைக் காண்பது, தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற, உலக சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு எது போன்ற விடயங்களை அம்மாநாடுகள் உலகின் பார்வைக்கு வைக்கின்றன.

விடுதலைப்புலிகளின் எதிர்த்தந்திரோபாயம், அகலக் கால்களை எடுத்து வைக்கும் அரசாங்கத்தின் தந்திரோபாயத்தை முறியடிப்பதாக உள்ளது. அதன் கால்களை மட்டுமல்ல, முழு அங்கங்களையுமே புதைப்பதற்கான புதைமணற் பகுதிகளை விடுதலைப்புலிகளின் தந்திரோபாயம் ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் போராட்டத்தில் பங்களித்த மக்கள் அனைவரும் மாமனிதர்களே!

எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள், கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசிய போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள்கொடுத்து வரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும்.

நீண்டகாலமாகவே போராட்டத்தின் பெரும் பளுவைப் பொதுமக்களே சுமந்து வருகிறார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்க முடியாது.

உலகில், எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்கவேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒரு பொழுதும் வெற்றியளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென்றால், விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.



தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள்

('எனது மக்களின் விடுதலைக்காக' நூலிலிருந்து)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் குடாநாட்டின் மீதான இராணுவ ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும்





**வசந்தராஜா**

சூரியக்கதிர்-1, சூரியக்கதிர்-2, ஆகிய இராணுவ நடவடிக்கைகளின் போது காட்டிய எதிர்ப்பை விட குறைந்த எதிர்ப்பையே விடுதலைப் புலிகள் சூரியக்கதிர்-3, நடவடிக்கையின் போது வெளிப்படுத்தினர். இது சிறீலங்கா இராணுவத் திட்டமிடல்களுக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம். ஆயினும், விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரோபாய, உத்திகளில் ஒரு மாற்றத்தைக் குறித்து நிற்பதாகவே இது எனக்குத் தோன்றுகிறது. சூரியக்கதிர்-1, நடவடிக்கையின் போது, விடுதலைப் புலிகள், நேரடி மோதல்கள், கண்ணிவெடித் தாக்குதல்கள் ஆகியவற்றின் மூலம், இராணுவ நகர்வைக் கணிசமான அளவு தாமதப்படுத்தினர். அதன் போது, இராணுவம் மிக மோசமான தாக்குதல்களை மேற்கொண்டு, பொதுமக்களின் உயிர், உடமைகளுக்குப் பாரிய சேதத்தை விளைவித்தனர். சூரியக்கதிர்-2, சூரியக்கதிர்-3 ஆகிய இராணுவ நடவடிக்கைகளின்போது, விடுதலைப் புலிகள் பொதுமக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்பட்டதாகக் கருதமுடிகிறது. அதேவேளை, தொழில்நுட்பரீதியாகவும், ஆட்பலரீதியாகவும் மேன்நிலை உடைய சிறீலங்காவின் மரபு இராணுவத்துடனான நேரடி மோதலை விடுதலைப் புலிகள் தவிர்த்துக்கொண்டதாகவே காணப்படுகிறது. அதன் மூலம், போராளிகள், போராட்டத் தலைமை ஆகியவற்றில் பாரிய சிதைவு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடனும் விடுதலைப் புலிகள் செயல்பட்டிருக்கலாம். தமிழர் தாயகத்தின் கணிசமான பகுதிகளை ஆக்கிரமித்ததன் மூலம், சிங்கள இராணுவம் பாரிய சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டு விட்டதா என்றும் எண்ணத்தோன்றுகிறது. அது குறித்து விரிவாக ஆராயமுன்னர், சூரியக்கதிர் நடவடிக்கைக்கு முன் இருந்த நிலைமைகளை சிறிது நோக்குவோம்.

சூரியக்கதிர் ஒன்றிலிருந்து சூரியக்கதிர் 2-ன் நோக்கங்கள் வேறுபட்டிருந்தன. இதன்போது புலிப் போராளிகளை பெருமளவில் அழித்தல் என்பது பிரதான நோக்கமாக இருக்கவில்லை. கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சினுள்ளும், எறிகணைத் தாக்குதல்களுக்குள்ளும் அகப்பட்டு இறந்து போகும் விதமாக விடுதலைப் புலிகள் நடந்து கொள்ளமாட்டார்கள் என்பதையும் இராணுவம் உணர்ந்திருக்க வேண்டும். சூரியக்கதிர்-1 நடவடிக்கையின்போது எதிர்கொண்ட அரசியல் தோல்வியை ஈடுகட்டுவதாகவே இந் நடவடிக்கை இருந்துள்ளது. 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், முன்னேறிவந்த இராணுவத்திடமிருந்து தப்பி ஓடி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் நுழைந்தது போன்ற செயற்பாட்டை தடுக்கவே இராணுவம் விரும்பியது. சூரியக்கதிர்-1 நடவடிக்கையின் போது, அந்நிய பிரதேசத்துள் வெறும் நிலப் பரப்புக்களை பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் கைப்பற்றிக் கொண்டதானது, பைத்தியக்காரத்தனமான செயலாகக் கருதப்பட்டதே தவிர, இராணுவ வெற்றியாக அமையவில்லை. எனவே, வலிகாமத்திலிருந்து தப்பி ஓடிய மக்களில் ஒரு பகுதியினரையாவது திருப்பிக் கொண்டு வருவதற்கான வழிவகைகளை இராணுவ அதிகாரிகள் தேடினர். பெரும்பாலானோர் வன்னிக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




இடம்பெயர்ந்தாராயினும் கணிசமான அளவு அகதிகள் தென்மராட்சிப் பகுதியில், சாவகச்சேரியைச் சூழ்ந்து தங்கியிருந்தனர். எனவே, சூரியக்கதிர் -2 நடவடிக்கையின் போது தென்மராட்சிப் பகுதியிலிருந்த மக்களைப் பிடித்தலையே தனது இலக்காகக் கொண்டது. தனக்குப் பாதகமான காட்டுப்புறச் சூழ்நிலையைக் கொண்டதாக வன்னி இருந்தமையால், அங்கு இடம் பெயர்ந்தோர் மீது கைவைப்பதை இராணுவம் தவிர்த்துக் கொண்டது. எனவேதான் சூரியக்கதிர் -2 நடவடிக்கை, மக்கள் மீது மிக மோசமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தி, அவர்களைப் பயங்கரப்படுத்தி அவர்களில் கணிசமானோரை வலிகாமத்துக்குத் திரும்பச்செய்வதான திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதன் மூலம், இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ், ஒரு அரச நிர்வாகத்தையும் அங்கு நிறுவிவிடலாம் என்று திட்டம் தீட்டப்பட்டது. இத்தகு போலியான சிவில் நிர்வாகத்தின் மூலம், வெளிநாட்டு அரசாங்கங்களை ஏமாற்றி, விடுதலைப் புலிகளை தாக்குவதற்கு மேலதிக உதவிகளைப் பெறலாம் என்றும் அரசாங்கம் எண்ணிச் செயற்பட்டது.

திட்டமிட்டவாறே சாவகச்சேரி சுற்றிவளைக்கப்பட்டு மக்கள் பலவந்தமாக வலிகாமத்துக்கு அனுப்பப்பட்டனர். இராணுவத்தின் ஆயுதபலம், மக்கள் மீண்டும் பெருமளவில் வன்னிக்கு இடம்பெயர்வதைத் தடுத்து விட்டது எனலாம். இத்தகு இடம்பெயர்வைத் தடுக்கும் நோக்கத்தை நிறைவேற்றவே இராணுவ நடவடிக்கையின் வியூகம் அமைக்கப்பட்டிருந்தது. எனவே தான் கிளாலி நீரேரியை நோக்கி ஓடி வன்னிக்குத் தப்பமுயன்ற மக்கள் மீது இராணுவம் தாக்குதலை நடத்தியது. இறுதியில் கிளாலிப் பகுதியையும் கைப்பற்றி, கிளாலிப் பாதையை மூடிவிட்டது.

சூரியக்கதிர்-1, நடவடிக்கையின் போது, நவீன ஆயுதபலமும், ஆட்பலமும் உடைய சிறீலங்கா இராணுவம் குடாநாட்டின் திறந்த வெளிகளினூடு முன்னேறிய சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் பல பாடங்களைக் கற்றுக்கொண்டதாகக் கருதுகிறேன். எனவேதான், தற்போதைக்கு நேரடியான மோதலைத் தவிர்த்துக் கொள்ள அவர்கள் தீர்மானித்ததாக எண்ணுகிறேன். யுத்த தந்திரோபாய அடிப்படையில், கிழக்குக் கரையிலிருந்து மேற்குக்கரை வரை பரந்ததாயும், குடாநாட்டுக்குள்ளும், கிழக்கு மாகாணத்துக்குள்ளும் செல்லக்கூடிய வழிகளைக் கொண்டதாகவும், சாதகமான கேந்திர நிலையில் வன்னிக் காட்டுப் பகுதி அமைந்திருந்தது. அப் பகுதி மீது தமது முழுக் கவனத்தையும் செலுத்துவது புத்திசாலித்தனமென விடுதலைப் புலிகள் கருதியிருக்கலாம்.

யாழ் குடாநாடு முழுவதையும் கைப்பற்றுவது, சிறீலங்கா இராணுவத்திற்கு மகிழ்ச்சி தரும் விடயமாக இருந்த போதிலும், 'சூரியக் கதிர்-2' நடவடிக்கை, நிலப் பகுதிகளை மேலும் ஆக்கிரமிக்கும் முயற்சியாக இருக்கவில்லை என்றே தோன்றுகின்றது. சூரியக்கதிர்-1-ன் போது காட்டிய எதிர்ப்பைவிட மிகக் குறைந்த எதிர்ப்பையே விடுதலைப் புலிகள் காட்டியமை, இராணுவத்தை வடமராட்சிக்குள் நுழைவதற்கான தூண்டுதலை அளித்திருக்கலாம். வடமராட்சியிலிருந்த முக்கிய நிலைகளைக் கைப்பற்ற இராணுவத்திற்கு 36 மணித்தியாலங்கள் போதுமானதாய் இருந்தது. நேரடி மோதலில் அல்லாமல், விபத்தொன்றினால் ஒரு சிப்பாயையே தான் இழந்ததாக இராணுவம் அறிவித்திருந்தது, விடுதலைப் புலிகள் அங்கு எதிர்ப்பெதையும் காட்டவில்லை என்று தெரிகிறது. விடுதலைப் புலிகள் உத்தி ரீதியான பின்நகர்வை மேற்கொண்டதாகவே அறிய முடிகிறது. சிறீலங்கா இராணுவத்தின் புதிய தந்திரோபாயம், உத்தி ஆகியவற்றிற்கு ஈடுகொடுப்பதாக விடுதலைப் புலிகள் தந்திரோபாயத் திட்டமும் அடிப்படை மாற்றத்துக்கு உட்பட்டுவிட்டதாகவே கருதுகிறேன்.

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் தறுவாயில் சிறிலங்கா உள்ளது



வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் தறுவாயயில் சிறிலங்கா உள்ளதாக– ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். நாடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது பணவீக்க அதிகரிப்பையும் தடுப்பது கஸ்டமான செயலாகும்.

- ஜனாதிபதி சந்திரிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சிங்கள இராணுவ ஆட்சியை தமிழ் மக்கள் விரும்பப்போவதில்லை என்பதை முன்மொழிவதற்கு நிபுணத்துவம் எதுவும் தேவையில்லை. காலம் செல்லச் செல்ல தமிழ் மக்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் இடையிலான முறுகல் நிலை வளர்ந்து கொண்டே போகும். அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்துக்கு நேர்ந்த கதியைப் பார்க்கும்போது, சிங்கள மேலாதிக்க நடுவன் அரசு, தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய எவ்விதத் தீர்வையும் முன்வைக்காது என்பது நிச்சயம். இச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் புதிய அணுகுமுறைக்கான காரணங்களைப் புரிந்து கொள்வது கடினமில்லை.

1987-ம் ஆண்டு யாழ் குடாநாட்டை இந்திய இராணுவம் ஆக்கிரமித்த சூழ்நிலையோடுதான் இதனை ஒப்பிடலாம். இச் சூழ்நிலையில், கெரில்லாப் போர் முறையைத் தற்காலிகமாக கையாளுதலே நல்லதென விடுதலைப் புலிகள் உணர்ந்து விட்டதாகத் தோன்றுகிறது.

யாழ் குடாநாட்டைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் இராணுவ மூலவளங்களின் தேவை கட்டுக்கடங்காமல் போவது, விடுதலைப் புலிகளுக்கு நீண்டகால அடிப்படையில் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும். கொழும்பு 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "கைப்பற்றிய பகுதிகளைத் தக்கவைத்துக் கொள்ளப் போதிய இராணுவம் உண்டா?" என்ற கேள்விக்கு இராணுவத் தளபதி ரொகான் தலுவத்த, "தற்போது போதியதாக இல்லை... கொழும்பிலுள்ளவர்கள் முற்றுமுழுதான போரைப் பற்றிக் கதைக்கிறார்கள். ஆனால் அதற்குப் போதியதான இராணுவ எண்ணிக்கை இல்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். தற்போதுள்ளது மிக மோசமான நிலைமை என்பதை எவரும் புரிந்துகொள்வர். யாழ். குடாநாட்டில் மிகவும் பரவலாக எண்ணிக்கை போதாத இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். அதுவும் வெறுப்பை வெளியில் காட்டிக்கொள்ளாத கோபம் கனலும் மக்களிடையே இருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களையும் தாக்குதல்களையும் தடுக்கும் நோக்குடனான கடும் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை, தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க வேண்டிய இரண்டும் கெட்டான் நிலை இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை முற்றாக முறியடிக்க வேண்டுமாயின், சிறீலங்கா இராணுவம் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 6 மாதங்களுக்கு முன்னர் தான் கூறியிருந்தார். அந்தக் கணிப்பை மாற்றுவதற்கான போதிய காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆட்சேர்க்கும் முயற்சியில், பல கோடிக்கணக்கான பணத்தை வெளிநாடுகளிலிருந்து கடனாகப் பெற்று, ஏற்கனவே தள்ளாடும் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பது தான் அரசாங்கத்தின் நோக்கமோ தெரியவில்லை.

இராணுவ எண்ணிக்கை மூன்று மடங்காக கூடுவதென்பது ஒருபுறம் இருக்க, இராணுவத்திலிருந்து தப்பி







'சூரியக்கதிர்–2' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தபோது அவுஸ்ரேலியாவின் தென் பகுதியில் வாழும் புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் 29.04.96 அன்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர். அவுஸ்திரேலிய அரசியல் தலைவர்களினதும், கட்சிகளினதும், மக்களினதும் கவனத்தை இவ் ஆர்ப்பாட்டப் பேரணி ஈர்த்தது. இலங்கை வாழ் தமிழ் மக்களின் துயரநிலையைத் தாம் உணர்ந்து கவலைப்படுவதாகவும், இவ்விடயம் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும் எனவும் இது விடயத்தில் தாம் அக்கறை கொள்வதாகவும் கூறினர்.

சிறிலங்கா அரசின் உயர் ஸ்த்தானிகரலாயத்தை நோக்கி நகர்ந்த ஆயித்துக்கும் அதிகமான மக்கள் "ஈழத்தமிழர்கள் என்றும் அகதிகளுமல்லர்; அவர்கள் அவலங்கள் ஓர் விடுகதையுமல்ல", "ஈழத்தமிழ் மண் அவர்களது சொந்த மண்; அந்த மண்ணின் எல்லையை மீறி வந்த எதிரி விரட்டப்படும் வரை போர் ஓயப்போவதில்லை" என்ற உணர்வை ஆர்ப்பாட்டப் பேரணி வெளிப்படுத்தி நின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

### தந்திரோபாய வெற்றி எதனையும் 'ரிவிரெச' பெற்றுத் தந்துவிடவில்லை!

''ரிவிரெச'' இராணுவ நடவடிக்கை படையினருக்கு மனோரீதியான வலிமையைக் கொடுத்திருந்த போதிலும் அது தந்திரோபாய ரீதியில் எவ்வித பெறுமதியும் அற்றதாகவே காணப்பட்டது.

படையினரால் வலிகாமம் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுமிடத்து, நிலப்பரப்பை மட்டும் பிடித்து விடுவதால் தந்திரோபாயத்தில் வெற்றி கிடைத்துவிடும் எனக் கருதிவிட முடியாது – விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து விடவும் முடியாது.

-முன்னாள் விமானப்படைத் தளபதி குணதிலக

ஓடுவதனால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பவே இராணுவத் தலைமைப்பீடம் திணறுவதாகத் தெரிகிறது. எனவே, சூரியக்கதிர்-3இன் போது, வடமராட்சியை இராணுவம் ஆக்கிரமித்ததானது, திட்டமிட்டுச் செய்யப்பட்ட தந்திரோபாய அடிப்படையிலான விடயமாகத் தோன்றவில்லை. விடுதலைப் புலிகள் உத்திரீதியாகப் பின்நகர்ந்ததால், இராணுவம் வடமராட்சியைப் பிடிக்கும் அவசர முடிவுக்குத் தள்ளப்பட்டதாகவே காணப்படுகின்றது.

இத்தகைய இராணுவச் சாகஸச் செயல்களுக்கு வேறு பல காரணங்களும் இருக்கின்றன. வீழ்ச்சி நிலையில் இருக்கும் சந்திரிகாவின் அரசாங்கத்தை தக்கவைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பவாதச் செயற்பாடாகவே இருக்கலாம். அரசாங்கம் போரின் வெற்றிகளைப் பறைசாற்றி காலம் தாழ்த்தாமல் ஒரு பொதுத் தேர்தலை நடத்தி அரசியல் லாபத்தைத் தேடிக்கொள்ள முயலலாம் என பல அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதுவே உண்மையெனில், இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான போர் வெறியை அரசியல் லாபமாக்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய கேவலச் செயலாக யாழ்குடாநாட்டு ஆக்கிரமிப்பு வரலாற்று ஏடுகளில் பதிவாகும். இந்த இராணுவ சாகஸம், தமிழ் தேசத்துக்கு எதிராக சிங்கள அரசாங்கங்கள் புரிந்த குற்றச் செயல்களில் தலையாய ஒன்றாக வருங்கால வரலாற்றாசிரியர்களால் எழுதப்படும். ★

www.tamilarangam.net

சிங்கள ஆட்சியாளர்களின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் உடன் நடவடிக்கையில் இறங்கவேண்டும் எனக் கோரியும், சர்வதேச சமூகம் விடுதலைப் போரை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரியும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இணைந்து நடாத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம்











www.tamilarangam.net

# குடாநாட்டை அபிவிருத்தி செய்ய சிங்கள அரசு அவசரப்படுவது ஏன்?

சிறிலங்காவின் முக்கிய நிதி மையமான மத்திய வங்கியில் குண்டு வெடித்து நாட்கள் பல உருண்டோடி விட்டன.

குண்டு வெடிப்பால் சிதைந்த கட்டடத்தைப் புனரமைக்க இது வரை எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை என்றும் பலத்த அசௌகரியங்களுக்கு மத்தியில் தாம் சிறிய கட்டடங்களில் கடமையாற்ற வேண்டியுள்ளதாகத் தெரிவித்து வங்கி ஊழியர்கள் ஆர்ப் பாட்டம் செய்துள்ளனர்.

ஆனால் சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாண மக்களில் மிகுந்த கரிசனை கொண்டு யாழ் மாவட்டத் திற்கென ஒரு துரித அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்து நடைமுறைப் படுத்தத் திட்டமிட்டுள்ளார். இதற்கு 1855 கோடி ரூபா தேவை எனவும்

**— வேலன் —**

உலக நாடுகள் அவரது நன்நோக் கைப் புரிந்து கொண்டு தாராளமாக உதவ வேண்டுமெனவும் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஆனால் இதற்கு இனவாதிகள் மத்தியில் சிறிய முணு முணுப்புக் கள் இல்லாமலும் இல்லை. இவ்வ ளவு பெருந்தொகையை உடனடி யாக செலவிட வேண்டுமா? பார்த் துச் செலவு செய்தாலென்ன? என் பது அவர்களின் கேள்வியாக உள் ளது.

எனினும் இந்த இனவாதிகளின் குரலுக்குச் சந்திரிகா செவிசாய்ப்ப தாக இல்லை. தென்பகுதி மக்கள் என்னென்ன சலுகைகளை அனுப விக்கின்றார்களோ அவை அனைத் தையும் யாழ் - குடாநாட்டு மக்க ளும் அனுபவிக்க வேண்டும் என்ப தில் அவர் உறுதியாக உள்ளதாக தெரிகிறது.

இந்த வகையில் முதல் நடவடிக் கையாக படையினரின் சேமலாபங் களைக் கவனிக்கவும், ஊனமுற்ற படையினருக்கு உதவவும் உருவாக் கப்பட்ட வெண்தாமரை இயக்கம் அதன் அலுவலகத்தை யாழ்ப்பா ணத்தில் திறந்து தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் யாழ். ஆரியகுளம் சந் தியில் முன்னர் இருந்த நாகவிகாரை தலைமைப்பிக்குவை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சந்தித் துப் பேசியுள்ளார். இதன்மூலம் நாகவிகாரை, அதற்கு முன்னுள்ள யாத்திரீகர் விடுதி, சிங்கள மகாவித் தியாலயம் என்பனவற்றை புனர மைக்கும் பணிகள் தலைமைப்பிக்கு வின் நல்லாசியுடன் விரைவில் ஆரம் பிக்கப்படலாம்.

இதற்கிடையில் யாழ் பொதுசன நூல் நிலையத்தைப் புனரமைப்புச் செய்யவென ஐவர் கொண்ட குழுவை அரசாங்கம் நியமித்துள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்த நூல் நிலையத்தை புனரமைத்தே தீருவேன் என பொதுஜன ஐக்கிய முன்னணி ஜனாதிபதி தேர்தலுக்கு சற்று முன்னர் வரிந்து கட்டிக் கொண்டு நின்றது. சந்திரிகா அம்மையாரின் பிரதான போட்டியாளரும் ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசநாயக்க இந்த நூல் நிலையத்தைக் கொளுத்த குண்டர்களுக்கு கொள்ளி எடுத்துக் கொடுத்தார் என்று பிரசாரம் செய்யவே சந்திரிகா அம்மையார் இந்த நூல்நிலையப் புனரமைப்புப் பற்றி பெரிதாகப் பேசிக்கொண்டு திரிந்தார். ஆனால் காமினி கொல்லப்பட்ட குண்டுவெடிப்பின் அதிர்ச்சியில் அதனை மறந்து விட்டார். ஆனால் அதேவேளை அவர் ஏவி விட்ட ஆக்கிரமிப்புப்படை அழித்த ஒவ்வொரு கட்டடத்தினுள்ளும் ஒவ்வொரு பாடசாலையினுள்ளும் ஒவ்வொரு நூல்நிலையத்தினுள்ளும் ஒவ்வொரு வாழ்விடத்தினுள்ளும் - எத்தனை அரும் பெரும் நூல்கள் அழிந்தன என்பது அவருக்குத் தேவையில்லாத விடயம். ஆனால் யாழ் பொதுசன நூல் நிலையத்தைப் புனரமைப்பது தொடர்பாக குழு ஒன்றை உடனடியாக அவர் நியமித்துள்ளார்.

**ஐந்து வருடங்களுக்கு மேல் தமது பூரணக்கட்டுப் பாட்டில் வைத்திருந்த கிழக்கில் போர் முடிந்தால்தான் அபிவிருத்தி என்ற பாட்டுப் பாடும் சிறிலங்கா அரசு யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு போர் முடியாமலேயே நிதி உதவி கோருகிறது.**



இப்பொழுது யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும், போக்குவரத்துச் சேவையில் 28 இலங்கைப்போக்குவரத்துச் சபை வண்டிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அவை இலவசமாகவே சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் அவரின் வானொலியும் தொலைக்காட்சியும் பிரசாரம் செய்து வருகின்றன.

அடுத்த கட்ட நடவடிக்கையாகவே துரித அபிவிருத்தித் திட்டம் ஒன்றை அரசாங்கம ஆரம்பிக்கவுள்ளதாகவும் அதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச அழுத்தத்தின் மத்தியில் செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் யாழ் குடாநாட்டு மக்களுக்கென எடுத்து வந்த அற்ப சொற்ப உணவுப் பொருள்கள் சீரற்ற பங்கீடுகள், கொள்ளைகள், அபகரிப்புகளின் பின்னர் முடிவுறும் நிலைக்கு வந்துள்ளன. ரிவிரெச2 இராணுவ நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒரு மூடை 150 ரூபாவிற்கு விற்கப்பட்ட பருப்பு, கிலோ 150 ரூபாவிற்குச் சென்றுவிட்டது.

பொதுமக்களுக்கு விநியோகிக்க என இருந்த உணவுப்பொருள் களஞ்சியங்களில் உணவுக் கையிருப்பு இல்லை. அதிக விலை கொடுத்தும் வாங்கமுடியாது. உணவுப்பொருள்களுக்காக மக்கள் அலைந்து திரிகின்ற இன்றைய நிலையிலும் பூட்டியிருந்த கடைகளை உடைத்து அங்கிருந்த குளிர்பானங்களையும் பிஸ்கட்டுகளையும் 'புலிகளை வெறுத்துச்' சென்ற மக்களுக்கு விநியோகிக்கும் காட்சியை சிறிலங்காவின் தொலைக் காட்சிகள் உலகிற்கு காண்பித்துக் கொண்டிருக்கின்றன.

கப்பல் கப்பலாக உணவுப் பொருட்கள் யாழ் குடாநாட்டில் போய் குவிவது போலவும் மக்கள் அவற்றை வாங்கி உண்டு மகிழ்ச்சியுடன் இருப்பது போலவும் அரசு பிரச்சாரம் செய்து வருகின்றது. இந்த நிலையில்தான் சிறிலங்கா அரசாங்கம் யாழ் குடாநாட்டின் அபிவிருத்திக்காக பெருமளவு நிதியை உதவி வழங்கும் நாடுகளிடம் கோரியுள்ளது. சிறிலங்காவின் மிக முக்கியமான துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து பெற்ற பெருமளவு நிதியின் ஒரு பகுதியை எவ்வாறு கள்ளக் கணக்குக்காட்டி போருக்குத் திருப்பலாம் என மொசாட்டிடம் கற்றிருக்கும் சிறிலங்கா இனவாதிகளுக்கு யாழ். துரித அபிவிருத்திநிதியை எவ்வாறு அபகரிக்கலாம் என்று எவரும் சொல்லிக் கொடுக்கத்தேவையில்லை.

ஐந்து வருடங்களுக்கு மேல் தமது பூரணக்கட்டுப்பாட்டில் வைத்திருந்த கிழக்கில் போர் முடிந்தால் தான் அபிவிருத்தி என்ற பாட்டுப் பாடும் சிறிலங்கா அரசு யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு போர் முடியாமலேயே நிதி உதவி கோருகிறது. ஆனால் நிதி கிடைத்தால், அதன் பின்னர் போர் முடிந்தாலேயே யாழ் மாவட்ட அபிவிருத்தி எனக் கூறிக் கொண்டு தமிழ் மக்களை அழிக்க இந்த நிதியைப் பயன் படுத்தும் என்பதே உண்மையாகும்.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொழும்பின் பொருளாதாரமும் பாதுகாப்பும்!



"தடைகளை உடைத்து தமிழீழ தேசத்தை உருவாக்கி விடவல்ல சூறாவளி வடக்கிலும் கிழக்கிலும் தான் மையம் கொண்டுள்ளது" என்பதே, சிங்கள ஆட்சியாளர் இன்று வரை தேடிக்கண்டு பிடித்துக் கொண்ட இறுதி உண்மையாகும். இல்லாவிடில் சிங்கள தேசத்தையே விற்றும்; அறுதியாக்கியும்; அடகு வைத்தும்; இத்தனை பெருமளவில் இராணுவப் பூதத்தை அவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் நிலை கொள்ள வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால் உண்மையை அது இருக்குமிடத்தில் என்றுமே அவர்கள் தேடியது கிடையாது. ஏனெனில் ஓர் குறுங்கால எல்லைக்குள் போராட்டத்தை உலகம் முழுவதுமே திரும்பிப் பார்க்கச் செய்துவிட்ட புயல்களெல்லாம் வீசியிருப்பது கொழும்பு நகரில்தான்! என்ற உண்மையோ நெல்லிக்கனி போல அவர்களின் உள்ளங்கைகளிலே தான் குந்தியிருக்கிறது. அதைக் கூட கண்டுபிடிக்கும் வல்லமை பெற்றிராத சந்திரிகாவை பாரிசில் படித்து, புதுடில்லியில் விரிவுரையாளராக இருந்தவரென்று சிலர் துதிபாடி மகிழ்விப்பதையும் காண்கிறோம்.

கொழும்பில் வெடித்த யூலைக் கலவரங்களே தமிழ் இளைஞர்களை ஆயிரமாயிரமாகப் போராட்ட நீரில் நீந்தவைத்தது. வரலாற்றால் அழிக்க முடியாத களங்கத்தை சிங்கள ஆட்சியாளர் மீதும் பூசியது. அண்மைக் காலமாக கொழும்பின் பொருளாதார நிலைகள் மீது நடாத்தப்பட்ட தேர்வு செய்யப்பட்ட தாக்குதல்களால் நாட்டின் பொருளாதாரமே தவிடு பொடியானது. மூழ்கும் கப்பலிலிருந்து தப்பியோடும் எலிகளாக வெளிநாட்டு முதலீட்டாளர்களும்; உல்லாசப் பயணிகளும் கொழும்பை விட்டுத் தூரத் தூர ஓடிக் கொண்டிருக்கிறார்கள். சிறிய படையணிகளை வைத்து எதிரியின் சிரசின் மீது தொடுக்கப்படும் கரந்தடித் தாக்குதல்களால் கொழும்பு நகரின் பாதுகாப்பு, பொருளாதாரம், மானிடவாழ்வு யாவும் சீர்குலைந்து போக நகரமே இருளில் மூழ்கிக் கிடக்கிறது. ஆனால் இருள் அதிகரிக்க, அதிகரிக்க நட்சத்திரங்கள் அதிக பிரகாசம் பெற்றுவிடுவதைப் போல; விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் நாளுக்கு நாள் நாடெங்கும் அடர்ந்தே செல்கிறது.

சந்தோஷமாகவும், சுதந்திரமாகவும் செயற்படுவதற்கு மட்டுமல்ல; தன் வளர்ச்சிக்குத் தேவையான சந்தர்ப்பத்தையும்; ஊக்குவிப்பையும் தருவதாக தன் நாடு இருக்க வேண்டுமென ஒருவன் ஆசை கொள்ளவது இயல்பு. இப்படியொரு எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் கொழும்பு நகர் இருப்பதாக வெளிநாடுகளிலும்; வெண்தாமரை இயக்கமாக உள்நாட்டிலும் கவர்ச்சிப் பிரச்சாரம் செய்து வருகிறது அரசு. ஆனால் அதனுள் மறைந்திருக்கும் நோயை எப்படி மறைப்பது; எவ்வளவு தூரம் தடைகள் தணிக்கைகள் போட்டாலும் பத்திரிகைகளோ கொழும்பின் அவலத்தை இருமி, குக்கி சளியும் வீணமுமாய்த் துப்பியபடியே இருக்கின்றன.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கும் உல்லாசப் பயணிகள் பொலீஸ் நாடொன்றிற்குள் புகுந்து விட்டதைப் போலவே அச்சமடைகிறார்கள். ஒவ்வொரு மரத்திற்கு ஒவ்வொருவராகத் துப்பாக்கிகளை நீட்டியபடியே நிற்கும் பொலிஸ்காரரின் நாட்டுக்குள் எப்படி உற்சாகமாக உல்லாசப் பயணம் நடைபெற முடியும்? உல்லாசப் பயணிகள் இன்மையால் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள் உள்ளூர் பயணிகளே வந்தால் போதுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. உல்லாசப் பயணிகளின் வரவும் மறைப்பெறுமதியாகி விட்டிருப்பதாக கொழும்பு ரேணுகா ஹோட்டல் தொகுதிப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

"யுத்தபீதி வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல கொழும்பில் உள்ளவர்களையும் அச்சுறுத்தத் தொடங்கி விட்டது. இங்கு பாடசாலைப் பிள்ளைகளின் முகத்தில் கூட கலகலப்பைக் காணமுடியவில்லை. வீதிக்குவீதி சோதனைச் சாவடிகள். மக்களின் அன்றாட கருமங்களிலும் பீதியுடனேயே ஈடுபடவேண்டிய நிலை" என 'வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்திரிகையில் லோட்புத்தா என்பவர் எழுதுகிறார்.

நாடு பூராவுமே அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, அரசின் கெடுபிடியான சட்டங்களை மட்டுமல்ல; பொலிசார் தாம் நினைத்த சட்டங்களையெல்லாம் மனம்போல அமுல் செய்கின்றனர் என்று 'பத்திரிகை ஆசிரியர்கள் அமைப்பு' கண்டன அறிக்கை வெளியுட்டுள்ளது. "எமது மூதாதையர் விட்ட தவறுகளாலேயே கொழும்பு நகரில் குண்டுகள் வெடிக்கின்றன" என்று புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா புலம்புகிறார்.

இன்று கொழும்பின் சீரழிந்த பாதுகாப்பு நிலை முழு நாட்டையுமே பாதிக்கிறது. சிவில் நிர்வாகம் அடியோடு குலைந்துபோய் கொழும்பிலும் அதன் சுற்றுபுறங்களிலும் இராணுவ நிர்வாகமொன்று ஏற்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது. நாட்டின் அதிகார மையமான கொழும்பை இந்த நிலையில் வைத்துக்கொண்டு; தீர்வுத்திட்டத்தைச் செயற்படுத்துவதென்றால் இருபத்தைந்து வருடங்கள் சென்றாலும் அதை நடைமுறைப் படுத்த முடியாதென்று 'லங்கதீப' பத்திரிகையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பேட்டி வெளியாகியுள்ளது.

மத்திய வங்கித் தாக்குதல்களினால் *2540* கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் கொலன்னாவ, கொழும்புத்துறைமுகத் தாக்குதல்கள் வேறு. இவைகளையெல்லாம் கொழும்பிற்குள் வைத்துக் கொண்டிருப்பதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது பணத்தையும் நேரத்தையும் வீணாக்கி, சிறீலங்காவில் தமது முதலீடுகளைச் செய்வதில் உற்சாகமிழந்துவிட்டனர். நிலையற்ற சந்தை வாய்ப்பை துணிவுடன் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்குகிறார்கள் என்று முதலீட்டுத் துறை ஆய்வாளர் இயன்ஹட்ல் தெரிவிக்கிறார்.

இப்படி ஈளையும், சளியும், இருமலுமாகக் கிடக்கின்றன கொழும்புப் பத்திரிகைகள். இவைகள் ஒருபுறமிருக்க பொலிசாரும், இராணுவத்தினரும் சிறு சத்தம் வந்தாலே போதும், அத்திசையை நோக்கி துப்பாக்கி விசையைத் தட்டிவிடும் கிலிபிடித்த மனோபாவத்திலிருக்கிறார்கள். ரத்வத்தையினதும், விமானப்படைத் தளபதியினதும் வாகனங்களை வேகமாகக் கடந்து செல்லவும் உரிமையற்ற நிலையில் இருவர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளனர். கொழும்பின் புறநகர்ப் பகுதிகளிலும் இனித்தாக்குதல் நடக்கலாமெனப் புலனாய்வுப் பணியகம் விடுத்துள்ள எச்சரிக்கை எல்லோர் வயிறுகளிலும் புளியைக் கரைத்து விட்டிருக்கிறது. கொழும்பு வரவிருந்த ஜப்பானியர் ஒருவரை அங்கு சாவ தற்கோ போகிறீர்கள் என உறவினர் தடுத்துவிட்டதாக பிரபல பத்திரிகை ஒன்றின் பாதுகாப்பு ஆய்வாளர் சுட்டிக்காட்டியிருப்பது கொழும்பின் அவலம் சர்வதேச நாடுகளின் கதவுகளையும் தட்டத்தொடங்கி விட்டதையே காட்டுகிறது.

**''யுத்தபீதி வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல கொழும்பில் உள்ளவர்களையும் அச்சுறுத்தத் தொடங்கிவிட்டது. இங்கு பாடசாலைப் பிள்ளைகளின் முகத்தில் கூட கலகலப்பைக் காணமுடியவில்லை. வீதிக்குவீதி சோதனைச் சாவடிகள். மக்கள் அன்றாட கருமங்களிலும் பீதியுடனேயே ஈடுபடவேண்டிய நிலை''**

ஆனாலும் சந்திரிகா அரசு உறக்கம் கலையாத போக்கையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது. கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் ஐ.தே.க. அரசு புதைத்த மண்டையோடுகளையும்; தமிழர்களின் வாவிச் சடலங்களையும் தேடியெடுத்து; கண்காட்சிக்கு வைத்து ஆட்சியைக் கைப்பற்றிய சந்திரிகா அரசு தற்போது சகலதையும் மறந்த நிலையில் புதிய குழிகளைத் தோண்டிய படி இருக்கிறது. கொழும்பிலுள்ள தமிழர்கள் அனைவரையுமே புலிகளாகவே அரசு கருதுகிறது. மதகுருக்கள் கூட அதற்கு விதிவிலக்காக அமையவில்லை. கைதாகும் தமிழர்களைத் தடுத்து வைத்து மஹர சிறையில் நடாத்தப்படும் சித்திரவதைகள் தொடர்கதைகளாகவே உள்ளன. அண்மையில் திருமணம் ஆகி ஒரு மாதம் கூட கழிந்திராத படையினர் ஒருவரின் சடலத்தை உறவினர் அநாதைப் பிணமாக வைத்திய சாலையில் கண்டெடுத்துள்ளனர். ஜூலைக் கலவரங்களின் போது தமிழர்களை வீடு தேடி அழிப்பதற்காகப் போடப்பட்ட பெயர்ப் பட்டியலையே தாய் உறுதியாக வைத்து; அதன் நீட்சியான காரியங்களையே சந்திரிகா அரசும் நடத்தி வருவது பேரினவாதத்திற்குப் பாரிய பின்னடைவையே தரவல்லதென்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

யாழ் குடாநாட்டின் மீதான படையெடுப்பு தமிழ் மக்களை அரசின் பக்கம் இழுக்குமென முதலில் கூறப்பட்டது. ஆனால் எதிர் பார்த்ததற்கு மாறாக மக்கள் புலிகளின் பக்கமே தள்ளப்பட்டிருக்கிறார்களென்றும், வடக்கைக் காப்பாற்றுவதற்கான திட்டங்களின்றி இராணுவத்தை அனுப்பி வைத்தது தவறெனவும் பாராளுமன்ற உரைகளில் சிங்களவர் தமது கைகளையே உதறத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், "சீருடைகளைக் களைந்து விட்டு போரில் குதிப்போம்" என்ற சோமததேரர் போன்றவர்களின் காலத்திற்கொவ்வாத கூக்குரல்களும், மண்டையோட்டு விதைப்புகளுமாகத் தொடரும் ஆட்சியானது; அன்னிய முதலீடுகளையும், உல்லாசப் பயணிகளையும் மட்டுமல்ல; சர்வதேச அபிப்பிராயத்தையே சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து தூரத் தள்ளிவிடும். "எப்பொழுதுமே பெரும்பான்மையான மக்கள் சரியானதை விளங்கிக் கொள்வதில்லை!" என்பதே வரலாற்றைக் கடைந்து மனிதன் பெற்றுள்ள பாடமாகும். உலகநாடுகள் தலைநகரங்களை மாற்றி நாடு முழுவதுமே நிர்வாகத்தைப் பரவி வருகின்ற புதிய உலகப் பொருளாதார ஒழுங்கை மறந்து; முட்டையைப்போல கொழும்பிற்குள்ளேயே யாவற்றையும் முடக்கி வைத்து; கொழும்பைப் பாதுகாக்கத் துடிக்கிறது அரசு. ஆனால் முட்டை கல் மீது விழுந்தாலும்; கல் முட்டைமீது விழுந்தாலும் விளைவு ஒன்றுதான். ஏனெனில் தமிழீழப் போர் சுழலும் மையம் வடக்கிலோ கிழக்கிலோ அல்ல; கொழும்பில்தான் என்பதை ஆட்சியாளர் விளங்கிக் கொள்ளும் போது அவர்களின் அதிகாரமோ சுடுகாட்டின் கதவை நெருங்கியிருக்கும். அதுவரை முட்டையைக் காப்பதா? வடக்கே அனுப்பியிருக்கும் இராணுவக் கோழியைக் காப்பதா? என்பதே சந்திரிகா அரசின் போராட்டமாகவும் இருக்கும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரச்சார யுத்தம்!

## அரசு வகுக்கும் வியூகங்களை முறியடிக்க தமிழர் தரப்பு தயாரா?

*- திலிபன்*

“ஸ்ரீலங்கா அரசு பிரச்சார யுத்தத்தில் தீவிர கவனம் செலுத்துகின்றது; தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கு எதிரான கருத்துக்களைச் சர்வதேச அரங்கில் பரப்பி வருகின்றது” என்ற எண்ணம் பலர் மனதிலும் ஏற்படக்கூடிய வகையில் அரசின் செயற்பாடுகள் அமைந்து வருவதை உணரக்கூடிய தாகத்தான் உள்ளது.

அரசு பிரச்சார யுத்தத்தில் எவ்வாறு ஈடுபடுகின்றது? இவ் யுத்தத்தில் தற்போது அரசுக்குள்ள வாய்ப்பான சூழல்கள் எவை? இவ் வாய்ப்பான நிலைமைகள் எவ்வளவு காலம் நீடிக்கக்கூடும்? தமிழீழ விடுதலைப் போரினைப் பலவீனப்படுத்துவதற்கு அரசு கைக்கொள்ள முனையும் நீண்டகாலப் பிரச்சாரத் திட்டம் எத்தகையது? இவைபோன்ற கேள்விகளை எமக்குள் நாமே எழுப்புவதும், இவற்றிற்கான பதில்களைத் தேட முனைவதும் அவசியமாகவுள்ளது.

சற்று அமைதியாக இருந்து சிந்திப்போம். அரசின் பிரச்சாரம் எப்படியான உத்திகளின் அடிப்படையில் அமைந்துள்ளன? இதற்கு ஒரே வரியில் பதில் சொல்வதானால், தவறான தகவலினை சரியான தகவல் போல வெளியிடும் உத்தியின் (Disinformation) அடிப்படையில் அரசு செயற்படுகின்றது. செய்தித் தொடர்பாளர்களுக்கு வட-கிழக்கு மாகாணத்துடன் சுதந்திரமான தொடர்புகளை வைத்திருப்பதனைத் தடுத்து வருகின்றது. இது நேரடியாகவும் மறைமுகவாகவும் இடம்பெறுகின்றது.



இதனை ஒரு உதாரணம் மூலம் நாம் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். மூன்றாம்கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபின் செய்தியாளர்கள் எவரும் வடகிழக்குப் பகுதிக்கு சுதந்திரமாரக அனுமதிக்கப்படவில்லை. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன் பத்திரிகைத் தணிக்கையும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதனால் யுத்தம் தொடர்பான செய்தியினைச் சேகரிக்க முயன்ற செய்தியாளர்களுக்குக் கிடைத்ததெல்லாம் அரசு தரப்புச் செய்திதான். விடுதலைப் புலிகளின் பத்திரிகை அறிக்கை மூலம் செய்திகள் ஓரளவுக்கு வெளிவந்த போதும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய வகையில் அசையும் படங்களாக தொலைக்காட்சியில் இடம்பெறும் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்த கதை கூட காட்சிப் படிமம் பெறமுடியவில்லை. அதேவேளை யுத்தம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்த செய்தியாளர்கள் அரசு வழங்கும் செய்திகளை நுகர்பவர்களாக மாறிவிட்டனர். அரசு தமிழீழ மக்களுக்குத் தாம் இழைக்கும் கொடுமைகளை மூடிமறைத்த வண்ணம் செய்திகளை வழங்கத் தொடங்கியது.

இன்றைய சர்வதேச நிலைமையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு எதிராக அரசுகள் இழைக்கும் கொடுமைகள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய வகையில் வெளிப்படுத்தப்படாது போனால், அப்போராட்டம் தொடர்பான நிலைப்பாட்டை உலகம் உணர்ந்துகொள்ள முடிவது சிரமமானதாக இருக்கும். இது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மீது ஏற்படக்கூடிய சர்வதேச அனுதாபத்தினைக் குறைக்கும். போராட்டத்தில் குதித்துள்ள மக்களின் எதிர்த்தாக்குதல் வடிவங்களைப் புரிந்து கொள்வதனைக் கடினமாக்கும். அண்மையில் லெபனானில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடாத்திய தாக்குதலில் 100-க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட போது இஸ்ரேல் மீது எழுந்த கண்டனம் உயிர்கள் கொல்லப்பட்டமையினால் மட்டும் ஏற்பட்டது அல்ல. அவ்வாறு கொல்லப்பட்ட மக்களது அவலமும் துன்பமும் உலகின் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் காட்சிப்படிமமாக இடம்பெற்றமையினால் ஏற்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சர்வதேச உணர்வுகளின் அடிப்படையிலே அமைந்தவையே. இஸ்ரேல் நடாத்திய தாக்குதலின் விளைவுகள் காட்சிப்படிமம் பெற்றிருக்காவிடின் சர்வதேச உணர்வலைகள் தூண்டடப்பட்டிருக்காது.

இத் தன்மையினை நன்கு புரிந்துகொண்ட சிறீலங்கா அரசு சுதந்திர செய்தி சேகரிப்புக்குக் கடுமையான தடையினை இட்டுவிட்டு தானே ஒரு செய்தி முகவராகிவிட்டது. அரசின் செய்தியினைப் பெற்று செய்தி வெளியிடும் பண்பினைச் செய்தி நிறுவனங்கள் பெற்றுவிடும் போது அவ்வாறு வழங்கப்படும் செய்திகளுக்குள் இருந்தே சிந்திக்கும் பழக்கம் ஒன்று தோன்றி விடுகின்றது. எல்லாத்தரப்புச் செய்திகளையும் தேடி அறிந்துகொள்வதில் ஆர்வமுள்ள ஒரு சிலரைத் தவிர பலர் அரசின் 'செய்திச் சதியினுள்' சிக்கக்கூடிய நிலையும் தோற்றம் பெற்றுவிடுகின்றது.

மேலும், தன்னை சமாதானத்தை விரும்பும் ஒரு ஜனநாயக அரசு என்னும் தோற்றத்தினைத் திட்டமிட்ட வகையில் அரசு தக்கவைத்துக் கொண்டது. இலங்கையின் இனப் பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வும் நாடு முழுவதற்கும் நல்ல ஜனநாயகச் சூழலுமாக தனது காலத்தில் சிறீலங்காவில் புதிய ஒரு சகாப்தம் பிறக்கும் என்ற நம்பிக்கையினைச் சந்திரிகா ஏற்படுத்தியிருந்தார். "தான் இன்று நடாத்தும் யுத்தம் சமாதானத்திற்கானது; எனவே, அதனைக் கண்டும் காணாது இருந்து தனக்கு சிறிது காலம் தாருங்கள்; அதற்குள் சமாதானத்தை ஏற்படுத்தி விடுவேன்" என்று கூறி தனது நடவடிக்கைகளுக்கு ஒருவித நியாயத்தைப் பெறவும் முயற்சித்து வருகின்றார். சிறிலங்கா அரச அமைப்புகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதில் தாம் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருப்பதாக தன்னைச் சந்திக்கும் சர்வதேசப் பிரதிநிதிகளிடம் தெரிவித்து அனுதாபத்தினைப் பெற முயற்சித்து வருகின்றார். தமது நாடுகளிலுள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதிலும், புதிதாய் அகதிகளாகத் தமிழர்கள் வருவதைத் தடுப்பதிலும் அக்கறை கொண்டிருந்த மேற்குலக நாடுகளுக்கு எப்படியாயினும் இனப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வருவதில் ஈடுபாடு இருக்கவே செய்யும். இதனால் சந்திரிகாவிற்கு ஒரு குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தினை வழங்கும் முகமாக மௌனம் காக்க அவை முடிவு செய்திருக்கக் கூடும். இதனால்தானோ என்னவோ அரசின் செய்தித் தணிக்கையும் அதற்குள் புதைத்துக் கொண்ட கொடூரங்களும் பரவலான சர்வதேச கண்டனங்களைப் பெறவில்லை. ஆனால் சந்திரிகா அரசுக்குள்ள வாய்ப்பான சூழ்நிலைகள் நீண்டகாலத்திற்கு நிலைக்கப்போவதில்லை. குறுங் காலத்தினுள் தமிழ் மக்களின் விடுதலைப் போரினை முடிவுக்குக் கொண்டுவருவதோ இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வினைக் கண்டு விடுவதோ சாத்தியமாகிவிடப் போவதில்லை. மேலும் சந்திரிகாவின் இராணுவ நடவடிக்கைகள் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண முடியாத அளவுக்கு நிலைமையினை மோசமாக்கிக் கொண்டு செல்கின்றது. இதைவிட தமது வாழ்க்கைப் பிரச்சினை காரணமாகத் தென்னிலங்கையில் தொழிற்சங்கங்களும், மக்கள் அமைப்புக்களும் போராட்டங்களில் குதிக்கும் போது அரசு ஜனநாயக அணுகுமுறைக்குப் பதிலாக இரும்புக்கரம் கொண்டு அவற்றை நசுக்க முயல்கின்றது. இத்தகையதொரு சூழலில் சமாதானத்தினையும் ஜனநாயகத்தினையும் விரும்பும் அரசு என தான் உருவாக்கிய மாயத்தோற்றத்தினை தானே மெல்ல மெல்ல உடைத்துக் கொண்டிருக்கிறது அரசு. இந்நிலை மேலும் விரிவடைய அரசின் பிரச்சார யுத்தம் வலுவிழக்கத் தொடங்கிவிடும். அரசும் அதை நன்கு உணர்ந்துள்ளது போலும் தென்படுகின்றது. இதனால் விடுதலைப் புலிகள் எனும் அமைப்பு சிறீலங்காவிற்கு உரிய பிரச்சனை மட்டுமல்ல; உலகப் பொதுப் பிரச்சனையின் ஒரு பகுதி என்ற தோற்றத்தினை ஏற்படுத்துவதில் கூடுதலான கவனத்தினைச் செலுத்தி வருகின்றது. சிறீலங்காவிற்குள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வினைக் காணமுடியாத தனது பலவீனத்தை மறைப்பதற்கு, 'சர்வதேசப் பயங்கரவாதத்தினை' ஒழிப்பதற்கான உலகளாவிய போராட்டத்தில் உலக நாடுகளுக்கு விடுதலைப் புலிகளும் எதிரி என்ற எண்ணத்தினை ஏற்படுத்த முயல்கின்றது. இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரத் தளத்தில் அரசின் நீண்டகாலத்திட்டம் இதுதான். விடுதலைப் புலிகளின் போராட்டத்தினை தான் மட்டும் எதிர்கொள்ளாமல் உலகளாவிய நாடுகள் மத்தியில், உலகப் பிரச்சனையில் ஒன்றாக விடுதலைப்புலிகளைச் சித்தரித்து அனைத்து நாடுகளும் இணைந்து விடுதலைப் புலிகளை எதிர்க்கக் கூடிய ஒரு சூழலை உருவாக்கல். அதனை நோக்காகக் கொண்டும் அரசு தனது பிரச்சாரத்திற்கான வியூகங்களை வகுத்து வருகின்றது.

அரசின் இத்தகைய பிரச்சார யுத்தத்தினை வெற்றி கொள்வதற்கான புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் படையணியாக செயற்பட வேண்டிய தேவை புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு உறுதியாக உள்ளது. இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள நாம் என்ன செய்யப்போகின்றோம்?



அமெரிக்கா




தென்னாபிரிக்கா

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத் தலைவரிடம் உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு



இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் கடந்த நூறு ஆண்டுகளுக்குப் பின் வரலாறு காணாத மிகப் பெரும் மழையுடன் கூடிய புயல் வீசியதாக அண்மையச் செய்திகள் கூறின. வானிலை மாற்றம் கடந்த நூறு ஆண்டுகளின் பின் பெருமாற்றம் கண்டது போல், கடந்த ஐந்து வருட அ.இ.அ.தி.மு.க ஆட்சியின்பின் நடைபெற்ற தேர்தலிலும் கலைஞர் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமில்லாதவாறு மாபெரும் வெற்றியைப் பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது.

எம். ஜி. ஆர் ஆரம்பித்துவைத்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், ஜெயலிதா தலைமையில் கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்தாலும் அக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் சந்தித்த மிகப்பெரும் தோல்வியை இத் தேர்தல் கொடுத்துள்ளது.

இவை எல்லாவற்றையும் விட மிக மிக முக்கியமானது தி.மு.கவும் அதன் கூட்டுக்கட்சியான தமிழ் மாநிலக் காங்கிரஸ் (மூப்பனார்) கட்சிக்கும் பாராளுமன்றத்தில் 37 ஆசனங்கள் கிடைத்துள்ளமைதான். இதன் மூலம் இந்திய மத்திய அரசு எது எனத் தீர்மானிப்பதில் கலைஞர் கருணாநிதிக்கு பெரும் பங்கு இருந்தது என்பது தான்.

இந்தியாவின் தற்போதைய நிலையில் தேசியக் கட்சிகள் எனக் கூறப்படும் கட்சிகள் எதுவுமே மத்தியில் ஆட்சியமைக்கும் தனிப்பெரும் பான்மை பலத்தைப் பெறமுடியாத நிலையில், மாநில அளவில் பெரும் வெற்றிபெற்ற மாநிலக்கட்சிகளின் தயவுடனேயே மத்திய அரசு அமைவதும், அதை தொடர்ந்தும் பதவியில் தக்கவைப்பதும் இம் மாநிலக் கட்சிகளின் ஆதரவைப் பொறுத்தே என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

கலைஞர் கருணாநிதி விரும்பியிருந்தால் சில நாட்கள் மட்டுமே ஆட்சியிலிருந்த பாரதிய ஜனதாக் கட்சியை தொடர்ந்தும் ஆட்சியில் அமர்த்தியிருக்கலாம். ஆனால் பாரதிய ஜனதாக் கட்சி மதசார்புடைய வகுப்புவாதக் கட்சி என்பதன் காரணத்தாலேயே கலைஞர் கருணாநிதி அதற்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டார் என்பதும் கவனிக்கத்தக்கது.

"இலங்கையில் சிங்கள இராணுவத்தால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை எங்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அங்கு தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை நிறுத்தப் படவேண்டும். அப்பாவித் தமிழர்கள் இராணுவத்தால் கொன்று குவிக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என கடந்த 13.05.96 அன்று தமிழகத்தின் முதல்வராக நான்காவது தடவையாக பதவியேற்ற கலைஞர் கருணாநிதி, பதவியேற்றபின் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்திருந்தார். அதேவேளை, மத்தியில் புதிய ஆட்சி அமைந்த பின், அவர்களுடன் கலந்து பேசி தமிழினப்படுகொலையைத் தடுத்து நிறுத்தி உண்மையான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சி எடுப்போம் எனவும் அவர் அன்றைய தினம் மேலும் தெரிவித்திருந்தார். ஆனால் அதன் பின்னரே, இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் இத் தடை நீடிப்பு தொடர்பாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் எதிர்வினை என்ன என்பதே உலகெங்கும் உள்ள தமிழ் மக்களின் கேள்வியாக உள்ளது.

இதேவேளை முன்னைய காலங்களை ஒரு முறை திரும்பிப்பார்ப்போமானால்: விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற காரணம் கூறி கலைஞரின் ஆட்சி ஒரு தடவை பறிக்கப்பட்ட அதேகால கட்டத்தில், போரில் அங்கவீனம் அடைந்து மருத்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதவிக்காக தமிழகத்தில் தங்கியிருந்த போராளிகளை தமிழக அரசு கைதுசெய்து சிறையில் அடைத்தது மான இருவேறு முரண்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. எனினும் ஈழத்தில் நடைபெறுகின்ற இனப் படுகொலைக்கு எதிராக கலைஞர் எப்போதும் தனது எதிர்ப்பைக் காட்டியே வந்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழகத்தில் தேர்தல் பரபரப்புகளைகட்டியிருந்த போது, தமிழீழத்தில் வலிகாமம் மீது பாரிய படையெடுப்பொன்றை சிறிலங்கா அரசு மேற்கொண்டிருந்தது.

இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். சந்திரிகாவின் இராணுவமோ தமிழீழ வான்பரப்பெங்கும் பீரங்கிகளாலும் விமானங்களாலும் குண்டு மழை பொழிந்து சொத்துக்களையும் மனித உயிர்களையும் நாசம் செய்து எக்காளமிட்டிருந்தது. அதே நேரம் தமிழகத்தில் அனைத்துக் கட்சியினரும் தமிழக மக்களை நேரடியயாகச் சந்தித்துக் கொண்டிருந்தனர். ஆனால் பெரிய கட்சிகள் யாவும் தமிழீழத்தில் நடந்து கொண்டிருந்த மிகப் பெரும் இனவழிப்பு நடவடிக்கை குறித்து மௌனமாகவே இருந்தன. இருந்தும் தேர்தலில் அமோக வெற்றியடைந்து பதவியேற்ற பின் 'இனப்படுகொலையைத் தமிழகம் பொறுத்துக்கொள்ளாது' எனக் கலைஞர் கூறியதன் மூலம் தமிழீழ மக்கள் படுகின்ற இன்னல்களுக்கும், அதைக்கடக்க அவர்கள் நடத்தும் போராட்டத்திற்கும் தமிழக மக்கள் தமது தார்மீக ஆதரவை எப்போதும் தருவார்கள் என்ற நம்பிக்கையை உண்மையாக்கியுள்ளார்.

கடந்தகால ஆட்சியைப் போல் அன்றி தமிழீழ மக்கள் மீது ஒரு அனுதாபமான பார்வையை கலைஞர் கொண்டுள்ளார். உதாரணமாக, தமிழகத்தில் அகதியாய் உள்ள தமிழீழ மாணவர்கள் மேற்படிப்பை மேற்கொள்ள போடப்பட்ட தடையை அவர் நீக்கியுள்ளதைக் கூறலாம். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அகதியான தமிழீழ மாணவர்கள் தமிழகத்தில் மேற்படிப்பை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'மத்திய அரசுடன் இணைந்து ஒரு அரசியல் தீர்வைக்காண முயல்வோம்' என கலைஞர் அறிவித்த பின்னரே விடுதலைப்புலிகள் மீதான தடைநீடிப்பு நிகழ்ந்துள்ளது.



தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாகக் காட்டி தடையை நீடிப்பதன் மூலம் தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முடியாது என்பது கலைஞர் அறியாததல்ல. இந்நிலையில், தமிழக மக்களின் அமோக ஆதரவினைப் பெற்றுள்ள கலைஞர் கருணாநிதியின் செயற்பாடுகள் எப்படி அமையப் போகிறதென்பதையே பலரும் எதிர் பார்க்கின்றனர். தமிழகத்தை ஒரு நல்ல தலைவனாக இருந்து வழி நடத்தி மேம்படச் செய்வார் என பெரும்பான்மைத் தமிழக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கலைஞர்; இன்று தனது 37 பாராளுமன்ற ஆவணங்கள் மூலம் தேவகௌடா

## விடுதலைப்புலிகள் மீது தடையா?



விடுதலைப்புலிகள் மீதுள்ள தடையை மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்திய அரசு நீடித்துள்ளதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்தியாவின் பாதுகாப்புக்கோ, ஒருமைப்பாட்டுக்கோ ஊறுவிளைவிக்கும் வகையில் விடுதலைப்புலிகள் ஒருபோதும் செயல்படவில்லை. இந்தியாவில் அவர்கள் செயல் படவும் இல்லை. ராஜீவ் கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டு இன்னமும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படாத நிலைமையில் விதிக்கப்பட்ட ஒரு தலைப்பட்சமான இந்தத் தடை மேலும் நீடிக்கப்படுவது அநீதியானது. ஜெயின் கமிஷன் விசாரணையில் பல புதிய அதிர்ச்சி தரும் உண்மைகள் வெளியாகி ராஜீவ் கொலை விசாரணை சரிவர நடத்தப்படவில்லை என்பது அம்பலமாகி விட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது பழிசுமத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்பது வெளியாகி விட்டது.

மேலும் புலிகள் மீது போடப்பட்டுள்ள பல வழக்குகளில் அவர்கள் குற்றமற்றவர்கள் என நீதிமன்றங்கள் விடுதலை செய்து விட்டன. எந்த ஒரு வழக்கிலும் அவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் நாட்டில் அரசியல் ஆதாயம் தேடுவதற்காகவும், இலங்கை அரசை திருப்திப்படுவதற்காகவும், பழைய காங்கிரசு அரசு புலிகள் இயக்கத்திற்குத் தடைவிதித்தது. புலிகள் இயக்கத்துடன் இரகசியத் தொடர்பு என்ற பழி சுமத்தப்பட்டு இந்திய தி.மு.க. அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழக மக்கள் தீர்ப்பளித்து காங்கிரசை படுதோல்வி அடையச் செய்துள்ளனர். இந்தப் பாடத்தை உணராமல் பழைய காங்கிரசு செய்த தவறை புதிய ஐக்கிய முன்னணி அரசு தொடருவது நல்ல அறிகுறி அல்ல என்பதை புதிய பிரதமர் தேவகௌடா உணர்ந்து புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க முன்வரவேண்டும் என வற்புறுத்துகிறேன்.

**- தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தலைமையிலான அரசுக்கு ஒரு குறிப்பிடத்தக்க ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கும் கலைஞர்; 'முன்னோக்கிப்பாய்தல்' என்னும் இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட போது தனது கட்சி நிதியிலிருந்து பல லட்ச ரூபாவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதாக அறிவித்த கலைஞர் - இப்படியாக பல வலிமையான நல்ல பக்கங்களையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ள கலைஞர் கருணாநிதி- தமிழீழ மக்கள் மீது சந்திரிகா தலைமையிலான இராணுவத்தினர் கட்டவிழ்த்து விட்டுள்ள இனப்படுகொலையை தடுத்து நிறுத்த உரத்துக் குரல் கொடுப்பதோடு, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமது தார்மீக ஆதரவையும் வழங்கவேண்டும் என்பதே உலகெங்கும் வாழும் தமிழர்களது எதிர்பார்ப்பு. உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பை கலைஞர் நிறைவேற்றுவாரா?

— ஆதிரையன்



**11-03-96** அன்று சென்னையில் நடைபெற்ற "ஈழத்தமிழர் படுகொலை கண்டன மாநாட்டில்" தமிழீழம் அமையும் வரை சட்டை அணிவதில்லை என சபதம் செய்த திரு. ச. உண்மைவிரும்பி திரு. பழ. நெடுமாறன் அருகே வீற்றிருக்கிறார்.

www.tamilarangam.net

# ஒருவருடப் போர்

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த 1983ம் ஆண்டில் இருந்து மூன்றாம் ஈழப்போர் தொடங்கும் (1995 ஏப்ரல்) வரையான பன்னிரண்டு வருடப் போரில், ஆறாயிரம் படையினர் பலியானதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

ஆனால் கடந்த ஒரு வடருப் போரில் மட்டும் இது வரை 2026 படையினர் பலியாகி விட்டதாக பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ அறிக்கை கூறியுள்ளது. (படையினரின் இழப்புக்கள் இதைவிட அதிகம் என நம்பப்படுகிறது)

இதேவேளை, முன்னைய பன்னிரண்டு வருடக் கடற்போரில் சிங்களப் படையின் 15 கடற் போர்க்கலங்களை புலிகள் மூழ்கடித்துள்ளனர். ஆனால் கடந்த ஒரு வருடப் போரில் மட்டும் ஒன்பது கடற் போர்க்கலங்களை புலிகள் மூழ்கடித்து விட்டனர். இவற்றில் பெரும்பாலனவை மிகவும் சக்தி வாய்ந்த சண்டைக்கலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், முன்னைய 12 வருடப் போரில் மட்டும் 8 விமானங்களைச் சிங்கள வான்படை இழந்துள்ளது (சீனன்குடா வெடி விபத்தில் சேதமடைந்த விமானங்கள் இதில் சேர்க்கப்படவில்லை) ஆனால், கடந்த ஒரு வருடப் போரில் மட்டும் 7 வான்கலங்களை அரசின் வான்படை இழந்து விட்டது.

தமிழர் போராட்டத்திற்குச் சார்பாகக் கடலிலும்- வானிலும் கடந்த ஒரு வருடப் போர் ஏற்படுத்திய தாக்கங்கள், குறைத்து மதிப்பிடமுடியாதவை.

அதேவேளை, ஆள் இழப்பிலும் - ஆயுதத் தளபாட இழப்புக்களிலும் கடந்த ஒரு வருடப்போர், சிங்களப் படைத்துறைக்குப் பேரழிவுகளை ஏற்படுத்திய காலப்பகுதியாகவே அமைந்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க - போரின் இலக்காக சிங்கள அரசின் பொருளாதாரம் குறிவைக்கப்பட்டிருந்ததில்- சந்திரிகா அரசாங்கம் சந்தித்த பொருளாதார நாசங்களும் கடந்த ஒரு வருடப் போரின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

இதற்கு முன்னர் சிங்களப்படை பேரிழப்பைச் சந்தித்த தனியொரு ஆண்டாக, 1992-ம் ஆண்டு இருந்துள்ளது. அந்த வருடத்தில் 1400 படையினர் பலியாகியுள்ளனர். 20,000 வரையான படையினர் படையை விட்டோடிய ஒரு காலப்பகுதியாக 1992 விளங்கியதையும் சுட்டிக் காட்டலாம். ஆனால், 1992-ல் சிங்களப்படை சந்தித்த உயிரிழப்புக்களுடன், 1995 ஏப்ரலில் இருந்து 1996 ஏப்ரல் வரையான ஒரு வருட காலத்தில் படையினர் சந்தித்த உயிரிழப்புக்களை ஒப்பிடும்போது, 50வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதைக் காணமுடியும். இந்த வகையில், சிங்களப் படைத்துறை இழந்த படைக்கலங்களையும் - அவற்றின் பணப்பெறுமதியையும் எடுத்து நோக்கும்போது, கடந்த ஓராண்டுப் போர் சிங்கள இராணுவ இயந்திரத்திற்குப் பலத்த நாசத்தை ஏற்படுத்தி உள்ளதை, எவரும் மறுக்கமுடியாது.

கடந்த ஓராண்டுப் போரில் சிங்களப்படை ஈட்டிய சாதனையாக குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு கொள்ளப்படக்கூடும். குடாநாட்டு இழப்பு போராட்டத்திற்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவு என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால், நிலங்கள் மீதான கட்டுப்பாட்டை ஒரு விடுதலை இயக்கம் இழப்பதும், பின்னர் மீட்பதும் போராட்ட வரலாற்றில் நடைபெறும் ஒரு பொது இயல்பு என்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இரண்டாம் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில், கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி நிலம் சிங்களப்படையின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்தது. ஆனால், கடந்த ஓராண்டுப் போரில் அவற்றில் பெரும்பகுதி நிலம், புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. அது போல, கடந்த 11 வருட காலமாகப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த யாழ் குடாநாட்டை, இப்போது படையினர் கைப்பற்றியுள்ளனர். தமிழர் நிலங்களை விடுவித்து - பாதுகாத்தல் என்பது, மரபுவழிப் போர்முறையில் புலிகள் இயக்கம் பெறும் வளர்ச்சிகளைப் பொறுத்தது. மரபுவழிப் போர்முறைக்கு ஆட்பலமும் - அதற்கே உரித்தான ஆயுத வகைகளும் தேவை. இந்த இரண்டும் புலிகள் இயக்கத்திடம் போதுமான அளவிற்கு வந்துசேரும் போது எமது நிலங்கள் விடுவிக்கப்படும் என்பதே, போராட்ட யதார்த்தமாகும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்தமிழீழத்தில் இராணுவ வெறியாட்டம் பெண்கள் மீது பாலியல் வன்முறைகள்



அண்மையில் கிளிவெட்டிப் பகுதியில் குமரபுரத்தில் நடைபெற்ற சிறீலங்கா இராணுவத்தின் படுகொலைச் சம்பவமும், 10.03.96 மயிலங்குறிச்சியில் ஆறு தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட கோர நிகழ்வும், மீண்டும் பெண்கள் மீதான சிறீலங்கா இராணுவத்தின் மிருகத்தனமான வன்முறைகள் தலைதூக்கியிள்ளதை வெளிக்காட்டுகின்றன.

தென்தமீழீழத்தில் அண்மைக் காலங்களில் தொடர்ந்தும் இராணுவத்தின் வெறியாட்டம் மிக மோசமாக நடைபெற்று வருகின்றது. இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் இரவையும் பகலையும் அச்சப்பட்டே கழிக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். அந்த மக்கள் வீடு வாசல்களை இழப்பதோடு மட்டுமன்றி அவர்களது உயிர்கள் கூடப் பெறுமதியற்றதாகி, துயர வாழ்வைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் பெண்கள் என்ற வகையில் அங்கு வாழ்கின்ற தமிழ்ப் பெண்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. பெண்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இராணுவ வன்முறைகளாற் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கணவனை இழந்த மனைவியர் ஒருபுறம், பெற்றெடுத்த பிள்ளைகளை இழந்த தாய்மார்கள் இன்னொரு புறம், எல்லாவற்றுக்கும் மேலாக பெண் என்ற வகையில் அவன் இராணுவத்தின் கோரவெறியால் அனுபவிக்கும் பாலியல் வன்முறைகளும் துயரங்களும் இரத்தக் கண்ணீரை வரவழைப்பன. அச்சப்பட்ட, துயரம் சுமந்த வாழ்வு அங்குள்ள ஒவ்வொரு பெண்ணின் தலையிலும் எழுதிவைக்கப்பட்டுள்ளது.

12.02.1996 அன்று நடைபெற்ற குமரபுரப் படுகொலை சிறீலங்கா இராணுவத்தின் கோர இனவெறியைக் காட்டியிருக்கின்றது. எந்த நாடுகளிலும் காணப்படாத மனித உரிமை மீறலாக அமைந்தது. இந்த சம்பவத்தின் போது முப்பத்தாறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதோடு இருபத்தாறு பேர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

சம்பவதினம் இப் படுகொலை நிகழ்வில் அழிக்கப்பட்ட பெண்களின் நிலை சொல்லும் தரமன்று. ஒரு நிறைமாதக் கர்ப்பிணி வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டார். வெட்டப்பட்ட நிலையிலும் சூட்டுக் காயங்களுடனும் சிசு வெளியேறிய நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

மேலும் இரு பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்கள் சம்புக்காட்டினுள் சம்புப்புற்களினால் மூடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னரும் தொடர்ந்தும் தென்தமிழீழத்தில் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசங்களில் பெண்கள் மீதான இராணுவ வன்முறைகள் தொடர்கிறது.

அண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டக்களப்பிலுள்ள மயிலங்குறிச்சியில் திருமணமான ஆறு தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினால் மிகமோசமான பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டனர்.

மீண்டும் மிகமோசமாக தொடங்கியுள்ள இந்த இராணுவ வன்முறைகளினால் பெண்கள் மிகுந்த துயர வாழ்க்கையை வாழுகிறார்கள். மானிட உணர்வுகளுக்கும் வாழ்க்கைக்கும் அங்கு பெறுமதியில்லாது போய்விட்டது. அன்றாடம் தமது தேவைகளுக்காக வெளியில் வருவதற்கும் அச்சப்படும் நிலையில் அங்கு பெண்கள் வாழ்கின்றனர்.

இந்த இராணுவ வன்முறைகளால் அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணின் வாழ்வும் நாளை விடியுமா என்ற அச்சம் நிறைந்த, துன்பம் நிறைந்த எதிர்பார்ப்போடு கழிகிறது.

நீண்டகாலமாக நடைபெற்று வரும் இக்கொடுமையான வாழ்விலிருந்து எப்போது மீளப்போகிறோம் என்பதற்கான விடை, இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணின் கைகளிலும் இருக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட எமது நிலத்திலிருந்து எதிரி வெளியேறாத வரை எமது வாழ்வில் நிம்மதியும் சுதந்திரமும் இல்லை. அதற்காக எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

நன்றி: 'சுதந்திரப் பறவைகள்' (பங்குனி 1996)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறுபடாத உறவு...?




"இந்த நாயள் இப்ப எண்டாலும் புத்தி தெளிஞ்சு... உது அடாத்தான செயல்... தமிழ் சனங்களைக் கொல்லுறியள்... பிடிக்கிறியள் சுடுகிறியள் எண்டு சொல்லி சந்திரிகாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேணாமோ..? சரி அதுதான் இருக்கட்டும்... கொழும்பில உள்ள உந்த வெள்ளைக்காரரை போய்ப்போய் சந்திக்கிறாங்கள்... எங்கட சனங்கள் சாகிறது; சிங்கள அரசாங்கம் செய்யிறதுகளை எடுத்துச் சொல்லவேணாமோ...?"

ஐரோப்பிய நாடொன்றில், சிங்கள அரசின் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட மாபெரும் எழுச்சிப் பேரணியொன்றில், தள்ளாடும் வயதிலும் கலந்துகொண்ட மூதாட்டி ஒருவர் இப்படி ஆதங்கப்பட்டார். கொழும்பில் இருந்து கொண்டு அரசியல் நடத்துகின்ற தமிழ்க் குழுக்கள் குறித்தே அவர் இப்படி தனது ஆத்திரத்தை வார்த்தைகளில் கொட்டினார்.

பொதுவாக இந்த இடத்தில் ஒன்றை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். கொழும்பிலே இருக்கின்ற தமிழ்க் குழுக்கள் விளக்கம் குறைந்த நிலையில் அரச ஆதரவுப் போக்கை கடைப்பிடிக்கின்றன என்றோ, புதிய சந்திரிகா அரசு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் என்று நம்பிக்கைகொண்டுள்ளன என்றோ தப்புக்கணக்கு போடமுடியாது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து, இத்தகு நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், காத்திருப்புகள், ஏமாற்றங்கள் எல்லாம் ஒரே சுழற்சியில் சீரான முறையில் நடந்தேறி வந்திருக்கின்றன.

இந்த வரலாற்றுப் படிப்பினையின் வெளிப்பாடாகவே ஆயுதம் தழுவிய எமது விடுதலைப் போராட்டம் தோற்றம் கொண்டது.

பௌத்த சிங்கள மேலாத்திக்கத்திற்கு எதிரான தமிழ் மக்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தோடு, ஒருகட்டத்தில் தம்மையும் இனங்காட்டிக்கொண்ட தமிழ் குழுக்கள் இன்று எதிர்த்திசையில் பயணம் செய்வதைக் காண்கின்றோம்.

வழிவழிவந்த சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் போக்கை நன்றாகப் புரிந்துகொண்டவர்கள்தான் இந்தத் தமிழ்க் குழுக்கள். இவற்றையெல்லாம் நன்றாகத் தெரிந்து புரிந்துகொண்ட பின்னரும் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்திருக்கின்றார்கள். தமிழ் மக்களிற்கு எதிரான தான்தோன்றித்தனமான, மனிதவிரோதமான, கண்மூடித்தனமான கடும் போக்கிற்கு உலக ஆதரவைப் பெற்றுக்கொடுக்கின்றவர்களாகவே இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். யாழ் குடாநாடு சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிப்புக்கு உள்ளானபோது, சந்திரிகா அரசை விட ஆனந்தப்பட்டது இக்குழுவினராகத்தான் இருக்கமுடியும்.

யாழ். குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், குடாநாட்டின் பெரும்பகுதியை இராணுவம் கைப்பற்றிக் கொண்டபோதும் சந்திரிகா அரசு ஒருபக்கத்தில் சந்தோசப்பட்டாலும், மறுபக்கத்தில் சந்தோஷத்தைப் பாதியாக்கும் விதத்தில் பிடித்த பகுதியை எப்படிப் பாதுகாப்பது என்பது குறித்து சிந்தித்திருக்கும் என்பது வெளிப்படையானது. ஆனால், இந்தத் தமிழ்க் குழுக்கள் குடாநாட்டு ஆக்கிரமிப்பை விருப்புடன் வரவேற்றன. சிங்கள இராணுவத்தின் வெற்றியில் உள்ளூர மகிழ்ச்சிகொண்டன.

அவர்களின் எதிர்காலக் கனவிற்கான களம் திறக்கப்பட்டுவிட்டதாகவே எண்ணிக்கொண்டனர். இதில் சிங்கள இனவெறிப் படை எமது மண்ணை தனது நாசகரம் கொண்டு சிதைத்ததோ, சின்னாபின்னப்படுத்தியதோ அவர்களின் குறுமதியில் உறைக்கவில்லை. குழந்தைகள், பெண்கள், முதியோர், ஆண்கள் என்று கொன்றொழித்த போதெல்லாம் இவர்களால் சுகமாக செய்தி கேட்க முடிந்திருக்கின்றது.

அவர்கள் தமக்குள் வளர்த்துக் கொண்ட கனவு பரந்தது. குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிக் கொண்டால் இராணுவத்தின் பாதுகாப்பில், தமது பதவி சுகத்தை அனுபவிக்கமுடியும் என்று கனவு கண்டார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்களே என்று கூறிக் கொள்ள இராணுவ ஆக்கிரமிப்பை ஆதரித்தார்கள்.

இன்று, இராணுவம் குடாநாட்டை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ளது. குடாநாட்டுக்குச் சென்று, அரசியல் நடத்த தமிழ்க் குழுக்கள் அரசாங்கத்தின் அனுமதி கேட்டுக் காத்திருக்கின்றன. ஆனால், இவர்களின் கோரிக்கைக்கு சந்திரிகா அளித்த பதில் விசித்திரமானது; ஆனாலும் எதிர்பார்க்கப்பட்டது. விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டுள்ளார்கள் என்று சிறீலங்கா அரசு தப்பாகத் தன்னும் கருதும் நிலையில், தமிழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் கருத்துக்குரியவர்களாகக் கணிக்கப்படமாட்டார்கள் என்பது வெளிப்படையானது. தமிழ் மக்களின் அபிலாசைகள் புறக்கணிக்கப்படும் என்பதும் நிதர்சனமானது. அதேபோன்று அரசின் இனவிரோதக் கொள்கைக்கு பலவழிகளிலும் பலம் சேர்ப்பவர்களாக இருந்த கொழும்புக் குழுவினருக்கும், அரசு தனது இலக்கை அண்மித்துவிட்டதாகக் கருதும் நிலையில் புழுக்களைப்போலவே புறக்கணிக்கப்படுவர் என்பதும் வெளிப்படையானது.

இதை எதிர்வுகூறும் விதமாக, "உங்களின் வருகையை வடக்கில் உள்ள மக்கள் விரும்பவில்லை" என்று கொழும்புக் குழுக்களுக்கு சந்திரிகா பதில் அமைகிறது.

சில பத்துக்கள், சில நூறுகள் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற தமிழ்க் குழுவினரை, ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என, விளம்பரப்படுத்தி, தனக்கு வலுசேர்க்க பயன்படுத்திக்கொண்டவரே ஜனாதிபதி சந்திரிகா.

தமிழ் மக்கள் தமிழ்க் குழுக்களின் வரவை எதிர்க்கின்றார்கள் என்பதும், அவர்களை முற்றாக வெறுக்கின்றார்கள் என்பதும் வெளிப்படையான உண்மை. ஆனால், ஒரு மோசமான இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொண்டு, மக்களைக் கொன்று குற்றுயிராக்கி, மனித நேயமற்ற வெறித்தனமான செயற்பாடுகளால் உயிர்காக்க ஓடிய மக்களையும் வளைத்துப் பிடித்து கைதிகளாக வைத்துக்கொண்டுள்ள சந்திரிகா இதனைச் சொல்வதே விசித்திரமானதும் வேதனைக்குரியதுமாகும்.

தனது அரசியல் திட்டத்தை தமிழ் மக்களிடையே பிரச்சாரப்படுத்த முடியாத கோளைகள் என, தமிழ்க் குழுக்களை சந்திரிகா சாடி வருகின்ற அதேவேளை, சிங்களப் பெரும்பான்மையினரே ஆளுக்கொரு பக்கம் இழுத்து, இன்னமும் இழுபறியில் இருக்கும் முடிவுபெறப்படாத ஒரு விடயத்தை, அதுவும் தாங்களே ஏற்றுக்கொள்ளமுடியாத திட்டத்தை தமிழ் மக்களிடம் எப்படிக் காவிச் செல்வோம் எனத் தமிழ்க் குழுக்களும் கூறிவருகின்றன.

சிறீலங்கா அரசின் போக்கைப் புரிந்துகொண்டு, தமிழ்க் குழுக்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போரிற்கு இனியாவது உதவி செய்வார்களா என்ற கேள்வி பொதுவாக சிலரிடமும்; இனியாவது விடுதலை விரோதச் செயற்பாடுகளில் இறங்காமல் இருப்பார்களா எனப் பலரிடமும் எழுவது இயல்பானதே.

தற்போதைய சூழ்நிலையில், சற்று கருத்து முரண்பாடுகளை தம்மிடையே கொண்டுள்ளன போல் காட்சியளிக்கும் அரசும் தமிழ்க் குழுக்களும், தமக்கிடையே சிக்கல்கள் இல்லாமல் சமரசம் செய்துகொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கா.

தமிழ்க் குழுக்களின் உதவியும் ஆதரவும் நிரந்தரமாகத் தேவைப்படும் என சந்திரிகா அரசும், அரசின் ஆதரவும் அரவணைப்பும் பாதுகாப்பும் தமக்கு இன்றியமையாத தேவை எனத் தமிழக்குழுக்களும் சந்தேகமின்றி உணர்ந்துள்ள நிலையில், இத்தகு முரண்பாட்டுத் தோற்றங்களை ஒருவித ஊடல் நிலையுடன் ஒப்பிடுவதே தகும்.

— சுப்பு

# கதை முடிந்துவிட்டது என்று நினைத்தால்......

போர்க்களத்தில் பெறும் வெற்றிகள் மூலமாக தனது முஸ்டிகளை உயர்த்திக்காட்டி வாக்காளர்களை உற்சாகம் கொள்ளச் செய்யலாம் என்று அரசாங்கம் நினைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றுகிறது. ஆனால் போர்க்களம் அப்படியொன்றும் சுலபமான வெற்றிகளைக் குவிக்கக் கூடிய வகையில் இல்லை என்பதுதான் உண்மையான நிலவரம். அரசாங்கம் வெளுத்துக்கட்டிக் கொண்டிருக்கும் வகையில் பந்து வீசிக் கொண்டிருப்பவரல்ல பிரபாகரன். யாழ்ப்பாணத்தில் புலிகள் ஆட்டமிழந்தால், உடனே வேறு பகுதியில் அரசாங்கத்தை ஆட்டமிழக்கச் செய்யும் வகையில் பந்து வீசுகிறார் பிரபாகரன். எந்த முனையிலிருந்து அவ்வாறான பந்து வருகிறது; சூழற் பந்தா, வேகப் பந்தா என்று அரசாங்கம் கணிப்பிட முன்னர் விக்கட் காணாமல் போய் விடுகிறது. கதை முடிந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்க புலிகள் எழுந்து விஸ்ரூபத்தைக் காட்டுகிறார்கள். அது எப்படி என்று ஜனாதிபதிக்கு வியப்பாக இருக்கிறது. தமிழ் மக்களின் பூரண ஆதரவுதான் காரணம் என்று முடிவுக்கு வந்து விடுகிறார்.

வடக்கு கிழக்குப் போரில், புலிகள் தரப்பு இழப்பு தொடர்பாக படைத் தரப்பு ஜனாதிபதிக்கு சொல்லும் கணக்குப்படி பார்த்தால், புலிகளின் 90 வீதமானவர்கள் முடிந்திருக்க வேண்டும். ஆனால், புலிகளோ புதிது புதிதாக தாக்குதல் நடத்துகிறார்கள். அப்படிப் பார்த்தால் இறந்தவர்கள் உயிர்த்தெழுந்திருக்க வேண்டும். அல்லது தமிழ் மக்கள் புதிய உறுப்பினர்களை புலிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும். உண்மையில் வடக்கு கிழக்கு போர்க்களத்தில் புலிகள் தரப்பு இழப்பு படைத் தரப்பு சொல்லும் கணக்குகள் போல் இல்லை. படைத் தரப்புக்கு சாதகமான எண்களில் புலிகள் பின்வாங்கி, தமது சக்திகளை சேமித்துக்கொள்கிறார்கள். வடக்குக் கிழக்கில் விமானம் மூலம் போடப்படும் ஒவ்வொரு குண்டும் விரோதத்துக்கான விதை என்பதை அரசு உணரவில்லை ஆனால் உண்மை அதுதான்.

அதுதவிர தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளத் தக்க எந்தவிதமான முன்னேற்றமும் தென்னிலங்கை அரசியல் வானில் காணப்படவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திரவப் பண நெருக்கடி



திரவப் பணம் என்றால் என்ன? இந்த நெருக்கடிக்கு தீர்வு என்ன? சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் இராணுவ அடக்கு முறைகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்திவரும் பொருளாதாரத் தடையின் ஒரு அங்கமாக, வடபகுதிக்குக் கொண்டு வரப்படும் திரவப் பணத்திற்கு அண்மைக் காலங்களில் கட்டுப்பாட்டினை விதித்துள்ளது. கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுவதற்கு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பொதுவான பரிமாற்ற ஊடகமே பணம் எனப்படும். இன்று பொதுவாக பணமாகப் பயன்படுத்தப்படுபவை சட்டப் பணம், வங்கிப்பணம் என்பனவாகும். சட்டப்பணம் என்பதுதான் உலோக,

**சாதாரண வழக்கில் காசு என அழைக்கப்படுவதே பொருளியலில் திரவப்பணம் என அழைக்கப்படுகின்றது**

கடதாசி நாணயங்களைக் குறிக்கின்றது; இவை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்றன. இந்த நாணயங்களே திரவப்பணம் ஆகும். அதாவது, சாதாரண வழக்கில் காசு என அழைக்கப்படுவதே பொருளியலில் திரவப்பணம் என அழைக்கப்படுகின்றது. வங்கிப்பணம் என்பது வணிக வங்கிகளினால் உருவாக்கப்படுகின்ற நடைமுறைக்கணக்கு வைப்புக்களை (காசோலைகளை) குறிக்கின்றது.

மத்திய வங்கியால் வெளியிடப்படுகின்ற திரவப் பணம் (தாள், உலோக நாணயங்கள்) அரசாங்கம், வணிக வங்கிகள் என்பவற்றின் ஊடாகப் பொதுமக்களின் கைகளுக்கு, அதாவது சுற்றோட்டத்திற்கு வருகின்றது. அரசாங்கம் தனது ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் பொருட்கள், சேவைகளின் கொள்வனவுகள் என்பவற்றை உள்நாட்டில் மேற்கொள்ளும்போது, திரவப் பணம் பழக்கத்திற்கு (சுற்றோட்டத்தில்) வருகின்றது. இவ்வாறு மக்களின் கைகளுக்கு வருகின்ற திரவப் பணத்தின் ஒரு பகுதியினை மக்கள் வணிக வங்கிகளில் வைப்புச் செய்கின்றனர். வணிக வங்கிகள் தம்மிடம் வருகின்ற வைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன. வணிக வங்கிகளின் கடன் வழங்கும் நடவடிக்கைகள் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவினை, அதாவது பண நிரம்பலை அதிகரிக்கச் செய்யும்.

பணப்புழக்கத்தின் செயற்பாட்டினைப் பின் வரும் உதாரணத்தின் மூலம் எளிமையாக விளங்கிக் கொள்ள முடியும். சேகர் என்பவர் தன்னிடமுள்ள 10,000 ரூபா திரவப் பணத்தைக் கொடுக்கல் வாங்களுக்குப் பயன்படுத்துவரேயானால்,

**சி. வரதராஜன்**

புழக்கத்தில் 10,000 ரூபா இருக்கும். மாறாக சேகர் தனது 10,000 ரூபாவினை வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கு வைப்பிலிட்டு காசோலைகள் மூலம் தனது கொடுக்கல் வாங்

**இலங்கையில் சுற்றோட்டத்தில் உள்ள பணத்தின் அளவில் (பண நிரம்பலில்) ஏறத்தாள 53 - 54 சதவீதம் நாணயங்களாயும், 46 - 47 சதவீதம் காசோலைகளாயும் உள்ளன. எனினும், நன்கு வளர்ச்சியடைந்த ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில், பணநிரம்பலில் ஏறத்தாள 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்கினை காசோலைகள் வகிக்கின்றன.**

கல்களை மேற்கொள்களும் போது, 10,000 ரூபா திரவப் பணம் வங்கியிலிருக்கும்; ஆனால், அதன் பெறுமதிக்குச் சமனான காசோலைகள் புழக்கத்திலிருக்கும். தற்போது வங்கி தன்னிடமுள்ள 10,000 ரூபா வைப்பிலிருந்து 8,000 ரூபாவினை காந்தரூபன் என்பவருக்கு கடனாக வழங்குகின்றது. இப்போது வங்கியின் கடனால் புதிதாக 8,000 ரூபா புழக்கத்திற்கு வருகின்றது. இதன் மூலம் 18,000 ரூபா புழக்கத்தில் இருக்கின்றது எனலாம். 'வங்கியின், அனைத்து வைப்பாளர்களும் ஒரே நேரத்தில் வந்து தமது வைப்புகள் அனைத்தையும் மீளளிக்கும்படி கேட்க மாட்டார்கள்' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வங்கிகள் தமது வைப்புகளில் ஒரு பகுதியினைக் கடனாக வழங்கும் போது, பணம் உருவாகுவதனை அவதானிக்கலாம். வணிக வங்கிகளின் இச்செயற்பாட்டை பொருளியற் கருத்தில், 'வணிக வங்கிகள் பண

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆக்கம் செய்கின்றன' எனக் கூறுவர். எனவே இங்கு, மத்திய வங்கியால் உலோக, தாள் நாணயங்களும் (திரவப் பணம்) வணிக வங்கிகளினால் உருவாக்கப்படும் காசோலைகளும் (வங்கிப்பணம்) பணமாக இயங்கி வருவதனை அவதானிக்கலாம்.

இலங்கையில் சுற்றோட்டத்தில் உள்ள பணத்தின் அளவில் (பண நிரம்பலில்) ஏறத்தாள 53-54 சதவீதம் நாணயங்களாயும், 46-47 சதவீதம் காசோலைகளாயும் உள்ளன. எனினும், நன்கு வளர்ச்சியடைந்த ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில், பணநிரம்பலில் ஏறத்தாள 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்கினை காசோலைகள் வகிக்கின்றன.

மேலே கூறிய விளக்கத்தினைப் பின்னணியாகக் கொண்டு, வடமாகாணத்தில் நிலவும் திரவப் பண நெருக்கடியினை விளங்கிக்கொள்ள முடியும். வடமாகாணத்தில் இயங்கும் அரச, தனியார் வணிக வங்கிகள் பெருமளவில் வைப்புக்களைத் திரட்டியிருந்த போதிலும், கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இவ் வங்கிகள், தமது தலைமைப் பீடம் விதிக்கும் கட்டுப்பாடுகளினால், கடன் வழங்கும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தியிருந்தன. எனவே, மக்கள் தமது பணத்தினை வைப்பிலிடுவதும் பின்னர் அதனை மீளப் பெறுவதுமான செயற்பாடுகளே வங்கிகளில் நடைபெற்றன; கடன் வழங்கும் தொழிற்பாடு பெருமளவிற்கு நின்று போயிருந்தன. இந்நிலையில் இவ்வங்கிகளினால் திரட்டப்பட் வைப்புத் தொகை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள வங்கிகளில் சிங்கள மக்களுக்கு கடன்களாக வழங்கப்பட்டது. 1994-ம் ஆண்டு முடிவில், வடமாகாணத்தில் இயங்கிய கிராமிய வங்கிகளினால் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்கள் 8029 கோடி ரூபாவாகும். ஆனால், 1994-ம் ஆண்டு இவ் வங்கிகள் வழங்கிய கடன் 332 கோடி ரூபா மட்டுமே. எனவே, மிகுதித் தொகையான 7697 கோடி ரூபா எங்கே? இத்தொகை எமது பிரதேசத்திற்குள்ளேயே இருந்திருக்குமேயானால், அரசாங்கத்தின் திரவப் பணக் கட்டுப்பாடு எம்மைப் பெரிதும் பாதித்திருக்க மாட்டாது. தமிழரின் சேமிப்பு சிங்களவருக்கு முதலீடாக மாறுகின்றது என்பதனைத்தான் இது காட்டுகின்றது. எனவே, இங்கு இயங்கும் வங்கிகள், தமிழ் பிரதேசங்களில் சேமிப்பினைத் திரட்டி சிங்களப் பிரதேசங்களுக்கு முதலீட்டை வழங்கும் தரகு நிறுவனங்களாகவே செயற்பட்டு வருகின்றன.

**1994-ம் ஆண்டு முடிவில், வடமாகாணத்தில் இயங்கிய கிராமிய வங்கிகளினால் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்கள் 8029 கோடி ரூபாவாகும். ஆனால், 1994-ம் ஆண்டு இவ்வங்கிகள் வழங்கிய கடன் 332 கோடி ரூபா மட்டுமே. எனவே, மிகுதித் தொகையான 7697 கோடி ரூபா எங்கே?**

'சூரியப் பிரகாச' இராணுவ நடவடிக்கையின் விளைவாக தமது வருமான மூலங்களை இழந்த மக்கள், வங்கிகளிலிருந்த தமது சேமிப்புக்களை மீளப் பெறுவதில் ஆர்வம் காட்டினர்.

போதிய திரவப் பணக் கையிருப்பினைக் கொண்டிராத வங்கிகள், தலைமையகத்திலிருந்து திரவப் பணத்தை(முன்னர் இங்கிருந்து அனுப்பிய பணத்தை) வரவழைக்க முயன்றபோது, அரசாங்கம் அதற்குத் தடை விதித்தது. வைப்பாளர்களின் காசுத் தேவையினைப் பூர்த்தி செய்யமுடியாத நிலைக்கு வங்கிகள் தள்ளப்பட, காசோலைகளை மக்கள் ஏற்க மறுத்தனர். இதன் விளைவாக காசோலை மூலமான கொடுக்கல் வாங்கல் பாதிக்கப்பட, திரவப் பணத்திற்கான தேவை மேலும் அதிகரித்தது. திரவப் பணம் போதியளவு இல்லாத நிலையில் சம்பளம், மற்றும் இளைப்பாற்றுச் சம்பளம் போன்றவற்றைத் திணைக்களங்கள் காசோலைகளாக வழங்க முற்பட்டன. இவற்றுக்கான திரவப் பணத்தை அனுப்புவதில் அரசாங்கம் காலதாமதத்தை ஏற்படுத்தவே, திரவப் பண நெருக்கடி மேலும் அதிகரித்தது. இது போதாதென்று வவுனியா தடைமுகாம் இராணுவம், வடபகுதிக்குள் வருபவர்கள் கொண்டுசெல்லக்கூடிய பணத்தின் அளவுக்கும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து திரவப்பணப் பற்றாக்குறையினை ஏற்படுத்திவிட்டன.

★★★

## மத்திய வங்கி

**நாட்டின் நிதியமைப்பின் தலைமை நிறுவனமான இலங்கை மத்திய வங்கி, 1950-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28-ம் திகதி தனது தொழிற்பாட்டை ஆரம்பித்தது. இலங்கை மத்திய வங்கி பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.**

1. நாணய வெளியீடு நாட்டின் சட்டப்பணமான தாள், உலோக நாணயங்களை வெளியிடும் அதிகாரங் கொண்ட ஒரேயொரு நிறுவனம் மத்திய வங்கியாகும்.
2. அரசாங்கத்தின் வங்கி அரசாங்கத்தின் பொருளாதார, நிதி ஆலோசகராக விளங்குவதுடன் அரசின் படுகடனை நிர்வகித்தல், அரசின் கணக்குகளை முகாமைப்படுத்துதல், நாணயமாற்று வீதத்தினை நிர்வகித்தல் ஆகியவற்றையும் மேற்கொள்கின்றது.
3. வங்கிகளின் வங்கி வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கும் நிறுவனமாகவும் (தீர்வகமாகவும்), வங்கிகளின் நிதி இருப்பினைப் பாதுகாக்கும் வகையில் இறுதிக் கடன் வழங்கும் நிறுவனமாகவும் இது தொழிற்படுகின்றது.
4. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் நாட்டின் பணநிரம்பலை ஒழுங்குபடுத்தும் வகையில் வங்கிகளின் கடன்களைக் கட்டுப்படுத்துதல்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாற்றின் இயங்கியல் போக்குகள்

சமூக மாற்றம் பற்றிய ஓர் கண்ணோட்டம், கருத்தோட்டம் இன்றைய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ளும் அனைத்துப் போராளிகளாலும் சாதாரண சாமானிய மக்களாலும் ஆராயப்பட்டு வந்துள்ளது. சமூகம் என்ற சொற்பதம் தனிமனிதர்களின் கூட்டம் என்ற கருத்திற்கப்பால் தனிமனிதர்களின் பண்பாடு, கலை, இலக்கியம், விஞ்ஞானத் தொழில் நுட்பத்துறை போன்ற பண்பாட்டுக் கூட்டமைவையும் குறித்து நிற்கும்.

இங்கு ஓர் கேள்வி எம்முன் நிற்கிறது. தனிமனிதர்களின் கூட்டமைப்பே சமூகம் எனில் தனிமனிதர்களின் மனவுலகில் மாற்றத்தை ஏற்படுத்துவதால் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? என்ற கேள்வி எம்மிடையே மீண்டும் எழவே செய்கிறது.

உண்மையில் கால ஓட்டத்தில் வரலாறு தனக்கு உரிய நாயகர்களை படைத்து விடுகிறது - வரலாற்றின் இந்தப் படைப்புக் காரணமாக சமூகத்தை மாற்றவல்ல தலைவர்கள் எம்மிடையே தோற்றம் பெறவே செய்கின்றனர். அவர்கள் புரட்சிகரமான உலகப் பார்வை உடையவர்களாக, தெளிவான அரசியல் சித்தாந்தங்கள் கொண்டவர்களாக விளங்குகின்றனர். தீரமான அர்ப்பணிப்பும் தியாகமும் கொண்ட வரலாற்று நாயகர்கள் இந்தத் தலைவர்களின் வழிகாட்டலில் விடுதலையை வென்றெடுக்கும் பாதையில் வீறுநடை போடுகின்றனர். சமூக மாற்றம் ஏற்படுவதற்கான பாதையில் முன்னேறிச் செல்லும் தலைவர்கள் தெளிவான அரசியல் பிரக்ஞை கொண்டவர்களாகவும் சமூகம் பற்றிய தெளிவான சித்தாந்தங்களை மனதில் ஏற்றியவர்களாகவும் திகழ்வது அவசியமாகிறது. சமூகத்தின் சிக்கலான இயங்கியல் போக்குகளை உணர்ந்து அதன் இயங்கியல் தளங்களை கட்டுப்படுத்தி சுயேச்சையான வரலாற்றின் போக்குகளை வரையறுத்து வரலாற்றை ஏவல் கொண்டு உலகை மாற்றும் உன்னத பணியில் தலைவர்கள் மட்டுமன்றி சமூகத்தின் அங்கமான தனி மனிதர்களும் ஏதோ ஒரு பங்களிப்பை செய்வது அவசியமாகிறது.

அந்த வகையில் மக்களின் பங்களிப்பு என்பது இல்லாமல் விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள். மக்களே மாபெரும் சக்தி. தனிமனிதர்களும் பிரபஞ்சப் போராற்றலின் ஒரு தீப் பொறியே. எனவே ஒரு விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு என்பது அத்தியாவசியம் ஆகிறது.



சமூகத்தை மாற்றுவது என்பதற்கு அடிப்படையில் தெளிவான விதிகள் தேவைப்படுகின்றன. வரலாறு பல அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் அதற்கெதிராக வெடித்தெழும் பல விடுதலைப் போராட்டங்களையும் கண்டுள்ளது. கடந்து போன அரசியல் வரலாற்றின் வளர்ச்சியினையும் அதன் மாற்றங்களையும் உன்னிப்பாக உற்றுநோக்கி பின்நோக்கி மீளப்பார்த்து தெளிவான விதிகளையும் போக்குகளையும் இனங்கண்டு வரலாற்றின் ஓட்டத்தை நெறிப்படுத்தித் தம்வசமாக்கும் தலைவர்களே வெற்றி பெறுகின்றனர். வரலாறு பற்றிய ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் பொருள் உற்பத்தியையும் பொருள் உற்பத்தியினால் உண்டாகும் சமூக உறவுகளையுமே கருத்திற் கொண்டனர். இவ்விதம் தமக்கு வெளியே காணப்படும் பௌதீக புலப்பாடுகளையும் நிகழ்ச்சிகளையும் மார்க்சியம் ஆய்வு செய்கிறது. மார்க்சியம் என்பது மாற்றங்களை ஆய்வு செய்வது மட்டுமன்று, மாறாக உலகை மாற்றுவதே என்கின்றனர் மார்க்சியத்தின் பிரதிநிதிகள்.

மார்க்ஸியத்தின் குறைபாடுகளை ஆராய்வு செய்த நவமார்க்சிய வாதிகள் மார்க்ஸியத்தை உள்வாங்கி அதன் முரண்பாடுகளைக் களைந்து அதனை வளர்த்துச் செல்ல முயன்றனர். பொருளை மட்டுமே மையமாகக் கொண்ட மார்க்சியத்தை தனிமனிதனின் சமூக மனதினை ஆய்வுசெய்து மனிதர்களின் சமூக மனதே சமூக நிகழ்வுகளைத் தீர்மானிக்கும் அதி உன்னத சக்தியாகக் கொண்டனர்.

சமூக மனம் என்பது தனிமனிதர்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள தனித்துவமான கூறுகளைக்கொண்ட மனதிலிருந்தும்

வேறுபட்ட புறநடையான ஒன்று என்று நாம் கொள்ளத் தேவையில்லை. தனிமனிதர்களின் சமூக உறவாடல்களிலிருந்து சமூக மனம் தோற்றம் பெறுகிறதெனலாம்.

அவ்விதமாயின் சமூக மனதை இயக்குவது எது என்னும் ஓர் கேள்வி எழுகிறது. தனிமனித மனம் தான் சமூக மனதை உருவாக்குகிறது எனக் கொள்ளலாமா? அதாவது ஐம்புல அறிவு வழியாகப் பெறப்படும் அறிவே மனது தோன்றக் காரணமாகிறது எனலாமா? அவ்விதமாயின் எமக்கு வெளியே யுள்ள பிரபஞ்சம் பற்றிய அறிவு தோன்றப் புலனுணர்வுகளே காரணமாகின்றன என்ற முடிவுக்கு நாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரமுடியும். புலனறிவாற் பெறப்படும் அறிவே மனது தோன்றுவதற்கு அடிப்படையானதாகிறது.

ஆனால் பொருள் முதல் வாதத்தை மறுக்கும் தத்துவச் சிந்தனையாளர் அதாவது கருத்து முதல் வாதிகள் பௌதீகப் புலப்பாடுகள் அல்ல மனிதனின் உள்ளுறையும் ஆன்மாவே இவையனைத்தையும் இயக்குகிறது என்கின்றனர். அவர்கள் சமூக நிகழ்வுகள், வரலாறு, அதன் போக்கு இவையனைத்தையும் பிரபஞ்சப் பேரான்மா நிகழ்த்தும் திருக்கூத்தாகவே காண்கின்றனர்.

சரி சிக்கலான இந்தப் பிரச்சனைக்கு எவ்வாறு முடிவு காண்பது? அறிவு தோன்றிய நாள் முதலாய் அறிஞர்களிடையே இந்தச் சர்ச்சைகள் வாதப்பிரதிவாதங்கள் என்பன நிகழ்ந்த வண்ணமே உள்ளன. எவ்வாறாயினும் மனிதர்களே வரலாற்றைப் படைப்பவர்கள். கருத்து முதல்வாதச் சிந்தனையோட்டங்களிலிருந்து பிரபஞ்சப் பேரான்மா அல்லது பிரபஞ்ச மனமே வரலாற்றின் மாற்றங்களுக்கு ஏதுவான காரணியாகிறது என்று நாம் கொண்டாலும் கூட எங்கிருந்தோ நம் அறிவிற்கு அப்பால் இருந்து அனைத்தையும் அடக்கியாளும் அந்தப் பிரபஞ்சப் பேரான்மாவே அனைத்தையும் திடீரென்று மாற்றியமைத்திடும் என்பது தவறான கருத்தியல் ஆகும். கடந்துபோன வரலாற்றுப் புரட்சிகளையும் நாம் நோக்கினால் இவையனைத்தும் மனிதர்களாலேயே தோன்றின; தீர்க்கப்பட்டன என்பதற்கு நடந்தேறிய நிகழ்வுகள் சான்றாதாரமாகின்றன.

வாழ்வின் அவலங்களில் கால் பதித்து நிற்கும் மக்கள் அந்த அவலங்களிற்கு எதிராகப் போராடவே செய்கின்றனர். போராட்டமே வாழ்க்கையின் தனிநியதியாயிற்று இந்தப் போராட்டமும் கூட மக்களாலேயே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது கருத்து முதல்வாதக் கோட்பாடுகள் கொள்கையளவில் இருந்தாலும் நடைமுறையில் பொருள் முதல் வாதம் எமக்கு திருப்திதரக்கூடியதாகவே உள்ளது.

அவ்விதமல்ல பிரபஞ்ச ஆன்மாவே இவையனைத்தையும் நடத்தும் அதியுயர் சக்தி என்று நாம் கொண்டாலும் கூட இந்த வரலாற்றின் நிகழ்வுகளை நடத்திச் செல்வது பிரபஞ்சப் பேரான்மாவின் கையிலுள்ள மனிதர்களே, என்பது நாம் காணும் உண்மையாகும் எங்கிருந்தோ இறைவன் குதித்து எமக்கு ஓர் அற்புதத்தைச் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தால் அது நடந்தேறும் சாத்தியமற்ற ஒரு பகற் கனவே எனக்கொள்ள இடமுண்டு. ஆனால் நாம் இறைவன் கையிலுள்ள வெறும் கருவியே என்ற ஆன்மீக வாதத்தை நாம் அறிவுபூர்வமாக புறம் தள்ளி விடுவதும் உண்மையை மறுத்துரைப்பது போன்றதாய் அமையக்கூடும். எனவே பொருள் முதல் வாதத்தை ஏற்றுக் கொண்டாலென்ன கருத்து முதல் வாதம் அறுதியிட்டுக் கூறும் கருத்தியல்களை ஏற்றுக்கொண்டாலென்ன மக்களே வரலாற்றைப் படைப்பவர்கள் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். அது உலகம் படைக்கும் புறத் தூண்டுதல்களாலெழுந்தாலென்ன அன்றி எம்முள் இருக்கும் ஆன்மாவின் ஆற்றலால் நடந்தாலென்ன அல்லது அவையிரண்டின் கூட்டுச் சேர்க்கையாலானாலென்ன இவையனைத்தும் மக்களின் செயல்பாட்டையே அடித்தளமாக கொண்டு அமைகின்றன.

இடிந்து போன இழந்து போன எம் மண்ணை மீட்டெடுத்துப் புனர்நிர்மாணம் செய்து எமக்கான வாழ்வை மீட்டு எடுக்கும் மகோன்னதமான பணி எம்முன் காத்துள்ளது. இம்மகோன்னத பணியை ஆற்றப் போராளிகளுக்கு தோள் கொடுத்து வரலாற்றுக் கடமையை செவ்வனே ஆற்ற எமது மக்கள் முன்வர வேண்டும். சாம்பல் மேட்டிலிருந்தும் எரிந்துபோன சிதையினின்றும் நாமே எழுவோம்! நமக்கான தாயகத்தை மீட்டெடுப்போம். குறி நோக்கி தளராது சலியாது முன்னோக்கிய பாய்ச்சலுடன் விரைவோம் - வாழ்வு நமதே! ★

---

**தமிழீழத்திலிருந்து**

# 'வெளிச்சம்' விடுக்கும் அறைகூவல்

ஆக்கிரமிப்பு யுத்தத்தை விடுதலை யுத்தத்தால் எதிர்காள்வதும், பெரும் இராணுவ சக்தியை மக்கள் சக்தியால் வெற்றிகொள்வதுமே சர்வதேச ரீதியாக விடுதலைப் போராட்டங்களின் வரலாறாய் இருந்து வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் இக்கொடிய ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்கொண்டு முறியடிக்கத் தயாராகிவிட்ட அதேவேளையில் மனித சங்கிலிப் போராட்டம், ஆர்ப்பாட்டங்கள், வெகுஜன அமைப்புகளின் எழுச்சிகள் என ஜனநாயகக் குரல்களும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

ஆக்கிமிப்பு யுத்தங்கள் மூலம் தமிழர் தேசத்தைத் துண்டாடி, எமது தொடர்புகளைத் துண்டித்து, எமது போராட்ட சக்திகளைப் பலவீனப்படுத்தும் எதிரியின் நோக்கத்தைச் சிதறடித்து முன் செல்வது எம் ஒவ்வொருவரதும் தலையாய தேவையாகும். இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தை முறியடிப்பதும், இதன் அகோர வடிவத்தை உலகின் கண்முன் எடுத்து விரிப்பதுமான கடமையை மறந்து ஒதுங்கி நிற்பதும், பதுங்கிக் கொள்வதும் எமது அழிவுக்கு நாமே நிலப்பாவாடை விரிக்கும் செயல்களாகும்.

நெருக்கடிகளை நேர்கொண்டு முகம்கொடுத்து அனுபவம் சேர்த்தவர்கள் நாம். இழப்புகளூடும் எழுந்து நின்றவர்கள் எமது மக்கள்.

எமது மக்களின் உணர்வு வெளிப்பாட்டின் பிம்பங்களான கலை இலக்கியவாதிகளின் கடமையும் இங்கு பன்மடங்காகின்றது. அது எமது மக்களின் எழுச்சியின் உந்துசக்தியாகவும், எமது விடுதலை முனைப்பின் குரலாகவும் ஒலிக்க வேண்டும்.

தமிழீழக்கலை இலக்கியவாதிகளின் குரல் இன்று உலகெங்கும் ஓங்கி ஒலிக்குமளவிற்கு எமது களம் விரிந்து கிடக்கிறது.

எனவே,

எதிரிக்கெதிராக நாம் எழுந்து நின்று குரல் கொடுப்போம். எமது கலை, இலக்கியக்குரல் எமது உணர்வுகளை உலகெங்கும் சுமந்து சென்று எதிரொலிக்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "போரம்மா" வீதி நாடகம்

## - ஒரு கண்ணோட்டம் -

ஏறத்தாள எழுபத்தைந்து இடங்களில் மேடையேற்றப்பட்ட 'போரம்மா' வீதி நாடகம் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டினரின் தயாரிப்பாகும். தற்கால போர்ச்சூழலில் மக்கள் மத்தியில் மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் ஒரு காலகட்டத்தின் தேவையை உணர்த்துவதாக அமைகிறது.

பழைய போர் மரபையும் தற்கால போர்முறையையும் ஒன்றிணைத்து தமிழரின் வீரப்பண்பாட்டை காட்சியகப்படுத்தியிருப்பது இந் நாடகத்தின் சிறப்பம்சமாகும். முடியாண்ட தமிழினத்தின் போர் வரலாறும், அந்த இனம் வீழ்ந்த பின்னர் எமது தலைவர் காலத்தில் எழுச்சிகொண்ட வரலாறும் இன் நாடகத்தினூடே சொல்லப்படுகிறது. சொல்ல வந்த கருத்தை சுருக்கமாகவும் ஆனால் எழுச்சியாகவும் கூறியிருப்பது பாராட்டுதற்குரியது.

இந்நாடகத்தின் கதை மூன்று கட்டங்களாக நகர்த்திச் செல்லப்படுகிறது. முதலாவது கட்டமாக பண்டைய வீரத்தாய் தன் மகனைப் போருக்கு அனுப்புகின்ற காட்சியை மையமாக வைத்த அரச வரலாற்றுக் காட்சியும், இரண்டாவது கட்டமாக எனது இனம் எவ்வாறு தற்போது அவலமுற்று அலைகிறது என்ற தற்காலக் காட்சியாகவும் அமைகிறது. மூன்றாவது கட்டம் காட்சியும், கானமும் என்ற அமைப்பில் பாடலுக்கான நடனமாக அமைகிறது. அந்த நாடகத்தின் முடிவாக, தீர்வாக இக் காட்சி அமைகிறது.

இந்த நாடகத்தின் உள்ளீடாக சில அம்சங்களைப் பார்ப்போமானால், கதாபாத்திரங்கள் யாவும் இதனோடு ஒன்றிப் போய் நடிப்பது புலனாகிறது.

எமது குடியிருப்புக்களை, இன்பமாக வாழ்ந்த தமிழினத்தின் நிலங்களை எதிரி ஆக்கிரமித்தல், இதனால் எம் மக்கள் இடம் பெயர்ந்து அல்லலுறுதல் போன்ற காட்சிகள் மிகவும் உருக்கமாகக் காட்டப்படுகிறது. குறித்த சில நிமிடங்களில் இக்காட்சியில் சமுதாயத்தின் பல பாத்திரங்கள் தங்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்பது மிகுந்த அவலச்சுவை மிக்கதாக அமைகிறது.



தமது குடியிருப்புகளை, அழகான வீடுகளை, சொத்துக்களை, நிலபுலன்களை இழப்பது கொடுமை. அந்தக் கொடுமையிலிருந்து எவ்வாறு மீளப் போகிறோம்?

நாடகத்தின் அடுத்த கட்டம் அதற்கான தீர்வைத் தருகிறது. நெஞ்சையறுக்கின்ற துயர வாழ்விலிருந்து விடுபட எம் இழந்த வாழ்வை மீளப் பெற நாம் செய்ய வேண்டியதை போரம்மா பாடலுக்கான கதகளி நடனம் உணர்த்தி நிக்கின்றது. தரைப் புலியாக, கடற்புலியாக கரும்புலியாக எழுந்து நிற்கின்ற எமது படையணியோடு இணைந்து நிற்பதே இதற்கான தீர்வாகும் என்ற நடனக் காட்சியும், அதற்குப் பின்னர் மெருகு சேர்க்கின்ற கவிதை வரிகளும் இதனை முழுமைப்படுத்துகின்றது.

ஒட்டுமொத்தமாக இந் நடனம் ஒரு புதிய வடிவம், மேடைக்காட்சிகளாக அமையவேண்டிய மரபுகளை வீதி நாடகமாக உருவாக்கியிருப்பது முக்கிய அம்சமாகும். அதிலும் அரச காட்சிகள் மேடையில் நடிக்கப்படுதலே வழக்கம். இங்கு வீதி நாடகமாக இடம்பெறுதல் புதிய வடிவமாக அமைகிறது.

முடியில் தொடங்கிய கதை இன்றைய போராட்ட வரலாற்றின் புதிய பரிமாணத்தைச் சொல்லி நிற்கின்றது. மொத்தத்தில் ஐம்பது நிமிடங்களில் நடித்து முடிக்கப்பட்ட இந்த வீதி நாடகத்தில் பாத்திரங்களின் நடிப்பு ஓரளவு வெற்றியைப் பெற்றுள்ளது என்றே கூறலாம்.

இந்நாடகம் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் உணர்வுகளைத் தட்டியெழுப்பியிருக்கிறது என்ற வினாவுக்கான விடையை ஆராய முன்னர் இந்த நாடகத்தில் நடித்த 'வீரர்களைப்பற்றி' கூறவேண்டும்.

நடனக்காட்சியில் நடித்தவர்களில் இருவர் இந்த நிகழ்வை ஒட்டி தம்மைப் போராட்டத்தோடு இணைத்துக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதுவே இந்த வீதி நாடகத்தின் மூலம் பெற்ற வெற்றியை உணர்த்தி நிற்கிறது.

மற்றும் பழைய வீதி நாடகங்களில் வருகின்ற இனவாதக் குறியீடுகள் அதனை உருவாக்கப் பயன்படுத்துகின்ற கறுப்பு உடை தரித்த பேயுருவங்களற்ற நாடகத்தை இயல்பாக நடாத்திச் செல்கின்ற பாங்கு, இந் நாடகத்தை ஏனைய தற்கால வீதி நாடகங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலைக்களம்

# பூவரசு பூக்கும் பூமிக்கு

**வியாசன்**

அலரிமாளிகைக் கூரைமீதெழுந்து
அலைவரிசையில் மிதந்ததோர் அசரீரி.
"தமிழரின் மெளனம் கலையும் தருணமிது;
புலிகளுக்கு எதிராக எல்லோரும் பேசவேண்டும்."
சந்திரிகாவின் சத்திய வசனமிது.
பிரபாகரனுடன் பேசி
பிரச்சினைக்குத் தீர்வென்ற சீமாட்டிக்கு
இந்த வசனத்தை எழுதிக் கொடுத்தது யார்?
வாசல்தோறும் வாக்குக் கேட்டபோது
பேசியது என்ன?
காவியுடைகள் கூத்தாடத் தொடங்கியதும்
கூறுவது என்ன?
சூத்திரதாரி யாரென்று தெரிந்துவிட்டது.
மேசைக்குக் கீழே 'நீலனின்' கால்கள்.
வேறொன்றுமில்லை.
'கதிர்காமத் தம்பிரானின்' திருவோடு யாசகம்
உத்தமியை உரத்துப்பேச வைக்கிறது.
கொழும்பிற் தொங்கும் 'துரோக வெளவால்கள்'
சொன்னதைச் செய்யுமென்ற துணிவு
சந்திரிகாவைச் சண்டித்தனத்துக்குத் தூண்டுகிறது.
என்ன செய்வது?
எட்டப்பர்களால் இடிந்த வரலாற்றில்
இன்னொரு அத்தியாயம் இது.
சரி, சரி, கிடக்கட்டும்
எரியுண்டு போகுமா எம்மண்?
நடவாது.
பூவரசு பூக்கும் பூமிக்கு
வெள்ளரசு வந்தா விலங்கிட முடியும்?
மழைநீரால் மட்டும் பயிர்செய்யும் பூமியிது
அசையாதென்பதறிக.
"பாறை பிளந்து பயனெடுக்கும்" தாய்வயிறு
பணியாதென்பதெம் பாடல்.
ஒத்தியெடுத்து ஊற்றுவாய் அடைத்தாலும்
வேர்கசிந்து நீர்பரவும்.
எந்நாட்டு மக்களையும் எம்தேசம் வரவேற்கும்
படையோடு வருபவர்க்கெம் தலைவாசல் மரமிடிக்கும்.
'குமாரணத்துங்காவின் குடும்பத் தலைவிக்கு'
யாரேனும் இதனை அறியக் கொடுத்திடுக.
மத்திய வங்கிமீது இடித்தவர் எவரோ?
ஆர் செய்தாரோ நாமறியோம் பராபரமே!
என்றாலும்
குண்டுவெடிப்பென்றால் என்னவென்று
கொழும்புக்கும் தெரியட்டும்.
குருதிவெள்ளம் கொழும்பில் வழியும் போதே
அவலமென்றால் என்னவென்று அரசுக்குப் புரியும்.
'நவாலிப் படுகொலையும்'
நாகர்கோவிலில்' நாம் கொடுத்த விலையும்
சந்திரிகாவின் சமையலறைக்குத் தெரியாது.
'சிலிங்கோ மாளிகை'ச் சிதறல்கள்
'ஜனாதிபதி இல்லத்திலும்' விழுந்திருக்கும்
எடுத்துப் பார்த்தாவது எம்துயர் அறியட்டும்.
வலிகாமம் போனதால்
நாம் மனம் இடிந்துபோகவில்லை.
புலிவாலைப் பிடித்தோமென்று பேசுவதும்
எமக்குக் கோபமல்ல....
இளித்தவாய்த் தமிழருக்கு
அள்ளிக்கொடுக்க வந்த 'அமுதசுரபி'யென்று
தீர்வொன்றைச் சொல்வதே சினமூட்டுகிறது.
பிறந்தமண்ணில் வாழப் 'பெமிசன்' எடுப்பதிலும்
இறந்துபடல் சிறந்தது.
திணிப்புக்குப் பெயர் தீர்வு என்றால்
தீர்வுக்கு சிங்களத்தில் என்ன பெயர்?
நேற்றுவரை
அதிகாரமட்டத்திருந்த ஆதிக்கவுணர்வை
"வெள்ளைப்புறா" மூலம் வீதிக்குக் கொண்டு வந்ததே
சந்திரிகாவின் சாதனை அரசுதான்.
ஆளவந்தவன் சிங்களவன்
அடிமையானவன் தமிழனென்று
பேசவைத்த பெருமையும் பெருமாட்டிக்கே சேரும்
பேச்சுவார்த்தை மேசையின் கால்களை முறித்து
வெட்டரிவாளுக்குப் பிடிபோட்ட "வெண்புறாவே"
ஒன்றுணர்க.
கருங்கல்லு உடையுமன்றி வளையாது.
கண்ணாடி சிதறுமேயன்றி நெளியாது.
இது உணர்ச்சிவசமான உரையல்ல....
பிரபாகரனின் 'பொலிசி'
"புலிகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெள்ளரசு விலங்கிட முடியுமா?

சித்திரைக்கடையில் தீர்த்துக் கட்டுவேன்'' என்றார்.
ரத்வத்தை.
முடிசூடிய மன்னனுக்கு தலைபிசகிய கதைபோல
மந்திரி மாமனுக்கு மாதங்கள் மறந்துபோச்சு.
தேரும், குதிரைகளும், சிம்மாசனக்கதிரையும்
மாப்பிள்ளை மிடுக்கானது மந்திரிக்கு....
'தமிழர்தொட்டொழிப்பை' முடுக்கிவிட்ட 'அக்காவுக்கு'
ஆடியடங்கும் வயதில் ஆயுர்வேத வைத்தியம்.
தம்பியானவன் தலையில் தடவடா புளியெண்ணை.
கோட்டையைப் பிடித்துக் கொடியேற்றி வைத்துவிட்டு
வேட்டை நாய்களுக்கு விருந்து வைத்தபோது.....
புலிகளை அழிக்காது விடேன் என்று
புலம்பியதாய் அறிந்தோம்.
காற்றுலவும் வெறும் தரையில் காலைவைத்துவிட்டு
பீற்றிக்கொள்ளும் 'பெருந்தகையே'
தமிழரின் உதிரத்துளி ஒவ்வொன்றக்கும்
பதிவேட்டில் வரவுண்டு.



காலமொருநாள் கணக்குக் கேட்கும்.
சத்தியத்தை வெட்டியழித்து விடுவதென்பது
நிச்சயம் நடவாது.
புத்தபிரான் சொன்னதிந்தப் போதனை
தாமரைத் தட்டேந்தும் தளபதிகளுக்கு
இதைப் போதிக்க யாருமில்லையா?
புலிகள் வேறு தமிழர் வேறு என்பவர்களே
புரிந்துகொள்ளுங்கள்
வலிகாமம் வெளியேறியபின் எத்தனை வாக்குறுதிகள்
ஒருவராயினும் உள்ளே வந்தார்களா?
ஆயிரம் முரண்பாடுகள் எமக்குள் இருந்தாலும்
அண்ணன் தம்பி உறவெமக்கு
ஒன்றென்றால் துடிக்கும் உதிரத்துடிப்பு
வீடிழந்துபோன 'வெப்பிசாரத்தில்''
யாராயினும் ஓரிருவர் பேசியிருக்கலாம்
அதைவைத்தா முடிவெடுத்தீர்?
அடபாவமே!
நெருப்புக்குளித்தும் நிமிரும் திறன்படைத்த
கறுப்புப் பறவைகள் நாம்.
மானமிழந்து மாற்றானின் மடிகிடக்கும்
ஈனர் சிலரிங்கே இன்னும் இருக்கின்றார்
நீலன்,
கதிர்காமர்,
சிவசிவா... இப்படியாய்...
தலையில் ஓரிரண்டு நரைமயிர்போல
இவர்கள் சிலபேர்கள்.
எச்சிலிலைகளையே எதிர்பார்க்கும் இவர்களையா
தமிழரென நம்பித் தடம்புரண்டீர்
ஒன்றுரைத்தோம்
எம்மண்ணில்
வேரைத்தறித்தால் விழுதிருந்து துளிர்த்திடுவோம்
விழுதைத்தறித்தாலோ வேரிருந்து தளிர்த்திடுவோம்
காற்று மீதாணை,
கடல் மீதாணை,
போற்றுதற்குரிய நம் பொன்மண் மீதாணை
ஆற்றலன் எம்தலைவன்,
அண்ணல் மீதாணை.
படைதிரட்டி உடன் எழுவோம்.
பகையழித்து ஊர் புகுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்பாட்டின் பெயராலே இன்னுமா இந்த வழக்கங்கள்?

உலக பண்பாடுகள் பலவும், ஆண் - பெண் பால்களி டையே வேறுபட்ட பாத்திர (role) எதிர்பார்ப்புக்களையும், அந்தஸ்து (status) நிலைகளையும் கொண்டி ருப்பன. குறித்த பண்பாட்டின் விழு மியங்கள், நம்பிக்கைகள், வழுக்காறு களினடியாக, சமூகமயமாக்கலின் வழி பேணப்படுவன. ஒரு சமூகத் தின் அங்கத்தினரிடை பால் ரீதியான வேறுபாடு, ஆணுக்கு மேலான அந் தஸ்தையும், பெண்ணுக்கு கீழான அந்தஸ்தையும் தந்து பாரபட்சமாக நடக்கின்றமை உணரப்பட்டதன் விளைவே இன்றைய பெண் விடுத லைச் சிந்தனையாகும். நிகழும் சமூக மாற்றங்களிடை எமது புலங் களிலும் இச்சிந்தனை வேர்விட்டு அமைப்புரீதியான வளர்ச்சிகளை யும் எய்துவதைக் காண்கின்றோம்.

இந்த மாற்ற அலைகளிடை எமது புலங்களில் பெண் பாத்திரம் பற் றிய எதிர்பார்ப்பில், அதன் பார பட்ச நடைமுறைகளில் பண்பாட் டுக் காரணிகளின் செல்வாக்கு எந் நிலையில் உள்ளது?

மேலெழுந்த வாரியாக நோக்கும் போது ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் சைக்கிள் சவாரி செய்கிறார்கள் என்பதிலி ருந்து போர் முனையில் சாதனை கள் படைப்பது வரையிலான சமத் துவம் தெரியும். ஆனால், இந்த மாற் றங்களையும் புறந்தள்ளி பண்பாட் டின் பேரால் பல வழக்கங்கள் இன்னமும் முனைப்புடன் விளங்கு வதை, எமது சமூக பால் வேறுபாடு களை ஆழநோக்கும்போது உணர முடியும். மேலே சுட்டிய சைகிள் ஓட்டத்தில் கூட "ஆம்பிளையளைப் போல நிமிர்ந்து ஓடுகிறாள்" என்பது போன்ற கேலியும் கண்டனமும் அவதானிக்கப்படலாம். காலங்கால மாக ஆண்மை (Musculine) பெண்மை (Feminine) என்ற பால் வேறுபாடுக ளினடியாக உருவாக்கப்பட்ட ஒரே வளர்ப்பிலான பாத்திரப் பிரதிமை கள் இன்னமும் கலைவதாயில்லை. நடத்தை, உடல்சார் அசைவுகள், வழக்கங்கள் அனைத்திலும் பழக்கப் பட்ட கோலங்களையே எதிர்பார்த்து மாற்றங்களை விமர்சிக்கன்ற நிலை தொடரக்காணலாம். ஒரு பெண் ணின் நிமிர்ந்த நேர்கொண்ட பார்வை இன்னமும் தவறான விளக் கங்களை இங்கு பெறும். "அடக்க மில்லாமல் நிலம் அதிர நடக்கி றாள்" நடப்பதற்கு விமர்சனம். "காலுக்கு மேலை கால் போட்டு இருக்கிறாள்" இருப்பதற்கு விமர்ச னம். "ஆம்பிளையளைப் போல தின்கிறாள்" பசித்தாலும் அதிகமாக சாப்பிடமுடியாத நிலையை தரும்

என். சண்முகலிங்கம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
சமூகவியல் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒப்பியல் விமர்சனம். "அவளுடைய மயிர்வெட்டும் ஜீன்சும்" மேலைத் தேய உடைக்குள் எதிர்கொள்ளும் கண்டனம். 'குடும்பி' வெட்டி, நீட்டுக் கால்சட்டை, சேட்டுக்குள் நுழைந்து, கொதிக்கும் வெக்கையிடையும் 'ரை' கட்டி, 'சூட்' அணிந்து திரிவது யார் கண்ணிலும் பண்பாட்டு மீறலாக தெரிவதில்லை. பெண்களுக்கு மட்டும்தான் வழமைகள் என்ற பாரபட்ச நிலையை இங்கு தெளிவாகக் காணமுடியும்.

நடையுடை பாலின தொடர்பாக கணவனை இழந்த பெண்கள் தொடர்பான எமது சமூக நிலைப்பாடு இன்றும் மிகமிக கொடுமையானது. ஆங்காங்கே வெள்ளைச் சேலை நிற்பந்தத்தை மீறிய நிறச் சேலை மாற்றங்களை காணமுடிந்தாலும் பண்பாட்டின் பெயரால் பூ, பொட்டு, நிறம் பறித்தல்கள் இன்னும் உறுதியாகவே நிகழ்வன. பறிக்கப்படுவது நிறம் மட்டுமல்ல, அண்மையில் ஒரு சமயச் சடங்கின் போது, குத்துவிளக்கை ஒரு விதவைப் பெண் தொட்டபோது, அங்கு அவளிடம் அது பறிக்கப்பட்ட வேகத்திடை, இன்னமும் மாறாத அந்தஸ்து நிலை புலப்பட்டமையை இங்கு குறிப்பிடலாம். இன்னும் விதவை என்பதற்காய் பெற்ற தாயையே, திருமண வேளை தள்ளி வைக்கின்ற கொடுமைகளும் பண்பாட்டின் பெயராலே இன்றும் தொடரும் வழக்கங்கள்.

ஒரு திருமணமே சிரமமான எமது சமூக நிலைமையிடை பெண்களின் மறுமணம் எதிர்கொள்ளும் விமர்சனங்களும் பாதகமானவையே. இத்தகைய ஒரு நிலை ஆண்களுக்கு இல்லை, என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நிலைதாழ்ந்த அந்தஸ்தை அப்படியே பேணுவதில் சமூக வழக்கங்களின் ஆதிக்கம் உறுதியாய் தொடரக் காணலாம்.

பொதுவான சமூக அசைவின் அடிப்படையாக எமது சமூகத்தில் விளங்கும் கல்வி, இன்று இருபாலாருக்கும் அது பொதுவாக கிடைத்த போதும் "பெண்பிள்ளை அளவோடு படிப்பதுதான் நல்லது" என்ற வழக்கம் இன்னமும் மறைந்ததாயில்லை. அதிக படிப்பு - அதிக எதிர்பார்ப்பு அதிக சீதனத்திற்கு இட்டுச் செல்லும் என்ற அச்சமும் இதன் அடிப்படையாகலாம். பல பிள்ளைகளை கொண்ட குடும்பங்களிடை பொருளாதார நெருக்கிடை காரணமாக கல்வியை தெரிந்து வழங்கவேண்டிய நிலையில் ஆண்பிள்ளைகளுக்கே முதன்மை தரப்படுவதும் இன்றும் எமது கிராமங்களில் அவதானிக்கப் படும்.

www.tamilarangam.net

பொதுவாழ்வில் உயர்பதவிகள் - அந்தஸ்துகள் என ஆங்காங்கே பெண்கள் சில உச்சங்களை எய்திய போதும், இவர்கள் உட்பட அனைவருக்குமே வழமையான சமூக கட்டுப்பாடுகள் தொடரவே செய்வன. பெண் பருவமடைவதுடனேயே பெரும்பாலான அவளது செயல்களுக்கு கட்டுப்பாடும் ஆரம்பமாகிவிடுகிறது. என்ன முக்கிய வேலை இருந்தபோதும் வேளைக்கே வீடு திரும்பிவிட வேண்டிய நிர்ப்பந்தம் இன்னமும் தொடரும். கூடவே தொழில் நிறுவன வேலையால் வந்து மீள வீட்டிலும் அவள் செய்யும் வேலை நேரம் பற்றிய மதிப்பும் இன்னமும் உணரப்பட்டதாயில்லை.

சமூக வாழ்வில் கூடி குழு உணர்வில் கலந்து வளர்வதற்கு பல தடைகள்; சமூகத்தின் அனைத்து நடைமுறைகளிலும் பெண்ணுக்கென தனியான எதிர்பார்ப்புகள். பயணவழியில் பசியெடுத்தாலும் கடையில் போய் சாப்பிட முடிவதில்லை. வீடு சேரும்வரை விரதமிருக்கவேண்டிய நிர்ப்பந்தம், நாகரிக சமூக வாழ்வில் பண்பாடு கண்ட சமூக சடங்குகளில் கூட ஆண்கள் பந்தி முடியும் வரை, பெண்கள் குந்தியிருக்க வேண்டிய நிலை.

இத்தகு பண்பாட்டு சடங்கான திருமணச்சடங்கின்போது மணமகன் இருக்க, மணமகள் எழுந்து நின்றே மாலையிட வேண்டும் என்ற வழக்கத்தின் தொடர்ச்சியென, எமது சமூக வாழ்வில் பண்பாட்டின் பெயரால் வழக்கங்களாக இன்னும் தொடரும் வேறுபட்ட, பாரபட்ச அந்தஸ்து நிலைகளை காணமுடியும்.

"பெண்விடுதலை" என்ற கருத்தியல் வளர்ச்சி; சமூக மாற்ற அலைகளிடையேயும், இந்த சமூக வழக்கங்கள் எமது நியம, நியமமற்ற கல்வி ஊடகங்களின் வழி வெகு லாவகமாக ஊட்டப்படும். பாடப்புத்தகங்களின் பாத்திர பிரதிமைச் சித்தரிப்புக்களுக்கூடாகவே அம்மா அடுப்படியில், அப்பா சாய்மனைக் கதிரையில், அக்கா தும்புத்தடியுடன், தம்பி கிரிக்கட் மட்டையுடன் என இளவயது முதலே வளர்க்கப்படும். சினிமா, கோயில் பிரசங்கம், மங்கையருக்கான சஞ்சிகைகள் என இந்த பாத்திர பிரதிமைகளை ஊட்டும் சாதனங்களுக்கு குறைவில்லை. திருவிளையாடல் சிவபெருமானே, "பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப்பட்டவள், மீறிச்சென்றால் அனுபவிப்பாய்" என உணர்த்துவது முதல், சமத்துவ வாழ்வின் கோலங்களைக் காட்டியபின், இறுதிக் காட்சியில் அதற்காக மன்னிப்புக் கேட்டு பழமையை தழுவும் நவீன திரைப்பட இலக்கிய நவீனங்களின் பாத்திரங்கள் வரை இன்றைய நிலை தொடர துணையாவன.

இந்த ஊடகங்களை உரியவாறு விமர்சித்து, விழிப்புணர்வை ஏற்படவைத்தவேண்டியது, சமூக மாற்றச் செயல் முறையில் ஈடுபடுகின்றவர் முக்கிய கடமையாக வேண்டும். கூடவே இந்தப் பழக்கங்களில் ஒவ்வாதனவற்றை, மூட நிலைகளை சமூகம் உணருமாறு தெளிவுபடுத்தும் பணியும் இன்றியமையாதது.

"பெட்டைக் கோழி கூவி விடியாது" என சேவல் கூவித்தான் பொழுது விடிகிறது என நம்பிய காலத்துப் பழமொழியை இன்றும் வழக்காறாகக் கொண்டு, பெண்களை தாழ்ந்த அந்தஸ்து நிலைக்குத் தள்ளுதல் போன்ற மூட வழக்கங்களை இனியும் தொடர்வோமா?

அடியோடு இருந்த மூட வழக்கங்களையெல்லாம் கொன்று, பாரதி சொன்னது போல அறிவு யாவும் பயிற்சிலென்றே "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய்" வாழும் அந்த நாளே நாம் பண்பட்ட நாள் எனலாம்.

பண்பாட்டின் பெயரால் வழக்கங்கள் என்று வேண்டாதனவற்றையெல்லாம் சுமந்து தாழாமல், சமூக மாற்றத்திற்குகந்த விழிப்புணர்வோடு எமது பண்பாட்டினையும் வளர்த்து, வாழ்வோம். ★

> ''விடுதலைப் புலிகளை அழிக்கும் வரைக்கும் போர் நடத்த வேண்டும் என்று கூறுபவர்கள் நாட்டின் பொருளாதார நிலையை சிந்திக்க வேண்டும். சுமார் ஆறு லட்சம் ரூபா ஒரு நாளைக்கு போருக்கென செலவாகிறது. அது பொது மக்களின் பணமாகும். இறப்பவர்களும் எங்களின் பிள்ளைகள் தான் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதால் வெளிநாட்டு ஆயுத தரகர்கள் பெரும் பணக்காரர்களாக மாறிவிடுகிறார்கள்.
>
> – லயனல் குணரட்ண

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சம் நிமிர்த்த....

- த. அன்பழகன்


அன்பே!
நீ நிலவாய்த் தேய்வதாயும்
வீட்டில் அம்மா மயங்கிச் சரிந்தும்
அப்பா மனதுள் வெடித்தும்
ஆச்சியோ நேர்த்திகள் தீர்த்தும் தவிப்பதாய்
நண்பன் சொன்ன கதைகேட்டு
நான் அழவில்லை.
அறியாமையை நினைத்துச் சிரித்தேன்.
அவர்கள்தான் அப்படி
புதுப்பூ நீயுமா இப்படி?

எனக்குள் பெரிதாய் பிரளயம் இல்லை
இங்கே எத்தனையோ என் தோழர்
கத்திக் குழறாமல்
கையிழந்தும், கால்விரலாற் படம்வரைந்தும்
கரண்டிபற்றிச் சோறுண்டும்
'மினி மி'க்கு ரவை நிரப்ப
கால்தந்தும் உதவுகின்றார்.

பார் இங்கே!
புலரப்போகும் புதுவிடியலுக்குப்
புது உணர்வின் பிறப்புக்களை...

என்றாலும் எனக்கோ ஒரு குறை
வெற்றிலைக் கேணியில்
வெற்றுவெளியில்
பற்றிப்பிடித்த 'பிறனோடு'
பாய்ந்தோடிப் பொருதியதும்
புல்லாவெளித் தரையில்
புயலாகப் புகுந்து
R.P.G. கொண்டு 'புல்டோசர்' நொருக்கியதும்
சங்கத்தார் வயல் வெளியில்
சகடையைச் சரிக்க,
குறிபார்த்த தோழருடன்
வெடிதீர்த்து வென்றதுபோல்
மனம் நிறைய
மீண்டும் பொருகளத்தில் 'புலிகளின் தாகமென'
புதிதாய்ப் பறித்த துப்பாக்கியைத் தூக்கியெழ
இரு கரமுமில்லையே!

துயர்தானென்றாலும்
உனைப்போல் நிலவாய் நான் தேயவில்லை.
மீண்டும் புதுப்பயிற்சி, புதுமுயற்சி
கையிழந்தோர் காலிழந்தோர்
கரும்புலியாய்க் களம்புகுந்து,
கவசடாங்கி அத்தனையும்




வாய்பற்றி இழுத்து
வந்தாரெனும் சேதிவரும்
அன்று நான் இரு கண்ணிழந்து நின்றாலும்
உன் நெஞ்செழுச்சி நெருப்பெடுக்க
நிச்சயமாய் முன்வருவேன்
நீ காத்திரு!
அன்பே! இது
நிலாக்காயும் நேரமல்ல
ஈழநிலம் காக்கும் நேரம்
நீயும் விழித்தெழு!
வந்துவிடு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நியாயங்கள் தண்டிக்கப்படுகின்றன



கொட்டாஞ்சேனை நகர்ப் பகுதி.

பொலிஸ் நிலையம்.

லொக்கப் ரூம் நம்பர்த்திறீ. நேரம் இரவு 7 மணி. அந்த குறைந்த வலு மின்குமிழின் வெளிச்சத்தினால் அறை ஒளியூட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மின்குமிழின் ஒளியையே பார்த்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்த என்னைக் கலைத்தான் ஒரு இளைஞன்.

"உங்களை பொலிஸ் கூப்பிடுது" என தோள் தொட்டு அவன் சொல்ல, நான் திடுக்கிட்டு எழுந்து நின்றேன்.

இரும்புக் கதவு திறக்கப்பட்டது.

"வா வெளியே" அதட்டலுடன் ஒரு சிங்களக் கொன்ஸ்ரபிள் அழைத்தான். பீதியுடனும் சோர்வுடனும் வெளியேறி, அவனைப் பின் தொடர்ந்தேன். அந்தக் கொன்ஸ்ரபிள் என்னை இன்ஸ்பெக்டர் அறையினுள் செல்லும்படி சொல்ல, நான் மட்டும் அறையினுள் நுழைந்தேன்.

**நிலவன்**

இன்ஸ்பெக்டரின் முகம் இறுகிப் போயிருந்தது.

"உனக்குச் சிங்களம் தெரியுமா?" ஆங்கிலத்தில் என்னிடம் கேட்க, நான் தெரியாதென தலையாட்டினேன். தமிழே தெரியாத அந்த இன்ஸ்பெக்டர் என்னிடம் ஆங்கிலத்தில் கேட்கத் தொடங்கினான்.

"ஏன் நீ கொழும்பு வந்தாய்?"

அவனின் இக் கேள்வி எனக்கு எரிச்சலை ஊட்டியது. "நான் கொழும்பு வருவேன் போவேன் உனக்கென்ன எத்தனை தரம் திருப்பித் திருப்பி ஒரே கேள்விகளையே கேட்டு எரிச்சலூட்டுவாய்" மனதிலே தோன்றிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன்.

நேற்று இப்படித்தான்.... ஏன் வந்தாய் என்று அவன் கேட்க, நானும் கடந்த இரண்டு வாரமாக ஒரே பதிலை சொல்லிச் சொல்லி அலுப்பில் நிற்க.. இந்த இன்ஸ்பெக்டர் பாவி அறைந்தானே கன்னத்தில் ஒரு அறை... அம்மா! அந்த ஞாபகத்தில் பவ்வியமாக நின்று பதில் சொல்லத் தொடங்கினேன்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியது முதல் கொழும்பில் வந்து மறுநாளே கைதானது வரை நிகழ்ந்ததையும், வந்த காரணத்தையும் சொல்லி முடித்து, பெரிதாக மூச்சு வாங்கினேன்.

"உன்னுடைய பெயரென்ன" என்று கேட்க, உண்மையிலே எனக்கு பொறுமையிழந்து போனது "சும்மா தானே கேட்கிறாய்! இந்த இரண்டு வார காலமாக மூன்று வேளையும் முறை தவறாமல் உன்முன் வந்து பெயர், ஊர் என்று எல்லாமே சொல்லி விட்டேனே! பெயர் சொல்லி அழைத்துவரச் சொல்லி விட்டு இப்போது பெயர் என்ன என்கிறாய்! என்ன செய்வது? இவனிடம் அடிவாங்கிச் சாவதிலும் பதிலை பத்து முறையேனும் சொல்லுவது மேல்!"

"ராம்குமார்," என்றேன். "ஏய்! ராம்குமார், நீ புலிக்கு சப்போட் தானே"

அப்பாடா.. இனித்தான் இருக்கிறது வேடிக்கை. அங்கே சுற்றி, இங்கே சுற்றி, இப்போதுதான் விசயத்திற்கு வந்திருக்கிறான். இனித்தான் எல்லாம் இருக்கிறது! மனதிலே தோன்றிய சிரிப்பை அடக்கிக் கொண்டு, "இல்லை", என்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"டேய், பொய் சொல்லாதே, நீ படிப்பதாகச் சொல்வது பொய், நீ ஒரு புலி, இங்கே குண்டு வைக்கத் தானே வந்தனீ" என்று அதட்டலுடன் இன்ஸ்பெக்டர் கத்தினான். வார்த்தைகள் சுவரில் மோதித் தெறித்தன.

"ஓ... கேடு கெட்டவனே இப்பிடி எத்தனை நாளைக்குத்தான் கட்டாயப்படுத்தி அப்பாவிகளை புலிகளாக்குவாய்! உனக்கு 'மெடல்' எடுப்பதற்கும், பதவி உயர்வுக்கும் எங்கள் வாழ்க்கை தானா கிடைத்தது. கட்டாயப்படுத்தினால் நான் உண்மையில் குற்றவாளி ஆகி விடுவேனா?"

"என்ன சொல்லுகிறாய்... நான் புலியா..? ஓ இந்த வருடத்திற்கு இந்தப் பகிடி போதும்! என்னை அறிந்தவர்கள் இதைக் கேட்டால் நிச்சயம் சிரிப்பார்கள். யாழ்ப்பாணத்தில இத்தின நாளும் இருந்தாலும்... புலி பற்றியும், ஆயுதப்புரட்சி பற்றியும் யோசித்தவனா நான். எனக்குத் தெரிந்ததெல்லாம் வீடும் படிப்பும் தான். எந்த ரீயூட்டரியில எத்தனை மணிக்கு கிளாஸ்.. யாருடைய 'நோட்ஸ்' படித்தால் A எடுக்கலாம்.. யாரிடம் தனிப்பட்ட வகுப்பு எடுக்கலாம்.. என்னென்ன புத்தகங்களை எடுத்து மேலதிக வாசிப்பு செய்யலாம்... இவைகள்தான் தெரியும். முடிவில் நான்கு A-கள் எடுத்து பல்கலைக்கழகம் தெரிவானேன்."

அப்போதுதான் ஒருமுறை கண்ணை "செக்" பண்ணி கண்ணாடி எடுப்போம் என்ற நோக்கத்துடன் கொழும்பு வந்தேன்.

இப்ப நீ புலியா என்றால் என்ன சொல்வேன்.

"என்ன மௌனம், சொல் நீ புலிதானே"

"இல்லை... நிச்சயமாக இல்லை" ஆங்கிலத்தில் என்னையும் மீறிக் கத்தினேன். என் கண்கள் கலங்கத் தொடங்கின.

அப்போது இன்ஸ்பெக்டரின் மேசையிலிருந்து தொலைபேசி மணியடித்தது.

"ஹலோ.. ரஞ்சித்குமாரா ஹத்தா கரன்னே" எனப்பேசத் தொடங்கியவர்கள் என்னை வெளியே போகும்படி கையால் சைகை செய்தார்.

நான் மீண்டும் அறையினுள் அடைக்கப்பட்டேன்.

என் நெஞ்சம் வேதனையால் முகவும் கலங்கியிருந்தது. என்ன நிர்ப்பந்தம் இது! செய்யாத குற்றத்திற்கு இப்படி ஒரு தண்டனையா..?

சுவரில் சாய்ந்து இருக்கப்போன நான்.. முதுகில் பலமான வலியை உணர்ந்து "ஆ" என்று வாய் விட்டு அலறினேன்.

நான் அலறியதைக் கேட்ட அந்த இளைஞன்... அவன் பெயர் சொக்கலிங்கம் என்று சொன்ன ஞாபகம். "நல்லா நோகுதே" என்று கேட்டான்.

"ம்" என்று ஈனஸ்வரத்தில் முனகினேன்.

"பாவியள்! நேற்று உங்களுக்கு என்ன அடி அடிச்சுப் போட்டாங்கள்!... நீங்களும் கொஞ்சம் கதைக்காமல் இருந்திருக்கலாம்.." என்றவனைப்பார்த்துச் சொன்னேன்.

'உந்த இன்ஸ்பெக்டர் கதைச்ச கதைக்கும்.. படுத்திய பாட்டிற்கும் ஊரில என்றால் கொலைதான் செய்திருப்பன்..'

சொக்கலிங்கம் அதன் பின் என்னுடன் எதுவும் பேசவில்லை.

எனக்கு நேற்று நடந்த அந்தச் சம்பவம் கண் முன் நிழலாடியது.

வழமையைப் போல என்னை விசாரனைக்கு அழைத்த இன்ஸ்பெக்டர்-

"நீ ஒரு புலிதானே" என்றான்.

"இல்லை"

"திரும்பத் திரும்ப பொய் சொல்லாதே! தமிழ் நாயே!"

"நான் சொல்லுறன்.. நீ இங்கே மருத்துவ சிகிச்சைக்காக வரவில்லை. ஒரு உள்நோக்கத்துடன் உனது மேலிடத்தினால் அனுப்பப்பட்டவன் நீ! இன்னும் பலர் உன்னோடு வந்து பிரிந்து சென்று.... ஒரு தீய நோக்கத்திற்காக செயல்படுகிறீர்கள்... ஆனா நீ அவற்றையெல்லாம் எங்களுக்கு மறைக்கிறாய்! அழகாக பொய் சொல்லி தப்பி விடலாமென தப்புக்கணக்குப் போடுகிறாய்... எனக்குத் தெரியும்... உன் பேச்சும், நடை பாவனையெல்லாம் நீ ஒரு 'எல்ரிரி' என்பதைத்தான் நிரூபிக்கின்றன... இனியும் மறைக்காமல்... மறுக்காமல் ஒத்துக்கொள்!" ஆக்கோரஷத்துடன் பேசி விட்டு என்னைப் பார்க்க, நான் மறுத்தேன்.

"நான் ஒரு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவன். எனது கண் கோளாறு. சிகிச்சைக்காகவே வந்தேன். என் தந்தையும் விரைவில் வருவார். எனக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்புமில்லை... என்னை... நம்புங்கள்!", நான் கெஞ்சினேன்.

"ஏய் திமிர் பிடிச்ச கழுதை, நீங்க எல்லாம் சரியான விசுவாசிகள். எப்படித்தான் கேட்டாலும் உண்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையைச் சொல்லமாட்டீர்கள். முட்டாள். திருப்பித் திருப்பி ஒன்றையே சொல்லுவதுதான் உங்கள் குணம். எனக்கு அது தெரியும். முடிவாகக் கேட்கிறேன்... ம்... சொல்.... நீ புலி தானே..."

"இல்லை நான் சொல்ல மாட்டேன்"

"மாட்டாயா.. சொல்லடா" என்று கத்திய இன்ஸ்பெக்டர் இரண்டு கொன்ஸ்ரபிள்களை அழைத்து என்னை அரை நிர்வாணமாக்கினான்...

பின்னர் கைகளை இழுத்து பின்னுக்கு கட்டினான்.

"சொல்லடா நாயே "

"......"

"பேசமலா நிற்கிறாய்!" என்றவன் ஆத்திரத்துடன் சப்பாத்துக் காலால் ஓங்கி உதைத்தான்.

அப்பாடா... என்ன உதை இனி எனக்கு சந்ததி விருத்தியே இருக்காது என நம்ப வைத்தது அந்த உதை.

அலறியபடி விழுந்து மயக்கமானேன்.

நினைவுகள் இன்னும் வலித்துக் கொண்டிருந்தன.

சொக்கலிங்கமும் பாவம் பத்து நாளாக இந்த சிறைவாசம் அனுபவிக்கிறான் குடும்பத்தில் மூத்த பிள்ளை நாலு தங்கைகள். கடன் பட்டு மாமாவின் உதவியுடன் கனடா போவதற்கென வந்தவன். இப்போது விசா, ரிக்கட் எல்லாம் கனடா போக அவனுக்கு காத்திருக்கின்றன. ஆனால்.... இவனோ அவசரகாலச் சட்டத்தின் கீழ் காவல் காக்கப்படுகின்றான்.

**பெங்களூர்:**

**தமிழினப் பாதுகாப்பு குழு சார்பில் ஈழத்தமிழர்களின் இன்னல் கண்டு கொதித்து நடந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள்.**

நான் பலதும் யோசிக்கலானேன்.

நான் தனியே கொழும்பு வந்தது பிசகோ? அல்லது இது தமிழன் என்பதால் நான் அனுபவிக்கும் கஸ்டமோ? எப்படியாயினும் இப்படியான வேதனைகள் அவஸ்தைகள் என் வாழ்வில் என்றும் அனுபவித்திராதவை.

இன்று நான் குற்றம் செய்யாமலே தண்டனையை அனுபவிக்கிறேன். நான் இங்கே படும் துன்பங்கள் வேதனைகளை அம்மா, அப்பா அறிந்தால்... எவ்வளவு வேதனைப் படுவார்கள்! என் தங்கை நிர்மலா... அண்ணா என்று கதறி அழுவாளே! நான் என்ன செய்ய கடவுளே! எப்படி இந்த சிக்கலிலிருந்து விடுபடுவேன்! நினைக்க நினைக்க அழுகை தான் வந்தது. நான் அழத் தொடங்கினேன்.

திடீரென கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தேன்.

உள்ளே நுழைந்த இரு பொலிஸ்காரர்கள் எனக்கு சற்று தள்ளிப் படுத்திருந்த சொக்கலிங்கத்தை உதைத்து எழுப்பினர்.

"எழும்படா... தமிழ் நாயே", சிங்களத்தில் இன்னும் கெட்டவார்த்தைகளால் திட்டியபடி அவனை பொலிஸ் நிலையத்திற்கு வெளியே இழுத்துச் சென்றனர்.

சற்று நேரத்தில் "ஜீப்" ஒன்று சத்தத்துடன் வெளியே போகும் ஓசை கேட்டது. இதில் நிச்சயம் எங்கோ சொக்கலிங்கத்தை கொண்டு போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

என்னில் இனம் புரியாத ஒரு திகில் உணர்வு தொற்றிக் கொண்டது.

எனது அறைக்குள் கள்ளச் சாராய "கேசில்" பிடிபட்டிருந்த இருவர் ஏதோ சிங்களப் பாடல்களை பாடி... தமிழில் செக்ஸ் ஜோக்ஸ் எல்லாம் சொல்லி சிரித்து விட்டு... நித்திரையாய் கிடந்தனர்.

நான் இரவு முழுவதும் யோசித்து... யோசித்து.. அதிகாலைதான் நித்திரையானேன்.

மறுநாள் விடிந்தது.

நான் காலைக்கடன்களை சிரமத்துடனும் பாதுக்காப்புடனும் முடித்துக் கொண்டேன். அந்தக் கள்ளச்சாராயக் கேஸ்கள்.. யாரோ ஒரு வசதியான பெரிய மனிதரின் தயவினால் பிணையில் சென்றனர்.

நான் மனதில் பெருமூச்சு விட்டுக் கொண்டேன். 'நாங்கள் மட்டும் தானா அவசரகாலச் சட்டத்தில் குற்றவாளிகள். அவசரகாலச் சட்டத்தில் கைதாகும் ஒருவனுக்கு முக்கியமாக இரண்டு தகைமைகள் இருக்க வேண்டும். ஒன்று அவன் இந் நாள் வரை எதுவித குற்றமும் செய்யாத அப்பாவியாக இருக்க வேண்டும். மற்றையது தமிழனாக இருத்தல் வேண்டும்...'

ஏதோ உடலில் உயிர் இருக்க வேண்டுமென்பதற்காக கொடுக்கப்பட்ட உணவை உண்டு முடித்தேன்.

அப்போது.. அறையினுள் நுழைந்த பொலிஸ் ஒருவன்,

இன்னும் ஒரு மணி நேரத்தில் நீ இடம் மாற்றப்படுவாய், என்றான்.

நான் திடுக்கிட்டேன்.

என்னையும் எங்கோ கொண்டு போகப் போகிறார்கள் சொக்கலிங்கத்தை கொண்டு போன இடத்திற்கா? மனதில் ஏதேதோ கேள்விகள்? எதிர்காலமே சூனியமானதை உணர்ந்தேன்.

என்னை வான் ஒன்றிலே, ஒரு மணி நேரம் கழித்து ஏற்றினார்கள் அதற்குள் என்னைப் போல சுமார் 50 இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் என்னை பரிதாபத்துடன் பார்ப்பதைப் போல இருந்தது.

அதிலே ஒருவன் என்னுடன் பேசினான்.

"இன்று அதிகாலை வெள்ளவத்தை கடற்கரையோரமாக ஒரு பிணம் கண்டெடுக்கப்பட்டதாம். இறந்தவர் நீலநிறசேர்ட்டும் கறுப்பு நிற ரவுசரும் அணிந்திருந்தாராம்... விடுதலைப் புலியாக இருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றனவாம்.....

"சொக்கலிங்கம்" நீலசேர்ட், கறுப்பு ரவுசர்... அப்பாவி... அநியாயமாக கொல்லப்பட்டு விட்டயே" மனதில் அவனுக்காக அழுதேன். கண்ணீர் கன்னத்தில் கோடிட்டது.

கதைத்த இளைஞன்... எதுவுமே புரியாமல் என்னை ஆதரவுடன் பார்த்தான்.

வானில் வேகம் கூடியிருந்தது.

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏற்றம் காணுவோம் வாரீர்

ஆண்டாண்டு காலமாக தாம் வியர்வை சிந்தி பாடுபட்டுக் கட்டிய வீடுவாசல், சொத்து ஒரு நாளில் துறந்து, தமிழ் மக்கள் வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்தனர். வடமராட்சி, தென்மராட்சி, வன்னி என பல இடங்களுக்குச் சென்று



அங்கே குடியிருக்கும் இம்மக்களை நாம் சந்திக்கிறோம். அவர்களில் பலர் புதுவாழ்வுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டிருந்தனர். ஏராளமான பெண்கள் தம் குடும்பத்துக்காக உழைக்கத் தொடங்கியிருந்தனர். சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட லக்சுமி எம்முடன் தன் உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டார்.

"நான் சுழிபுரத்தில் இருக்கும்போது மரக்கறி வியாபாரம் செய்து வந்தேன். என் கணவர் என்னையும், என் பிள்ளைகளையும் விட்டு விலகிப் போய் முப்பது வருடமாகிறது. அன்று தொட்டு இன்றுவரை என் உழைப்பு மட்டும்தான். வீட்டுச் செலவுக்கும், பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கும் போக, மிகுதியை எடுத்து சீட்டுக் கட்டுவேன். இங்கே வந்து அப்படியெல்லாம் மிச்சம் வராது. சாப்பாட்டுக்கு மட்டும் வந்தால் காணும். மற்றவர்களிடம் கடமைப்படக்கூடாது. இவ்வளவு காலம் அவர் இல்லாமல் ஒருவரிடமும் கடைமைப்படாமல் தான் என் பிள்ளையை வளர்த்தேன். இனியும் அப்படித்தான் இருப்பேன்."

என்று நம்பிக்கையோடு கூறினார்.

சுண்ணாகத்தைச் சேர்ந்தவரான கனகம்மா வள்ளிப்பிள்ளையைச் சந்தித்தபோது,

"நான் அங்க மில் வைத்திருந்தேன். மில்லில் தூள் அரைத்து, தூள் வியாபாரம் செய்து வந்தேன். அதில் ஒரு நாளைக்கு லாபம் வரும். ஒருநாளைக்கு நட்டம் வரும். எனது கணவர் பெரிய வேலை ஒன்றும் செய்யமாட்டார். ஒரு ஆளை வேலைக்கு வைத்துத்தான் மில் நடத்தினேன். வன்னிக்கு வந்து எத்தினை நாளைக்கு நிவாரணத்தை நம்பியிருப்பது. பழைய வியாபரத்தையே செய்யலாம் என்று தொடங்கியுள்ளேன். மிளகாய் இப்ப சரியான விலைதான். மிளகாயை வாங்கி கையால்தான் இடிப்பேன். அந்தக் கூலிதான் என்ர உழைப்பு. சும்மா இருந்தா பிள்ளையளைப் பார்ப்பது யார்? ஒருநாளைக்கு வியாபாரத்துக்கு வராவிட்டாலும் அன்று பட்டினிதான். நான் இருக்குமட்டும் என் பிள்ளைகளை கஸ்ரப்படவிடமாட்டேன். காலை 7.00 மணிக்குப் போய் 2.00 மணிக்கு வீட்ட வருவேன். சமையல் வேலையையும் நானேதான் செய்யவேண்டும். பிள்ளையளும் எல்லாம் சிறியவர்கள். இப்படி என் கைகால் இருக்கும் வரை எவரிடமும் எதிர்பார்ப்பதில்லை"

என்று மிடுக்குடன் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவரான நாகேஸ்வரியை சந்தித்தோம்.

"என்னுடைய கணவர் இறந்து இருபது வருடங்கள் ஆகின்றன. அன்று தொட்டு இன்றுவரை வியாபாரம் செய்துவருகிறேன். அங்க மரக்கறி கடனுக்கு எடுத்துத்தான் வியாபாரம் செய்வேன். பிறகு அந்தக் காசு இரண்டு நாள் கழித்துக் கொடுப்பேன். பிள்ளையை கஸ்ரம் தெரியாமல்தான் வளர்த்து படிப்பித்து வந்தேன். இங்க வந்த புதிதில் என்ன செய்வதென்று தெரியாது. நிவாரணத்தை வாங்கி சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். எத்தனை நாளைக்கு நிவாரணத்தை வாங்கிச் சாப்பிடுவது? ஏன் அங்கே செய்த வியாபாரத்தை இங்கே செய்யமுடியாது என யோசித்துவிட்டு காலமை விடிய வெள்ளணை போனேன். முதல் இல்லை. கடனுக்கு காய்கறி எடுத்துப் போட்டு வித்தேன். அதில் லாபம் வரும். அதை நான் எடுத்துக்கொண்டு முதலை தந்தவருக்கு கொடுப்பேன்."

இப்படிப் பல பெண்களைச் சந்தித்தோம். மரக்கறி வியாபாரம், சிறு சிறு பலசரக்குக் கடைகள், பெட்டிக் கடைகள், தையல் என்று பல்வேறு பட்ட தொழில்களிலும் பெண்கள் இறங்கியுள்ளார்கள். தனது சொந்த இடங்களில் வாழ்ந்தபோது, உப்பைக் கூட விலைக்கு வாங்கியவர்கள், இங்கு வீட்டுத் தோட்டம் செய்கிறார்கள். தமது இடைவிடாத கடும் முயற்சியால் முன்னேற முயன்று கொண்டிருக்கிறார்கள். தனது தாலிக் கொடியை ஈடுவைத்து சிறுகடை ஒன்று போட்டு, இப்போது நாளாந்தம் ரூபா 400 வரை தான் சம்பாதிப்பதாக ஒரு அம்மா குறிப்பிட்டார்.

சொந்த இடமென்ன, எந்த இடமென்றாலும் வாழ நினைத்தால் வாழலாம்.

ஆற்றங்கரையின் மரமும் அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும் வீழும். உழைத்து வாழ முயலும் பெண்களின் மன உறுதியால் கிட்டும் ஏற்றத்துக்கு வீழ்ச்சியே கிடையாது.

*அமுதநிலா*

***(சுதந்திரப்பறவைகள் - பங்குனி 96)***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

# மீள்வதற்கான திட்டம் அரசிடம் இல்லை

“நாட்டில் நிலவும் குழப்ப நிலை காரணமாகவே உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சி கண்டது. இந்த நிலையில் இருந்து முற்றாக விடுபடுவதானால் வடக்கு - கிழக்குப் பிரச்சினை தீர்விலேயே உள்ளது” என்ற அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்காவின் கூற்றுக்கள் முற்றிலும் ஏற்புடையனவையாகும். சிறீலங்காவின் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டு வந்ததும், சிறீலங்காவிற்கு அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் முக்கிய துறைகளில் ஒன்றாகவும் உல்லாசப் பயணத்துறை இருந்தது. ஆனால், வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வரும் நீண்ட காலப் போரும் அதன் விளைவுகள் கொழும்பிலும் எதிரொலிக்கத் தொடங்கியமையும் இன்று இத்துறையை பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. இதைப் போக்க அரசு எடுத்துக்கொண்ட பகீரத முயற்சிகளும் தோல்வியையே கண்டுள்ளன. இந்த நிலையில்தான் அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்காவின் கூற்றுக்கள் முற்றிலும் அர்த்தமுள்ளனவையாகியுள்ளன. ஆனால், வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு உல்லாசப்பயணத்துறையின் மீட்பிற்குத் தீர்வாகும் எனக் கூறியுள்ள அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்கா, அது எவ்வகையான தீர்வாகும் எனக் கூறவில்லை. ஆகையினால், வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பற்றி அவர் குறிப்பிட்டாரா? அல்லது இராணுவத் தீர்வு பற்றிக் குறிப்பிட்டாரா? என்பது பற்றி எம்மால் தீர்மானிக்க இயலவில்லை. ஏனெனில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்பது யதார்த்த நிலையாகினும், சந்திரிகா அரசு இராணுவத் தீர்வு பற்றியே முழுமையாக சிந்தித்து வருகின்றது. சந்திரிகா அரசின் அரசியல் தீர்வு என்பது குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டது போல், ஒரு பொய்யான வடிவமேயாகும். ஆகையினால் அமைச்சர் தர்மசிறீ சேனநாயக்கா இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பற்றி சிந்திப்பார் என்பது சந்தேகத்திற்கு உரியது. நாம் எண்ணுவது போன்று இராணுவத் தீர்வையே மனதில் கொண்டிருப்பாரானால், அது மடத்தனமேயாகும். ஆனால், சிறீலங்காவின் உல்லாசப் பயணத்துறை மட்டும் போரினால் பாதிக்கப்படவில்லை. ஒட்டுமொத்தமாகவே சிறீலங்காவின் பொருளாதாரம் அதல பாதாளம் வரை சென்றுவிட்டதென்பதும் அதை மீட்டெடுப்பது என்பதும் இலகுவான காரியம் அல்ல என்பதும் இன்று வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று. இவ்வாறு மீளமுடியாத நெருக்கடிக்கு வடக்குக் கிழக்கில் இடம்பெறும் போரும், தெற்கில் பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுமே காரணம்.

இதனை உலக வங்கியும் அண்மையில் உறுதி செய்திருந்தது. சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சி வீதத்தினைப் பாதித்துள்ளன. தென்னாசியப் பிராந்தியத்திலேயே அதிகூடிய பணவீக்கத்தைக் கொண்டிருக்கும் நாடாக சிறீலங்கா மாறியுள்ளதோடு பொருளாதாரத்தில் பின்னடைவையும் சந்தித்துள்ளது எனவும் உலக வங்கியின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசானது இராணுவத்திற்கென செலவிடும் தொகையானது மிக உயர்வானதும், மிக வளர்ச்சியடைந்த நாடுகளில் இராணுவச் செலவீட்டுக்கென தனது தேசிய வருமானத்தில் செலவிடும் விகிதாசாரத்தை விடவும் அதிகமானதுமாகும். இது ஏற்கனவே பற்றாக்குறையான பொருளாதாரத்தை மேலும் பாதித்துள்ளதோடு உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாகப் பெருந்தொகைக் கடனை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. மேலும் நாட்டின் வருமானத்தில் பெருந்தொகையான நிதி போருக்கு சென்றுவிடுவதனால் பொருளாதார வளர்ச்சிக்கென மூலதனம் இடுவது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அரச சொத்துக்களைப் பெருமளவு விற்பனை செய்து போரிற்குச் செலவிடும் அரசாங்கம் பொருளாதாரத் துறையில் முதலீடு செய்யும் என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? ஆனால் மறுவளமாக பணவீக்கமும் அதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் மீதான விலையேற்றமும் மக்கள் மீதான சுமையை அதிகரித்து வந்துள்ளது. ஆனால், இதனை நிவர்த்திசெய்யக் கூடியவாறு சம்பளத்தை உயர்த்தி வழங்க முடியாதவாறு பொருளாதாரச் சிக்கல்களும் நெருக்கடிகளும் யுத்த செலவீட்டினால் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இவற்றின் எதிரொலியாகவே சிறீலங்காவில் அடிக்கடி ஏற்படும் வேலைநிறுத்தங்களும் மறியல் போராட்டங்கலும் ஆகும்.

அந்த வகையில், மோசமாகிச் செல்லும் பொருளாதாரத்தை மீட்சி பெறச் செய்யவேண்டுமானால், போர் உடனடியாக நிறுத்தப்படுவதோடு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று விரைவில் காணப்படவேண்டும். ஆனால், இனப்பிரச்சினைக்கு அவ்வாறானதொரு அணுகுமுறையை சந்திரிகா அரசு கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. கால நிர்ணயம் செய்து போரை வெற்றிகொள்வதே அதன் நோக்கமாக உள்ளது. ஆனால், இது சிறீலங்கா அரசு எண்ணுவது போன்று போரை முடிவிற்கு கொண்டுவர மட்டுமல்ல பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் உதவப்போவதில்லை. மாறாக சிறீலங்காவை மீட்கவோ அல்லது மீளவோ முடியாத நெருக்கடிக்குள்ளேயே இட்டுச் செல்லும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணில் ஓங்கி ஒலிக்கும் விடுதலைக் குரல்கள்



## சிறக்கை முளைக்கிறது

தமிழீழப் போர் மக்களுடன் பயணித்துள்ள வண்டியைப் போன்றது. 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் போது போராளிகளும்; பொதுமக்களும் வாழிடங்களை விட்டு வெளியேறிய காட்சிக்கு இப்படியொரு வடிவம் கொடுக்கலாம். இந்த விடுதலைப் பயண வண்டியைத் தகர்த்துவிடும் கபட நோக்கோடு சாலையின் குறுக்கே இராட்சத வாகனமாக எதிர்ப்பட்டது சிங்களப் படையணி. பொதுமக்களற்ற வெறும் போர்க் கருவிகளால் பாதுகாக்கப்பட்ட; பெருமெடுப்பிலான சிறீலங்கா இராணுவத்துடன்; பொதுமக்களைத் தன்னகத்தே கொண்ட விடுதலலைப் புலிகள் போர் நடத்த வேண்டிய சடுதியான நிலை.. இச்சந்தர்ப்பத்தில் பயணிக்கும் மக்கள், போராளிகள், போராட்டம் ஆகிய மூன்றையும் ஒருமிக்க காப்பாற்ற வேண்டிய சூழலை உருவாக்கி; போராட்டத்தின் இறுதி தோல்வியை தமிழினத்தின் மீது திணித்துவிடலாமென்பது எதிரியின் போர்க் கணிப்பு. ஆனால் மதியூகமுள்ள தலைமைத்துவம் போராட்ட வண்டியை பயணிக்கும் சாயலிலிருந்து பத்திரமாக தரை நோக்கி நகர்த்ததியது. மோதித் தகர்க்க வந்த எதிரி நிலை குலைந்தான். அவன் தொடர்ந்தும் மக்களைத் தேடி நகர வேண்டிய புதிய நிலை. அதற்கேற்ப சூரியக்கதிரின் இலக்கங்களும் நீண்டுகொண்டே சென்றது. பெருவிபத்திலிருந்து விடுதலைப் போரும், தமிழினமும் காக்கப்பட்டது. இப்படியொரு கோணத்தில் சூரியக்கதிர் தொடர் நடவடிக்கையை விளங்கிக்கொள்ளலாம்.

எதிரி பிழையான தளத்தில் படை நகர்த்துவது தெளிவாகத் தெரியும் போது; நாமும் அதே விதமாக அவர்களை எதிர்கொண்டால் ஏட்டிக்குப் போட்டியாக தவறுகளை நிகழ்த்தும் நிலை களத்தில் உருவாகும். இதை விடுதலைப் புலிகள் துல்லியமாக எடை போட்டுவிட்டதை இம்மமுறையும் பேரினவாதம் தாமதமாகவே விளங்கிக் கொண்டது. ஆனாலும் அதை மூடி மறைக்க தாம் வெற்றி பெற்றுவிட்டதைப் போன்ற மாயத்தோற்றமொன்றை அவசர அவசரமாக உருவாக்க முயன்றனர். வெடிசுடல், தந்தப் பேழைப் பரிசு, செங்கம்பள வரவேற்பென நடைபெற்ற சகலவிதமான சோடிப்பு வேலையும், அரசு தன்னையும்; சிங்கள மக்களையும் சாந்தி செய்ய உருவாக்கிய ஏற்பாடுகளாகும். இருப்பினும் தமிழ் மக்களின் மனோதிடத்தைத் தகர்க்கக் கூடியதான அனுகூலமொன்றும் அதில் மறைந்தே கிடந்தது. ஆனபோதும் தமிழீழ மண்ணிலிருந்து கிளம்பிய எதிர்விசையோ ஆட்சியாளருக்கு உருசியைத் தருவதாக அமையவில்லை. நிதர்சனமென்பதோ தமிழீழ மக்கள் பெருமெடுப்பில் போராட்டத்துடன் கலந்து கொள்வதாகவே அமைந்திருந்தது. எதிரியின் மன இருளை சரியாக அடையாளம் கண்டுகொண்ட புதிய போராளிகள் தமிழினத்திற்கு அவசியமான மனவுறிதியை மருந்து போல வடித்துத் தந்தார்கள். தமிழீழத்தில் இன்று தோன்றியுள்ள புதிய போர்ப்படிமத்தை சிற்பி வெட்டிய சிலை போல உறுதியாக எடுத்து நிறுத்தினார்கள்.

"துன்பங்கள் எனக்கோ என் குடும்பத்தினர்க்கோ புதியவையல்ல, ஆனால் எனது தாயகமும்; போராளிகளும் எதிர்நோக்கும் கஸ்டங்களைப் பார்க்கும் போது நமது வாழ்வியல் அவலங்கள் மிகச் சிறியதே!" என்ற செய்தியை தன் மக்களிடையே எடுதுக்கூறி; போராட்டத்தில் சங்கமித்தார் ஆறு பிள்ளைகளின் தந்தையான, 57 வயதுடைய வினாசித்தம்பி சந்திரசேகரம் என்பவர், இவரின் மகன் மாவீரன்; மகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறு போராளி; ஆனாலும் தானே முன்னோக்கிவந்து, எதிர்காலச் சந்ததியின் விடிவுக்காக; இந்தக் குடும்பத் தலைவன் துணிந்து கொடுத்த குரல் ஆட்சியாளரின் முகங்களை மோதி மிதிக்கிறது. முடிவடையாத போருக்கு வெற்றிப் பதக்கம் சூடிக் கொண்ட உலகின் முதல்பெண் ஜனாதிபதியான சந்திரிகாவின் நாடகவேடத்தை அம்பலமாக்கும் வல்லமை இவர் குரலுக்கு இருக்கிறது. இதுபோல இன்னொரு நிகழ்வு; ஏற்கனவே ஒரு மகன் போராளியாக இருக்க; அடுத்த மகனையும் தானாகவே முன்வந்து போராட்டத்தில் இணைத்திருக்கிறார் ஞானசௌந்தரி அருளானந்தசாமி என்னும் தாய். "வேறொரு தாயின் பிள்ளை போராடி மக்களைக் காக்க; அவர்களின் தியாகத்தில் நாம் வாழ்வதை என்னால் தாங்க முடியாது!" என்று இவர் தெரிவித்துள்ளதாகக் கூறுகிறது ஈழநாதம் பத்திரிகை. துவண்டுபோகும் மனங்களில் வீசப்படும் இவ் ஒளித்துண்டங்கள் பகைவனின் ஈகத்தை உடைக்கும், விடுதலைத்தீயை மூட்டி வளர்க்கும் ஆற்றல் பெற்றவை. இத்தனைக்குப் பிறகும் மாடுகள் தம் ஆதிகாலத் தீவனமாகிய புல்லையே இன்றும் உண்டு வருவதைப் போலவே சிறீலங்கா அரசின் சுதந்திரம் தொடர்பான அணுகுமுறைகளும் மாற்றமின்றியே இருந்து வருகின்றன. ஆக்கிரமிப்பாளரை நிராகரித்த மக்கள் மீது பொருளாதாரத் தடை அமுல் நடாத்தப்படும் அதே வேளை; இராணுவம் நிலைகொண்ட பகுதிகளிலோ பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதாக அறிவித்துள்ளனர். இது "சுதந்திரத்தை இழந்து விட்டால் சோற்றுக்குத் தடை இல்லை!" என்ற சிங்கள ஆட்சியாளரின் நீர்த்துப்போன கொள்கையாகும். சிறீமாவோ அம்மையார் சந்திரமண்டலத்திலிருந்து அரிசி கொண்டு வருவதாகக் கூறி ஆட்சி பீடம் ஏறிய காலம் முதல் "வாரம் எட்டுக்கிலோ தானியம் தருகிறேன்!" என்ற கோஷத்துடன் அவரை ஆட்சியிலிருந்து இறக்கிய ஜே.ஆர் வரை சிங்களத் தலைமைகள் அரசியலையும், அரிசியையும், சுதந்திரத்தையும் மூன்று பெயர்கள் கொண்ட ஒருவிடயமாகவே விளங்கி வந்துள்ளனர். சந்திரிகாவோ இதிலிருந்து சற்று வேறுபடுவாரென சிலரிடம் எதிர்பார்ப்பிலிருந்தது. ஆனால் அவரது இப்போதைய உணவுப்பொருள் தடை நீக்கம் பற்றிய அறிவிப்பும்; அரிசியோடு சுதந்திரத்தை எடை போடும் எண்ணப் பாங்கும் அவரை அப்படியொன்றும் புதியவராக அடையாளம் காட்டவில்லை.

தியாகராசா சந்திரசேகரன் என்னும் 19 வயது இளைஞர் தந்த புதிய வாக்குமூலம் சந்திரிகாவின் இத்தகு பழைமைப் போக்கிற்கு ஏற்ற பதில் தருவதாயுள்ளது. "என் குடும்பத்தைக் காப்பாற்றவே இதுவரை போராடாமல் இருந்தேன். கிளிநொச்சியில் ஓர் நகைக் கடையில் வேலை புரிந்து மாதம் 6000, ரூபா வருமானம் பெற்றேன். இதுவே என் குடும்பத்தின் ஒரே ஊதியம். இன்றைய நிலையில் சோற்றுக்காகவும், அதைத்தரும் வருமானத்திற்காகவும் போராடாமல் இருப்பதை என் மனச்சாட்சி ஏற்கவில்லை!" என்று தெரிவித்து போராளியாகியுள்ளார். "களத்தில் காயமடைந்த வீரர்களே போராடத்துடிக்கும் போது கை, கால்கள் ஒழுங்காக உள்ள நான் மட்டும் ஏன் போராடத் தயங்க வேண்டும்?" என்ற வினாவுதலோடு போர்ப் பயிற்சியாளரானார் ஜெயேந்திரன் ஜெயமோகன் என்ற 18 வயது வாலிபர். வாழ்க்கையை அரிசிக்குள் அடகு வைக்காத இப்புதியவர்களுடன் சமரசம் காணும் கருத்துப் பலத்தை இழந்துவிட் நிலையிலேயே சந்திரிகாவும் சூரியக்கதிரைப் போலவே தனது ஆயுதம் தேடும் பயணத்தையும் முடிவில்லாத தொடர்கதையாக்கி விட்டிருக்கக் காண்கிறோம்.

பலாலியில் விழுந்த ஷெல்லால் தந்தையை இழந்த செல்லத்துரை பாஸ்கரன் என்பவர் குடும்பத்தோடு மட்டுவில் நோக்கிப் புலம்பெயர, அங்கும் எறிகணைகள் துரத்தி வந்தன. அவரின் கண்ணெதிரிலேயே ஐவர் துடிதுடித்து இறந்திருக்கின்றனர். அந்தக் கோர நிகழ்வின் பின் இழந்த மண்ணை மீட்காவிடில் இந்த அவலங்களும் முடிவடையப் வதில்லையெனப் புரிந்து இவரும் களம்புகுந்தார். "என்னைவிடச் சிறியவர்களெல்லாம் போராடும்போது, களம்புக எனக்கிருக்கும் உரிமையை யாரும் தடுக்க முடியா"தென்று தமிழ்ச் சொற்களுக்கே புதுவலு கொடுத்திருக்கிறார் அமிர்தராணி முத்தையா என்பவர். இவைகள் அனைத்துமே இன்றைய தமிழினத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




தின் நிஜமான ஆத்மார்த்த ஒலிகளாகும். "வாழ்க்கையின் மிகப் பெரிய விஷயம் சாதனை புரிவதில் இல்லை. சாதனை புரிவதற்கான ஆவலில்தான் இருக்கிறது!" என்ற வாசகங்களின் வழி நோக்கினால் இவர்கள் தமிழீழப்போரின் அடுத்த கட்ட நகர்வுக்கு மட்டுமல்ல, தமிழர்கள் தொடர்பாக சிலர் தம்முள்ளேயே வளர்த்துக் கொண்டுள்ள பாதகமான கருத்துக்களிலும் அடிதலையான மாற்றங்களை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றே வரலாற்றைக் கிழித்தபடி வெளிப் பட்டிருக்கக் காண்கிறோம்.

குருடனுக்கு எப்போதுமே இருள் மட்டுமே தெரிவதைப்போல; பௌத்த பிக்குகளும் இனப்பிரச்சினையை என்றுமே சரியான கோணத்தில் பார்த்தது கிடையாது. சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையேயான போரில் சிங்களவரே எப்போதும் வெற்றிகண்டு வந்தனரென்றவாறு இவர்கள் கொண்டுள்ள இருண்மைக் கருத்திற்குள்ளும் ஒளி பாய்ச்ச வேண்டிய வரலாற்றுப் பணியும் தமிழீழப் போரையே சார்ந்து நிற்பதும் வேடிக்கையான உண்மையாகும். மில்லரின் தாக்குதல் முழங்கிய போதுதான்; அதுவரை அரசியல் மேடையில் விதுஷகன் பாத்திரமேற்றிருந்த ஜே.ஆர் அண்டை நாட்டின் பாதங்களில் சரிய நேர்ந்தது. இதன்பின் போராட்டத்தின் சக்தியே நமது மக்களுக்கான விடிவைத்தரும்! விடுதலைக்குத் தடையாகவுள்ள சகல இருண்மைகளையும் விரட்டவல்ல மூலச் சூத்திரமும் போராட்டமே! என்பதும் வெளிப்படையாகியது. எனவேதான் சிங்கள ஆட்சியாளரை சரியானபடி எதிர்கொள்ளவல்ல போர்க் குணமிக்க மக்களாக இவர்கள் நம் முன் எழுந்து நிற்கிறார்கள்.

இவை ஒரு கோணத்தில் நகர்ந்து செல்ல, சூரியக்கதிரின் பின்னர் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்களிடையே மனச்சரிவை ஏற்படுத்தும் திரைமறைவு முயற்சிகளும் அரசால் திட்டமிட்டே மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இலக்கமிடப்படாத இச்சூரியக்கதிர்களையும் விட அபாயமிக்கது நமது மக்களிடையே விதைக்கப்படும் நம்பிக்கை வரட்சிப் போக்குகள் எதிரிக்கு சாதகமாக அமைந்து விடக்கூடியவை. எனவேதான் இப்புதிய போராளிகளின் மன உணர்வுகளுடன் கண்ணுக்குப் புலப்படாத காற்றால் தொடுக்கப் பட்ட உறவுபோல உணர்வால் உணர்வு கொள்ள வேண்டியது சகல தமிழீழ மக்களதும் வரலாற்றுக் கடடமையாகும்.



நாடு, முடி, மனைவி உட்பட அனைத்தையும் இழந்து வனவாசம் கண்டு, மறுபடியும் இராமன் ஆட்சி எய்தினான் எனனும் இராம கதையும், வனவாசம் ஏறி; அஞ்ஞாத வாசமும் அனுபவித்த பாண்டவர்கள் ஈற்றில் தர்மயுத்தம் நடாத்தி ஆட்சி பெற்றார்கள் என்ற பாரதக் கதையையும் பரம்பரை பரம்பரையாகப் படித்தும், செவிவழி கேட்டும் வந்தவர்கள் தமிழ் மக்கள். சூரியக்கதிரால் கிடைத்துள்ள இவ்வனவாசத்தை அக்கதைகளின் உட்கருத்துகளுடன் ஒப்பீடு கண்டு; நமது தேசத்தை மீட்கக் கிடைத்துள்ள சரியான சந்தர்ப்பமாகவே இதைக் காணவேண்டுமென்ற தெளிவு; இந்தச் சிறக்கை முளைத்த போராளிகளிடம் தெரிகிறது. "மரத்தில் ஏறியவர் மறுபடியும் இறங்கித்தானாக வேண்டும்!" என்பது பழமொழி. இதுபோலவே குடாநாட்டில் புகுந்துள்ள இராணுவமும் ஒன்று தானாக இறங்கியாக வேண்டும். இல்லையேல் ஏறியதைவிட வேகமாக இறக்கப்படுவார்கள் என்பதற்கு இப்புதிய போர்க்குரல்களே சாட்சியங்களாகப் போகின்றன.

— கி. செ. துரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தார்மீகக் கடமை

"இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினர்தான். ஆனால், உலகில் உள்ள சிறுபான்மை இனங்களில் தமிழர்கள் மிகவும் பல முள்ளவர்கள்." இவ்வாறு முன்னர் ஒரு தடவை, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார். ஜே. ஆரின் கூற்றுக்களின் மறைவில் இருந்த பொருள் இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையாக இருப்பினும் அவர்கள் தொடர்பான விடயத்தில் சிறீலங்கா அரசு கவனமாக இருக்கவேண்டும். இல்லாது போனால் வெளியில் இருந்து அவர்களுக்கு ஆதரவான குரல்கள் பலமாக இருக்கும் என்பதேயாகும். அதிலும் குறிப்பாக தமிழகத்தில் ஏற்படும் கொந்தளிப்பு இந்திய மத்திய அரசின் வழியாக பெருந் தாக்கங்களை விளைவிக்கக்கூடியதாக இருக்கும் என்பதே ஜே. ஆரின் கணிப்பீடாகும். அவரின் அக்கணிப்பீடும் தப்பானதல்ல. ஆனால், அதை அவர் தனது காலத்தில் வெற்றிகரமாகக் கையாண்டதனால், தமிழ் மக்களின் ஆழ்ந்த சக்தியாக இருக்கவேண்டிய இந்தியாவை அவர் தனது சக்தியாகவே மாற்றிவிட்டார். இது, தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பகை, நம்பிக்கையீனம் என்பன ஏற்படக் காரணமாயின. அத்தோடு இந்தியத் தமிழக அரசியல்வாதிகளும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை தமது அரசியல் இலக்கிற்காகப் பயன்படுத்த தொடங்கியதோடு, இலங்கைத் தமிழ் இனம் வலிமையற்றது போன்றதொரு நிலை மட்டுமல்ல, காட்டிக்கொடுப்பிற்கு உள்ளாக்கப்பட்டதொரு நிலையும் உருவாகியது எனலாம்.

இந்நிலையில்தான் சிங்களப் பேரினவாத அரசு இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதை முனைப்பாக மேற்கொண்டது. ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் சிந்தனையில் எழுந்த அம்சம் அரசியல் சூழ்நிலையாக உருவெடுத்துப்போக சிங்கள ஆட்சியாளர்கள், அரசு என்ற பலத்துடன் உலகில் இருந்து பல்வேறு வடிவங்களில் கிடைக்கப்பெற்ற உதவியுடன் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாணலாம் என்ற ரீதியில் முனைப்பாகச் செயல்பட்டனர். சிங்கள அரசின் இந்த நடவடிக்கையானது தமிழ்த் தேசிய இனத்தை அழித்தல் என்பதோடு,



தமிழர் தாயகத்தை சிதைத்தல் அடிப்படையிலானதாகவும் இருந்தது. இதேசமயம் இச்சிறுபான்மை இனம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அண்டை நாட்டில் உள்ள தம் இனத்தவரிடம் இருந்து எதுவித உதவியும் தனக்குக் கிடைக்கப்பெறாமல் இருந்தது. இது ஒருவகையில் அபாயகரமான சூழ்நிலையாகவும் இருந்தது மட்டுமல்ல ஒரு வெட்கக்கேடான விடயமாகவும் இருந்தது. அதாவது உலகில் தமிழ் தேசிய இனம் தாயகங்களாகக் கொண்டுள்ள இரு இடங்களில் ஒன்றில், அவ்வினம் அங்குள்ள பெரும்பான்மை இனம் ஒன்றினால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், அண்மையில் இருந்த மற்றைய தமிழர் தாயகம் கண்ணை மூடிக்கொண்டிருந்தது எனலாம்.

'இலங்கையில் இடம்பெறும் போரானது தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் எதிரானது மட்டுமே' என சிங்களவர்கள் கூறிக்கொண்டாலும், உண்மையில், இடம்பெறுவது தமிழர் தாயக ஆக்கிரமிப்பும், தமிழினப் படுகொலையுமே ஆகும். அதாவது இப்போருக்கு அரசு எதைக் கூறிக்கொண்டாலும் இதனால் பாதிக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் தமிழ் மக்களின் உயிரும், கலை கலாச்சாரமுமாகவே இருந்தன. ஆகையினால், யுத்தம் புலிகளுக்கு எதிரானது என்பது தவறானது ஆகும். சிங்கள அரசின் படையெடுப்புக்கள் தமிழ் மக்களிற்கும் அவர்கள் தாயகத்திற்கும் எதிரானது என்பது நிதர்சனமானது. தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கு குரல் கொடுத்தல் என்பது சிலர் விமர்சனம் செய்வது போல புலிகளுக்கு ஆதரவான குரலாகவே இருக்கும் என்ற வாதம் நியாயப்பாடானது அல்ல. ஒடுக்கப்படும் தமிழ் இனத்துக்கு குரல் கொடுத்தல் என்ற ரீதியிலேயே இருக்கும்.

இந்நிலையில் தற்போது தமிழகத்திலும் இந்தியாவிலும் புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள அரசுகள் முன்னைய அரசுகள் போல் அல்லாது இங்குள்ள ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க முன்வர வேண்டும். இது தமிழக அரசைப் பொறுத்தவரை ஒரு தார்மீகக் கடமையாகும். அதாவது உலகிலுள்ள தமிழ் மக்களுக்கு முழுமையாக இல்லாவிட்டாலும், அரசு என்று கணிக்கப்படும் நிலையிலுள்ள தமிழக அரசு இவ்விடயத்தில் தீவிர கவனத்தை மேற்கொள்ள வேண்டும். இது அவர்களின் அரசியல் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட, தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு உட்படாததாக தமிழினம் என்ற தனிநோக்கின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவேண்டியதாகும். இந்த வகையில் தற்பொழுது தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தலைவர் மு. கருணாநிதியும் இலங்கைத் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது அவரினதும் தி.மு.க. அரசினதும் தார்மீகக் கடமையாகும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புள்வாய்த்



இம் முறை
பெருங்குடமுழுக் காட்டுவது போல கொட்டிற்று வானம்
புலம்பெயர்ந்து வந்த பறவைகள்
நிரம்பிவழிந்த நீர்த்துறையெங்கும்
முங்கிக் குளித்தன; முத்தெடுத்துதறின
கூரலகால் பிறகெடுத்துக் கோப்பன போல்வன.

எடுத்தூதிய வெண்சங்கென எழுகின்ற கொக்குகள்
அசை நடை நாரைகள்,
கன்னங்கரேலென நீர்க்காகங்கள் ஊன
வண்ணம் பலப்பல
இயற்கையெடுத்த விழாக் கோலம் போல.

இனிய பறவைகாள்
உங்களைப் போலவே வண்ணம்பலவுடைய மக்களின்
விழாக் கோல வாழ்விருந்த கிராமம்தான் இதுவும்.
எதற்கோ வியூகம் வகுத்தவர்க்கஞ்சியவர்
வேரற விட்டுப் போய் நாளாயிற்று.

நவராத்திரியின் கும்பச்சரிவோடு போனவர்தான்
மீளக் கொலுவேறவில்லை
கொலுவிருந்த வாழ்வு குலைந்து போய்க் கிடக்கிறது.
கூடி வாழ்தல் என்பது அழகிய கொலுநேர்த்தியல்லவா?
எத்தனை நவராததிரிகள் வந்தேகின.
கும்பப் பொலிவும், கூட்டுக்களியும், விழாக் கோலமும்தான்
இல்லையாயிற்று.

மார்கழி எம்பாவை வந்தாள்
மழைக்கண் திறந்து பொழிந்தவாறே.
வந்தவளை பட்டுக் குடையெடுத்து வரவேற்று
"ஏலோரெம்பாவாய்" என ஊர்கோலமாய்ப் போகவும்
ஆளணியற்ற தவக்குறைவு எமக்காச்சு
பாவம் எம் பாவை போயினாள்
பண்ணிழந்த தெருவழியே.

மாரி வந்தென்ன?
ஏரழகின்றிக் கிடந்தன வயல்கள்
தை மகள் வந்தாள்.
கைநிரம்ப வெறுமையுடன் கந்தலுடை பூண்டிருந்தது கிராமம்.
பொங்கல், படையலென பூரிப்பின் ஓரவிழும்
உண்டிலள் போனாள் ஒளியிழந்த முகத்தினளாய்.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை"
வெண்தாடிப் புலவனது பாட்டோசை
"கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"

என்ன செய்யலாம்
கூழை நினைத்தாலே வாயுறத்தான் செய்கிறது.
ஊதிக் குடிக்க உதடும் குவிகிறது.
ஒடியலுக்கும் ஏது குறை?
போனவரியத்தானும் கிடந்துளுத்துக் கொட்டுது.
கூடிக்கலந்துண்ணச் சாதிசனம்?
இந்த ஆடிப்பிறப்பிற்கும் விடுதலை ஆனந்தம் இல்லையாச்சு.

விழாக்காலத் தேதி விவரங்களே
மறந்து போய்க் கிடக்கும் கிராமமதில்
ஓசை ஒலியெலாமாகி நிறைந்த பறவைகள்
உங்கள் உயிர்த்துடிப்புகள் இனியவை.

வயல்வெளி நடப்புகள், சிறகடிப்புகள்,
வெளிநிரம்பிடும் சங்கீதம், யாவுமே
இனியவை என்பேன் எனினும்
சிறு துயரம்
நீராம்பலெனத் தலைநீட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூது



மாரிகழிய மறுபடியும் வருகின்ற
கோடை வறள்வில் இக் குதூகலங்கள்
சிறகை மடக்கி விடைபெறுதல் கூடும் அல்லவோ,
நினைக்கையில் சிறுதுயர் எழும்
எனினும் உமை நோகேன்
அற்ற குளத்து அறுநீர்ப்பறவையென
கேலியாடும் எண்ணம் சிறிதுமில்லை.
நானறிவேன்
தாயக மீள்வில் இருக்கும் தனிச்சுகம்.

பெருவெளியில் தலைநீட்டும்
உயர்மரக் கொம்பரில்தானே உங்கள் கூடுகள் உள்ளன.
அறிவேன்
குஞ்சு பொரித்தலும், குதலைகட்கு உவந்து
ஊட்டலும், காத்தலும், இங்காகலாம்
சிறகு முளைத்தவற்றை
கூட்டிச்செல்வதாய குதூகல நிகழ்வெல்லாம்
தாயக வெளிநோக்கியல்லவோ
நானறிவேன்

நீரறிவீரோ
என் நெஞ்சிலும்
கூடு கட்டி வாழும் குருவிகட்கு வாசலுண்டு
கூடிழந்து போனவரின்
நேசம் விட்டுப் போகாத நெஞ்சகத்தில் சோகமுண்டு
நீரறிய மாட்டீர்.

நீரறிதல் கூடுமெனில்
கோடைவழிப் போக்கில்
குளிர்த்தி வற்றிப்போன எங்கள் வாழ்நிலையின் சோகத்தை
எம்மவரைக் கண்டு இயம்புதல் கூடுமோ?
சற்றெமக்கு இரங்குங்கள்
நாளை நாளையெனக் காத்திருந்த நம்பிக்கை
முளைகருகிப் போகுமுன்னோ வரவுண்டோ கேளுங்கள்.

"கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலது தழீசிக்"
கதியிற் கலங்கிய புலவரென கைவிடப்பட்ட முதியவர்
கிழித்துப்போட்ட ஒடியல் கிழங்கென
வாடிச் சுருங்கி மனம் மெலிந்து
கடைசி ஒரு சொல்லாடலில் விடைபெறக்
காத்திருப்பதை சொல்லுங்கள்.

மாண்டோரும் மற்றும் தென்புலத்தோரும்
தாழ்வாரத் தவமியற்றிக் காத்திருந்தும்
திவசச் சோறுமின்றி, பரிந்துவக்கும் படையலுமின்றி
வெற்றுப் பாத்திரராய் மீளுவதைச் சொல்லுங்கள்.

காலப்புற்றெழுந்துபடர்ந்தாலும்
உட்கனலவியாத் தவ முனிவரென
ஒளியேற்றக் காத்திருக்கின்றன வீடுகள் ஒவ்வொன்றுமென
உரக்கவே
அழுத்துங்கள்.

வேறென்ன விளம்ப இருக்கிறது
நீங்கள் மூளுகையில்
விட்டுவிட்டுச் செல்லுகின்ற ஆனந்த வித்துகள்
முளை கொள்ளும் நாள்வரையும்
நாங்கள் இருப்போமா
நன்னிலத்தின் காவலராம்
எங்களுடைச் சந்ததிக்கேனும் இதன்
வேரடியில் வாழ்வு சிலிர்க்கட்டும்.

சு. வில்வரத்தினம்
'காற்றுவழிக்கிராமம்'
19.09.1993

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு துரோகியின் கவலை



சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரின் அண்மைக் காலக் கவலையெல்லாம் விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் பெருமளவில் நிதி உதவி பெறுவதோடு அங்குள்ள கல்விமான்கள் உட்பட பல தரப்பினர் மத்தியில் செல்வாக்குடன் இருக்கின்றனர் என்பதேயாகும். இது குறித்து அண்மையில் அவர் அடிக்கடி பிரஸ்த்தாபித்து வருகின்றார். இறுதியாக அவர் ரொய்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்த பேட்டியிலும், விடுதலைப்புலிகள் அமெரிக்காவின் மருத்துவர்கள், சட்ட தரப்பினர் எனப் பலதரப்பட்டவர்களின் ஆதரவுடன், செல்வாக்குடன் இயங்கின்றார்கள் எனத் தெரிவித்ததோடு, இப்போது விடுதலைப்புலிகளுக்கு வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகையான நிதி உதவிகிடைத்து வருகின்றது. கனடாவில் மாதாந்தம் *2* கோடி ரூபாவும், பிரிட்டனில் *1* கோடி *95* இலட்சம் ரூபாவும் இவ்வாறு திரட்டப்படுவதாக தெரிவித்துள்ளார். லக்ஸ்மன் கதிர்காமரின் இக் கவலையெல்லாம் வெளிநாடுகளில் இவ்வாறு கிடைக்கப்பெறும் நிதி உதவியே விடுதலைப்புலிகள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த, பெருமளவில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வாய்ப்பாக இருக்கின்றது என்பதும் ஆகும். இதன் காரணமாக இந்த நிதி உதவிகள் விடுதலைப்புலிகளுக்கு கிடைக்கும் வழிகளை மேற்கு நாடுகள் தடைசெய்ய வேண்டுமென அவர் விரும்புகின்றார். ஆனால் மேற்கு நாடுகளில் கதிர்காமர் கூறுவது போன்று பெருந்தொகையான நிதியும் ஆதரவும் செல்வாக்கும் தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகளுக்கு கிடைக்குமானால் அது வெளிநாடுகளில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள, குறிப்பாக கதிர்காமர் மேற்கொண்ட பெரும் முயற்சியிலான சிங்கள அரசிற்கு ஆதரவான பிரச்சார நடவடிக்கை தோல்வி கண்டுள்ளது என்பதை அவரே ஒத்துக் கொள்வது போன்றாதாகும். அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்க அமைப்பு என்பதும், சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களை விடுவிக்கவும் அரசியல் தீர்வு ஒன்றிற்காகவுமே இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்பதையும் தமிழர்கள் எவரும் நம்பவோ ஏற்கவோ தயாராக இல்லை என்பதே அதுவாகும். மறுவளமாகக் கூறுவதானால் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடுகின்ற அமைப்பே ஒழிய அது ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்பதே ஆகும். இந்த நிலையில் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதும், நிதி உதவி செய்வதும் தவிர்க்கமுடியாத ஒன்றேயாகும்.

இந்த நிலையில் அமைச்சர் கதிர்காமரோ, வெளிநாட்டு அரசாங்கங்கள் இந்த நிதி சேகரிப்பு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது, அவரது கையாலாகத்தனத்தின் வெளிப்பாடே ஆகும். ஆனால் வெளிநாடுகள் குறிப்பாக மேற்குலக நாடுகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமைக்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று, அமெரிக்க அரசு கூறியிருப்பது போல் சட்டத்திற்கு உட்பட்ட ரீதியில் சேகரிக்கப்படும் நிதி தொடர்பாக தமது அரசினால் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்பதாகும். இந்த நிலையானது சகல மேற்கு நாடுகளுக்கும் பொருந்தக் கூடியது. அடுத்ததாக முக்கியமானது, விடுதலைப் புலிகள் இயக்கத்தை சந்திரிகா அரசு என்னதான் பயங்கரவாத இயக்கம் எனக் கூறிக்கொண்டாலும் விடுதலைப் புலிகளின் அணுகுமுறைகள் சில அந்த நாடுகளுக்கு திருப்தி அளிக்காது இருப்பினும் கூட விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்களிடமும், அதுவும் குறிப்பாக தமது நாடுகளில் குடியேறியுள்ள தமிழ் மக்களிடையே உள்ள செல்வாக்கும், புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமென அவர்களால் இலகுவில் முத்திரை குத்திவிட முடியாது. அதாவது புலிகள் இயக்கத்திற்கு தனியார் அமைப்பொன்றிடமிருந்தோ, குறிப்பாக சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்தோ நிதி உதவி வழங்கபட்டவில்லை. மக்கள் தமது உழைப்பில் இருந்தே நிதி உதவி வழங்குகின்றனர். ஆகையினால் இந்த நிதி உதவி வழங்குவதை தடைசெய்யவோ அன்றி அதை தடைசெய்தாலும் அவை சாத்தியமாகக் கூடியவையோ அல்ல என்பதும் மேற்குலக நாடுகளுக்குத் தெரியும். இந்த வகையில் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் அளிக்கும் நிதி உதவியானது தனியாகப் பொருளாதார ரீதியான உதவி மட்டுமல்ல தமிழீழப் போராட்டதின் நியாயத்தையும் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பினை புலிகளுக்கு அளிக்கும் அங்கீகாரத்தையும் வளங்கும் ஒரு அம்சமாகும். இது இனத்துரோகிளான கதிர்காமர் போன்றவர்களுக்கு கவலை அளிக்கும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் இது இன உணர்வுமிக்க தமிழ் மக்களுக்கு திருப்தி அளிக்கும் ஒன்றாகும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்காவிலிருந்து வந்த மகன்

ஐ. எஸ். சிங்கர்
(I.S.SINGER)



லென்ற்சின் ஒரு மிகச் சிறிய கிராமம். மணற்பாங்கான சந்தையில் குடியானவர்கள் வாரத்துக்கு ஒருமுறை கூடுவர். சிறு குடிசைகள் அதனைச் சூழ்ந்திருந்தன. அவற்றின் கூரைகள் வைக்கோலால் வேயப்பட்டிருந்தன. அல்லது மொஸ் மரத்தின் ஓலைகள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருக்கும். வீடுகளின் புகைக்கூடுகள் பானைகள் போலிருக்கும். குடிசைகளிடையே வயல்கள் இருந்தன. அங்கு கிராமத்தவர்கள் விவசாயம் செய்தனர். அல்லது ஆடுகளை மேய்த்தனர்.

அங்குள்ள மிகச் சிறிய குடிசை ஒன்றில் வயதான பேர்ல் வாழ்ந்து வந்தான். அவனது மனைவியை பேர்ல்சா (பேர்லின் மனைவி) என எல்லோரும் அழைத்து வந்தனர். பேர்ல் தனது எண்பதுகளில் இருந்தான். ரஷ்யாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதனால், போலந்தில் குடியேறிய யூதன் அவன். அவன் பலமான குரலில் பிரார்த்தனையில் ஈடுபடும்போது, லென்ற்சினில் உள்ளவர்கள் அவனைப் பரிகாசம் செய்வர். பேர்ல் பேசும்போது, `R'ஐ அழுத்திப் பேசுவான். அவன் விரிந்த தோள்களும் குள்ளமான தோற்றமும் கொண்டவன். கால்களை தரையில் தேய்த்தபடி நடப்பான். ஒரு சிறிய தாடி அவனுக்கிருந்தது. கோடையிலும் மாரியிலும் ஆட்டுத்தோலால் ஆன தொப்பி ஒன்று அவன் தலையில் இருக்கும். தடித்த காலணிகளும், அளவில்லாத மேலாடையும் (சௌகரியத்திற்காக) அணிந்திருப்பான்.

பேர்ல் தம்பதியினருக்கு சாமுவெல் என்ற பெயருடைய மகனொருவனிருந்தான். அமெரிக்காவிற்குப் போய் நாற்பது வருடங்கள் ஆகிறது. அங்கு அவன் ஒரு மில்லியனர் ஆகிவிட்டான் என லென்ற்சினில் பேசிக்கொண்டார்கள். ஒவ்வொரு மாதமும், தபால்காரன் கடிதமும் மணி ஓடரும் வயதான பேர்லிற்கு கொண்டு வருவான். கடிதம் ஆங்கிலத்தில் வருவதால் யாருமே அதை வாசிக்க முடிவதில்லை. லென்ற்சினில் யாருக்குமே ஆங்கிலம் தெரியாது. சாமுவேல் பெற்றோருக்கு மாதாமாதம் எவ்வளவு பணம் அனுப்புகிறான் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. பேர்லிடம் அரை ஏக்கர் நிலமும் ஒரு ஆடும், ஒரு மாடும், சில கோழிகளுமிருந்தன. இருவரும் வருடத்தில் மூன்று தடவைகள் சக்ரோக்சிமிற்குப் போய் மணி ஓடர்களை மாற்றிக்கொண்டு வருவார்கள். அவர்கள் அப்பணத்தை உபயோகிக்கவில்லை. தோட்டமும் ஆடும் மாடும் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தன. பேர்ல்சா முட்டையும் கோழிக்குஞ்சும் விற்றுவந்தாள். அதனால் கிடைப்பது, பாணுக்கான மாவை வாங்கப் போதுமானதாக இருந்தது.

பேர்ல் பணத்தை எங்கு வைத்திருக்கிறான் என லென்ற்சினில்

ஐ.எஸ்.சிங்கர், ஜிடிஸ் மொழியில் எழுதும் அமெரிக்க எழுத்தாளர். ''ஒரு எழுத்தாளர் தனது சொந்த மொழியில் எழுதவேண்டும் அல்லது எழுதவே தேவையில்லை'' என்று சொன்னவர்.போலந்தில் யூத அடிப்படைவாதக் குடும்பமொன்றில் 1904 ஆம் ஆண்டு பிறந்தார். இளமையில் யூத மதப் பாடசாலையொன்றில் கல்வி கற்றார். ஆனால், பின்னர் கடவுளின் சக்தியை விட, ஐதிகங்களும், ஏன்? என மறு கேள்வி கேட்க முடியாத வாதங்களுமே மக்களை ஆள்கின்றன எனக் கண்டுகொண்டவர், மதச்சார்பற்ற எழுத்தாளரானார். 1926ல் இவரது முதலாவது கதைத் தொகுதியும், விமர்சனக் கட்டுரைகளும் வெளியாகின. 1935ல் அமெரிக்காவுக்குச் சென்றார். 1945ல் ஆங்கிலத்தில் வெளியான 'தி பீப்பிள்ஸ் மொஸ்கெற்' என்ற நூலின் மூலம் பிரபலமானார். பல நாவல்கள் தொடர்ந்து வெளியாகின. 1984ல் 'காதலும் புலம்பெயர் வாழ்வும்' என்ற நாவல் வெளிவந்தது. போலந்தில் வாழும் யூதர்களின் வாழ்க்கையே பெரும்பாலான நாவல்களின் கருப்பொருளாகும். யூதக் கட்டுக்கதைகளும் அவர்களது சம்பிரதாயங்களும் கதைகளில் பரவிக் கிடக்கும். பிசாசுகளும் கெட்ட தேவதைகளும், கதைகளில் வரும். சமீபகால எழுத்துக்களில், அமெரிக்காவும் நியூயோர்க்கும் வருகின்றன. ''எனக்கு இங்கும் வேர்கள் அடிவிட்டன'' என்கிறார் சிங்கர். 'ஜிம்பிள் என்ற மடையன்' இவரது சிறுகதைத் தொகுப்புக்களில் பிரபலமானது. 'அமெரிக்காவிலிருந்து வந்த மகன்' என்ற கதையில், இருவேறான சமூகங்களின் முரண்பாடுகள் சித்தரிக்கப்படுகின்றன. 1975 ஆம் ஆண்டு சிங்கர், இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

ஆங்கிலம் வழியாகத் தமிழில்: சு. மகேந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாருமே கருத்தில் கொள்ளவில்லை. லென்ற்சினில் திருடர்களும் இல்லை. குடிசையில் ஒரு அறை மட்டுமே இருந்தது. அதில் மேசை, இறைச்சி வைக்கும் இறாக்கை, இரண்டு கட்டில்கள் என்பவற்றுடன் ஒரு மண் அடுப்பும் இருந்தது. சிலவேளைகளில் கோழிகள் மரக்கூடுகளில் தங்கும். குளிர் காலங்களில் அடுப்புக்குப் பக்கத்தில் உள்ள தொட்டிக்குள் வந்துவிடும். காலநிலை மோசமானால், ஆடும் கூட வீட்டுக்குள் ஒதுங்குவதுண்டு. கிராமத்தில் வசதி படைத்தவர்கள் மண்ணெண்ணெய் விளக்குகளைப் பாவித்தனர். பேர்லோ அல்லது அவனது மனைவியோ புதுநாகரிகத்துடன் கூடிய பொருட்களில் ஆசை கொண்டதில்லை. ஒரு கிண்ணத்தில் எண்ணெயும் திரியும் இருந்தால் போதாதா? சபத்துக்காக மட்டும், கடையில் மூன்று மெழுகு திரிகளை பேர்ல்சா வாங்குவாள். கோடை காலங்களில் சூரியன் உதயமாவதற்கு முன்னரே இருவரும் எழுந்துவிடுவார்கள். கோழிகள் அடையும்போதே நித்திரைக்குப் போய்விடுவார்கள். குளிர்காலத்தில் வரும் நீண்ட மாலை வேளைகளில் பேர்ல்சா ராட்டினத்தில் சணல்நூல் நூற்பாள். அவளுக்கு முன்னால் அமர்ந்தபடி ஒய்வை அனுபவிப்பான் பேர்ல்.

ஒருநாள் மாலைப் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு சைனகொக்கிலிருந்து திரும்பிய பேர்ல், தான் கேள்வியுற்ற செய்திகளை மனைவிக்குக் கூறினான். சார் பதவியிலிருந்து விலகவேண்டுமென வேர்சோவில் வேலைநிறுத்தக்காரர்கள் கூறியுள்ளனர். சமய போதகரான டொக்ரர் ஹெசல் என்பவர், யூதர்கள் பாலஸ்தீனத்தில் மீண்டும் குடியேற்றப்படவேண்டும் என்று கூறியுள்ளார். இவற்றையெல்லாம் பேர்ல்சா அவதானத்துடன் கேட்டாள். சதைப்பற்றுக் குறைந்த தனது தலையை ஆட்டினாள். அவளது முகம் மஞ்சள் நிறமுடையது. சுருக்கங்களுடன் முட்டைக்கோசு இலைகளைப் போலிருக்கும். அவளது கண்களுக்குக் கீழே உள்ள பகுதி, நீல நிறத்துடன் திறந்த சாக்குகள் போலத் தெரியும். அவளோ அரைச் செவிடு. அதனால் பேர்ல் தான் கூறிய எல்லாவற்றையும் திரும்பவும் கூறவேண்டியிருந்தது. அவற்றைக் கேட்டபின் "இவையெல்லாம் பெரிய நகரங்களில் நடக்கும் விஷயங்கள்" என்றாள் பேர்ல்சா.

லென்ற்சினில் வழமையாக நடைபெறும் காரியங்களைத் தவிர வேறு எதுவுமே நடைபெறவில்லை. மாடு ஒன்று கன்று ஈன்றது. ஒரு இளம் சோடிக்கு விருத்த சேதனம் நடந்தது. விருந்தும் வைக்கப்பட்டது. ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்காக விருந்தொன்றும் வைக்கப்படவில்லை. எப்போதாவது ஒருவர் இறந்தார். லென்ற்சினில் சவக்காலை இல்லை. பிணத்தைப் புதைப்பதற்காக சக்ரோக்சிமிற்கு எடுத்துச் செல்வார்கள். இப்போது குறைந்தளவு இளைஞர்களே லென்ற்சினில் இருக்கிறார்கள். இளைஞர்கள் நொவிடோர் என்றும் சக்ரொக்சிம் என்றும் வோர்சோ என்றும் போய்க்கொண்டிருக்கிறார்கள். சிலர் சாமுவெல் போல் அமெரிக்காவுக்குப் போகிறார்கள். அவர்கள் எழுதும் கடிதங்கள் வாசித்துப் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஜிடிசுடன், அவர்கள் எங்கு சென்றார்களோ அந்த நாட்டு மொழிகளும் கலந்துவிட்டிருக்கின்றன. அவர்கள் அனுப்பும் படங்களில், ஆண்கள் நீண்ட பட்டுத் தொப்பிகளையும் பெண்கள் நிலச்சுவாந்தர்களின் மனைவிமார் அணிவதுபோல் ஆடம்பரமான உடைகளுடனுமிருக்கிறார்கள்.

பேர்லிற்கும், பேர்ல்சாவுக்கும் கூட இப்படியான புகைப்படங்கள் வந்தனதான். அவர்களது பார்வை மங்கிக்கொண்டே வருவதனால், அவர்களினால் அப்படங்களில் உள்ளவர்களை சரியாக மட்டிடமுடியவில்லை. சாமுவெலிற்கு பிள்ளைகளும் பெண்களுமிருந்தனர். அவர்களின் பெயர்கள் யூதப்பெயர்களாக இருக்கவில்லை. பேர்லின் பேரப்பிள்ளைகள் கூட மணமுடித்து தமது வசந்தகாலத்தைக் கடந்திருந்தனர். அவர்களின் பெயர்கள் பேர்லிற்கோ பேர்ல்சாவிற்கோ மனதில் நிற்கவில்லை. அவை புதுமையானவையாக இருந்தன. ஆனால், பெயர்களில்தான் என்ன இருக்கிறது. அமெரிக்கா நீண்ட தூரத்திலிருக்கிறது. கடலின் மறு கரையில் அது உள்ளது. லென்ற்சினுக்கு வந்த யூதமதப் போதகர் ஒருவர், அமெரிக்காவில் மனிதர்கள் தலை கீழாயும், கால் மேலாயும் இருக்க நடக்கிறார்கள் எனச் சொன்னார். அதில் பொதிந்திருந்த கருத்தை பேர்ல்சாவாலோ பேர்லாலோ சரியாகக் கிரகித்துக்கொள்ள முடியவில்லை. அது எப்படித்தான் முடியும். ஆனால், ஆசிரியர் கூறியுள்ளதால், அது உண்மையாகத்தான் இருக்கமுடியும். சிறிது நேரம் பேர்ல்சா சிந்தனையில் சூழ்ந்தாள். பின், "ஒருவன் எல்லாவற்றிற்கும் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்வான்" என்றாள். கடுமையாகச் சிந்தனை செய்யத் தொடங்கினால் - கடவுள் கோபித்துக்கொள்வார் - அது நகைச்சுவை உணர்வையும் குறைத்துவிடும்.



ஒருநாள், அன்று வெள்ளிக்கிழமை. காலையில் சபத்துக்கான ரொட்டிகளை தயாரிப்பதற்காக பிசைந்த மாவிற்கு மேலும் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தபோது, அறைக் கதவைத் திறந்து ஒரு கனவான் உள்ளே வந்தான். அவன் மிகவும் உயரமானவனாக இருந்தான். உள்ளே நுழையக் குனியவேண்டி இருந்தது. அவனது முகத்தின் அரைவாசியை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மறைத்துக்கொண்டிருந்தது அவன் அணிந்திருந்த தொப்பி. கோட்டின் ஓரங்கள் கம்பளி வைத்துத் தைக் கப்பட்டிருந்தன. சக்ரொக்கிமைச் சேர்ந்த சாஸ்கல் என்ற வண்டி ஓட்டி செப்புப் பூட்டுக்களுடன் கூடிய தோலால் ஆன இரண்டு பிரயாணப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு கனவானின் பின்னே வந்துகொண்டிருந்தான். பேர்ல்சா திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் கனவான் சுற்றுமுற்றும்



பார்த்துவிட்டு, ஜிடிசில் "இதை வைத்துக்கொள்" என ஒரு வெள்ளி ரூபிளை அவனிடம் கொடுத்தான். வண்டிக்காரன் மிகுதியை கொடுக்க முனைந்தான். "வேண்டாம் நீ இப் போது போகலாம்" என்றான் கனவான்.

வண்டில்காரன் கதைவைச் சாத்திய உடனேயே கனவான், "அம்மா நான்தான் உங்களது மகன் சாமு வெல் - சாம்" என்கிறான்.

www.tamilarangam.net

இந்த வார்த்தைகளைக் கேட்ட துமே பேர்ல்சாவின் கால்கள் உணர்வை இழந்தன. மாத்துணிக் கைகள் ஒட்டிக்கொண்டிருந்த அவ ளது கைகள், செயல்திறனை இழந் தன. கனவான் அவளைத் தழுவிக் கொண்டான். அவளது கன்னத்தை யும் நெற்றியையும் கனவான் முத்த மிட்டான். பேர்ல்சாவின் வாயிலி ருந்து கோழி கொக்கரிப்பது போன்ற சத்தம் கேட்டது. 'எனது மகனே'

அந்த நேரம் பார்த்து பேர்ல் விறகுக் கொட்டிலில் இருந்து வெளியே வந்தான். அவனது கைகள் விறகை அணைத்தபடி இருந்தன. ஒரு கன வான் தனது மனைவியின் நெற்றி யில் முத்தமிடுவதைக் கண்டவன், "இங்கு என்னதான் நடக்கிறது" எனக் கூக்குரலிட்டான்.

பேர்ல்சாவிலிருந்த பிடியை விட்ட சாமுவெல், பேர்லை ஆரத் தழுவினான். "அப்பா"

நீண்ட நேரத்திற்கு பேர்ல் ஒரு சொல்லையும் உதிர்க்கவில்லை. தான் படித்திருந்த யூடிஸ் பைபிளி லிருந்து பரிசுத்தமான வார்த்தைக ளைக் கூற நினைத்தான். ஆனால், அவனுக்கு எதுவுமே நினைவுக்கு வரவில்லை. சற்றுப் பின்னர், "நீ சாமுவெல்தானே" எனக் கேட்டான்.

"ஆம் அப்பா நான்தான் சாமு வெல்"

"என்றும் உன்னுடன் அமைதியி ருக்கட்டும்." மகனின் கைகளைப் பற்றிக்கொண்டான். அவனால், தான் ஏமாற்றப்படுகிறேனோ என்ற எண்ணத்திலிருந்து மீளமுடிய வில்லை. இங்கு நிற்கும் இந்த மனி தனைப் போல் சாமுவெல் உயர மாகவோ பருமனாகவோ இருக்க வில்லையே. ஆனால், சாமுவெல் பதினைந்து வயதிலிருந்த தோற்றமே பேர்லிற்கு நினைவில் இருந்தது. அப் போதுதான் அவன் வீட்டை விட்டு அமெரிக்காவிற்குப் போனான். மிகத் தொலைவிலுள்ள அந்த நாட்டிலி ருந்தபோது அவன் பெருத்துவிட் டான்.

"இங்கு வருவது பற்றி நீ எங்க ளுக்குத் தெரியப்படுத்தவில்லையே?"

"என்னுடைய கேபிள் உங்களுக் குக் கிடைக்கவில்லையா?"

பேர்லிற்கு கேபிள் என்றால் என்ன என விளங்கவில்லை.

கைகளை ஒன்றுடன் ஒன்று தேய்த்து அதிலிருந்த மாவை நீக்கிய பின், பேர்ல்சா தனது மகனைக் கட்டிப்பிடித்தாள். அவளை சாமு வெல் மீண்டும் முத்தமிட்டான்.

"அம்மா கேபிள் கிடைக்கவில் லையா?"

"என்ன?" எனக் கூறியவள், "இவற்றை எல்லாம் பார்த்த பின் னர் சாவதில் கூட மகிழ்ச்சி அடை வேன்" என்றாள். அவளது குரலில் திகைப்படைந்த தன்மை காணப் பட்டது. அவள் கூறிய அந்த வார்த்தைகள் பேர்லிற்கும் ஞாபகம் வந்திருக்குமேயானால், அவனும் அதைத்தான் கூறி இருப்பான். சில கணங்களில் தன்னிலை அடைந்த பேர்ல், "பெஸ்ஸா இம்முறை சபத் திற்கு ஸ்ருவுடன் ஸ்பெசலான புடிங்கும் செய்ய வேண்டியிருக்கும்" என்றான்.

பேர்ல் பல வருடங்களுக்குப் பின் இன்றுதான் மனைவியைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெயர் சொல்லி அழைத்திருக்கிறான். அவன் அவளை அழைப்பதென்னவோ, 'இங்கே கவனி', 'சொல்லேன்' என்ற வார்த்தைகள் மூலமே. இளம் வயதினரும், பட்டினங்களில் வசிப்போரும் மனைவிமாரை பெயர் சொல்லி அழைக்கின்றனர். இப்போது, பேர்ல்சா



அழத் தொடங்கிவிட்டாள். அவளது கன்னத்தில் விழுந்த கண்ணீர்த் துளிகள் மஞ்சள் நிறமாகத் தெரிந்தன. அவளுக்கு எல்லாம் மங்கலாகத் தோன்றியது. "இன்று வெள்ளிக்கிழமை. சபத்திற்கான ஆயத்தங்களைச் செய்யவேண்டும்" என அவள் பலமாகக் கூறினாள். மாவைப் பிசைந்து ரொட்டியைச் சுட்டெடுக்க வேண்டும். வந்திருப்பவன் எவ்வளவு முக்கியமான விருந்தாளி. சிறந்த வகையில் சபத்திற்கான ஸ்ரூவைச் செய்யவேண்டும். குளிர்கால மாலைப்பொழுதுகள் குறுகியவை. அவள் விரைவாகச் செயல்படவேண்டும்.

www.tamilarangam.net

மகனுக்கு, அவள் [illegible]றை எல்லாம் நினைத்து வருத்தப்படுகிறாள் என்பது புரிந்துவிட்டது.

"அம்மா நான் உனக்கு உதவுகிறேன்"

பேர்ல்சா சிரிக்க முயன்றாள். அடைபட்ட விம்மல் ஒன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது. "நீ என்னதான் கூறுகிறாய். கடவுள் மன்னிப்பாராக"

அந்தக் கனவான் தனது மேல் கோட்டையும் உள்கோட்டையும் கழற்றினான். உள் அங்கி மட்டும் உடம்பில் இருந்தது. ஒரு கெட்டியான மணிக்கூட்டுடன் கூடிய, தங்கத்தாலான செயின் ஒன்று அதன் மேல் கிடந்தது. உள் அங்கியின் கைகளை சுருட்டிவிட்டான். நீண்ட தொட்டிக்குப் பக்கத்தில் வந்தான். "அம்மா நான் நியூயோர்க்கில் பல காலமாக பேக்கராக இருந்தவன்" எனக் கூறிக்கொண்டு தண்ணீரைப் பிசைந்த மாவின் மேல் மேலும் விட்டு, அதனைப் பிசையத் தொடங்கினான்.

"என்ன எனது அருமை மகனே! யார்தான் எனக்குக் கடைசிப் பிரார்த்தனையைக் கூறப்போகிறார்களோ" என அழத்தொடங்கினாள். அது மனதைத் தொடுவதாக இருந்தது. அவளது பலம் முழுவதையும் இழந்திருந்தாள். கட்டிலில் முடங்கியபடி படுத்தாள்.

பெண்கள் எப்போதும் இப்படித்தான் என பேர்ல் தனக்குள் சொல்லிக்கொண்டான். மேலும் விறகு கொண்டுவருவதற்காக கொட்டகைக்குச் சென்றான். அடுப்படியில் ஆடு படுத்துக்கொண்டது. அது, விநோதமான உடைகளுடன் திகழும் அந்த நெடிய மனிதனை, விறைப்புடன் நிலையாக உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தது.

அயலவர்கள், பேர்லின் மகன் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறான் என்ற செய்தி கேட்டு, அவனை வரவேற்க வந்தனர். சில பெண்கள் சபத்திற்கான உணவைத் தயாரிப்பதற்கு பேர்ல்சாவிற்கு உதவினர். சிலர் சந்தோச மிகுதியால் அழுதனர். ஒரு திருமணத்தின் போது இருப்பது போல் அந்த அறை திகழ்ந்தது.

அவர்கள் "இங்கில்லாத வகையில் என்ன புதுமைகள் அமெரிக்காவில் இருக்கின்றன" எனக் கேட்டனர்.

"அமெரிக்காவில் எல்லாமே ஒழுங்காக இருக்கின்றன" என்றான் சாமுவெல்.

"யூதர்களுக்கு அங்கு நல்ல வாழ்க்கை அமைந்துள்ளதா?"

"கிழமை நாட்களிலும் அங்கு ஒவ்வொருவரும் கோதுமைப் பாண் சாப்பிடுகிறார்கள்"

"அவர்கள் யூதர்களாகவே உள்ளார்களா?"

"நான் ஒரு உண்மையான யூதனாக இல்லைத்தான்"

பேர்ல்சா மெழுகுவர்த்திகளைத் தந்து ஆசிர்வதித்த பின், தகப்பனும் மகனும் தெரிவின் மறுபக்கத்திலிருந்த சைனகொக்கிற்குச் சென்றனர். புதிதாக பனி பெய்து கொண்டிருந்தது. மகன் நீண்ட தடங்களை வைத்து நடந்தான். "மெதுவாக நட" என்று பேர்ல் எச்சரிக்கை செய்தான்.

சைனகொக்கில் யூதர்கள் பாடல்களை ஒப்படைத்துக்கொண்டிருந்தனர். "இராசாவே வருக. எம்மை உவகை அடையச் செய்யும்." இவை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் வெளியில் பனி பெய்துகொண்டிருந்தது. பிரார்த்தனை முடிந்து பேர்லும் சாமுவெல்லும் வெளியே வந்தபோது, கிராமம் அடையாளம் தெரியாமல் மாறி இருந்தது. எங்கு பனி படர்ந்திருந்தது. வீடுகளின் கூரைகள் தெளிவற்றுச் சாங்கமாகத் தெரிந்தன. வீடுகளிலிருந்த மெழுகுவர்த்திகளை மட்டும் காணக்கூடியதாக இருந்தது. வேறு எதுவுமே தெரியவில்லை.

'இங்கு எதுவுமே மாறுதலடையவில்லை' என்றான் சாமுவேல். பேர்ல்சா பாரை மீனாலான கறியும் கோழிச்சூப்பும் இறைச்சியும் கரட்ஸ்ருவும் சோறும் சமைத்திருந்தாள். இறுதியான ஆசிர்வாதம் முடிவடைந்த பின் 'அப்பா நான் அனுப்பிய பணத்தை என்ன செய்தீர்கள்' என சாமுவேல் கேட்டான்.

பேர்ல் தனது நரைத்த புருவத்தை உயர்த்தி 'அது இங்கே தான் இருக்கிறது என்றான்.'

நீங்கள் பணத்தை வங்கியில் இடவில்லையா?'

'லென்ற்சினில் தான் வங்கிகளில்லையே'

'அப்போது அதை எங்குதான் வைத்திருக்கிறீர்கள்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பேர்ல் சிறிது தயக்கம் காட்டினான் 'சபத்தின் போது காசைத் தொட யாரும் அனுமதிக்கப்படவில்லை ஆனாலும் உனக்கு நான் காட்டுகிறேன்' பேர்ல் கட்டில் பக்கமாகச் சென்று முதுகை வளைத்து ஏதோ ஒரு பாரமான பொருளை கட்டிலின் அடியிலிருந்து இழுத்தான். ஒரு சப்பாத்து வெளியே வந்தது. பேர்ல் வைக்கோலை வெளியே எடுத்தான். சாமுவேல் சப்பாத்துக்குள் இருந்த தங்க நாணயங்களைக் கண்டான். சப்பாத்தைத் தூக்கினான்.

'அப்பா, இது ஒரு புதையல்தான்'

'நல்லது'

"நீங்கள் ஏன் இதனைச் செலவு செய்யவில்லை"

"என்ன? கடவுளுக்கு நன்றி. எம்மிடம் எல்லாமே இருந்தன"

"நீங்கள் எங்காவது ஊர் பார்க்கச் சென்றிருக்கலாம்தானே?"

"எங்கே நாம் செல்வது. இது தான் எமது வீடு"

மெதுவாக, பேர்லும் பேர்ல்சாவும் மகனையும் அவனது அமெரிக்க ஜிடிசையும் புரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தனர். அவன் பேசுவதை பேர்ல்சாவால் இப்போதெல்லாம் விளங்கக்கூடியதாகவும் இருந்தது. அவனது குரலை இப்போது இனம் கண்டு கொள்கிறாள்.

கேள்விகளுக்கு மேல் கேள்வியாக மகன் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் பேர்லின் பதில்கள் ஒரேமாதிரியாகவே இருந்தன.

"திருடர்களுக்கு இது தெரிந்தால் உங்களது உயிருக்கு இது ஆபத்தாக முடியுமே"

"இங்குதான் திருடர்கள் யாருமில்லையே"

"கடைசியில் இந்தப் பணத்துக்கு எனன நடக்குமோ?"

"நீயே அதனை எடுத்துக்கொள்"

"நாம் பெரிய சைனகொக் ஒன்றைக் கட்டலாம்" என்று சாமுவெல் பேசத்தொடங்கினான்.

"இங்குள்ளதே போதுமான தொன்று" என்றான் பேர்ல்.

"வயதானவர்களுக்கான இல்லம் ஒன்றைக் கட்டலாம்"

"இங்கு யாரும் தெருக்களில் இல்லையே"

அடுத்த நாள் சபத் சாப்பாடு முடிந்த நேரத்தில் ஒரு கடுதாசியுடன் யூதனொருவன சகரொசிமிலிருந்து வந்தான் - அது ஒரு கேபிள். சிறுதூக்கத்திற்காக பேர்லும் பேர்ல்சாவும் சாய்ந்தார்கள். உடனேயே குறட்டையும் விடத் தொடங்கிவிட்டார்கள். சாமுவெல் கோட்டையும் தொப்பியையும் அணிந்துகொண்டு வெளியே கிளம்பினான். இவன் தனது நீண்ட சுவடுகளை வைத்து நடந்து சந்தையை அடைந்தான். அதற்கப்பாலும் சென்றான். சாமுவெல் கையை நீட்டி ஒரு வீட்டின் கூரையைத் தொட்டான். சுருட்டுக் குடிக்க நினைத்தான். சபத்தின் போது தடைசெய்யப்பட்ட செயல் என அவனுக்கு நினைவு வந்தது. அவனுக்கு யாருடனாவது பேச வேண்டும் போலிருந்தது. ஆனால் முழு லென்ற்சினும் ஆழந்த துயிலில் இருந்தது. அவன் சைனகொக்குள் சென்றான். ஒரு வயதான மனிதர் அங்கு அமர்ந்திருந்தார். தோத்திரப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். சாமுவெல் அவரைப் பார்த்து "பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கிறீர்களா?" எனக் கேட்டான்.

"ஒருவன் வயதான பின்பு எதைத்தான் செய்வது"

"உங்களுக்கு வருமானம் எதுவும் வருகிறதா?"

சாமுவெல் கூறியதற்கான அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை. அவர் சிரித்தார். பற்கள் இல்லாத வெறுமையான முரசுகள் தெரிந்தன. "கடவுள் சுகத்தைக் கொடுத்தால், ஒருவனது வாழ்வு தொடர்ந்துகொண்டே இருக்கும்"

சாமுவெல் வீட்டுக்கு வந்தான். பேர்ல் சைனகொக்கிற்குப் பிரார்த்தனை செய்யப் போனான். தாயும் மகனும் தனித்திருந்தனர். அறை எங்கும் நிழல் பரவியது.

பேர்ல்சா பக்தி சிரத்தையுடன் பாடல்களைப் பாடத் தொடங்கினாள். கடவுள்களாகிய ஆபிரகாம், ஐசக், ஜெக்கப் இஸ்ரவேலின் எளிய மனிதர்களைக் காப்பாற்றுங்கள். உங்கள் பெயரால் புனிதமான இந்த சபத் விலகிச் செல்கிறது. அடுத்த வாரத்தையும் வரவேற்கிறோம். அது பூரண சுகத்தையும் செல்வத்தையும் கொடுப்பதாகவும் நல்ல கருமங்களையுடையதாகவும் அமையட்டும்.

"அம்மா நீ சொல்வதற்காக பிரார்த்தனை செய்யவேண்டியதில்லை" என சாமுவெல் கூறினான். "நீ இப்பொழுது மிகுந்த செல்வத்துடன்தான் இருக்கிறாய்"

பேர்ல்சாவுக்கு கேட்கவில்லையோ - அல்லது கேட்காதது போல் பாசாங்கு செய்கிறாளோ தெரியவில்லை. அவனது முகம் எண்ணற்ற பல நிகழ்வுகளால் கௌவ்வப்பட்டது போல், இருளடைந்தது.

அந்திக்கருக்கல் வெளிச்சத்தில் சாமுவெல் தனது மேல்சட்டைப் பைக்குள் கைவிட்டு பாஸ்போட், செக்புத்தகம், தனக்குச் சேரவேண்டிய கடன் பத்திரங்கள் எல்லாவற்றின் மேலும் கைகளை ஓடவிட்டான். அவன் பெரிய திட்டங்களுடன் இங்கு வந்தான். அவனது தோல் பெட்டி பெற்றோர்களுக்காக அவன் கொண்டுவந்திருந்த பொருட்களால் நிரம்பி இருந்தது. கிராமத்திலிருந்த எல்லோருக்கும் நன்கொடையாக வெகுமதிகள் கொடுக்க நினைத்தான். தனது பணத்துடன் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக நியூயோர்க்கில் 'லென்ற்சின்' கழகம் ஏற்பாடு செய்த 'போல்' நடனத்தின் போது, கிடைத்த பணமும் அவனிடமிருந்தது.

ஆனால், மறுகரையில் உள்ள இந்தக் கிராமத்தில் தேவைகள் எதுவுமே இல்லை. சைனகொக்கிலிருந்து கரகரப்பான குரலில் கீதங்கள் கேட்டபடியே இருந்தன. நாள் முழுதும் அமைதியாக இருந்துவிட்டு சுவர்க்கோழிகள் மீண்டும் கீச்சிடத் தொடங்கி இருந்தன. தாய்மாரிடமிருந்தும் பாட்டிமாரிடமிருந்தும் வழிவழியாக வந்த 'புனிதச் செய்யுள்'களை, பேர்ல்சா பக்தி பூர்வமாகச் சொல்லத் தொடங்கினாள்.

'தூய செம்மறிப் புருவையே / ரோராவுக்கு அமைந்து நடக்கவும் நல்ல காரியங்களைச் செய்யவும் / எம்மில் பூரணமான கருணையுடன் இரு / காலணிகள், உடைகள், உணவு எல்லாவற்றிலுமே / எமது தேவைகளை நிறைவேற்று / அத்துடன் மெசியாவின் பிரசங்கத்தைக் கேட்பதற்கும் / ஒழுங்கு செய்துதா'.

சபத்: புனிதநாள். இங்கு யூதர்களா கையால் சனிக்கிழமை

சைனகொக்: யூத ஆலயம்

ஸ்ரூ: கோதுமை மாவுடன் இறைச்சி, கரட் என்பன சேர்த்துச் சமைக்கும் கறி

ரோரா: யூதமதச் சட்டங்கள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளியல் அடிமைகள்



இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பாகும் விளம்பரம் இது..

"இந்த அழகான வீட்டை நீங்கள் எவ்விதம் கட்டினீர்கள்" என்று ஒரு ஆண் கேட்க.

"குவைத்தில் பணிப்பெண்ணாகப் பணி புரிந்து சம்பாதித்த பணத்தில் கட்டினேன்" என்று, ஒரு இளம் பெண் பதிலளிக்கின்றார்.

இலங்கையிலிருந்து பணிப்பெண்களை மேற்கு ஆசிய (மத்திய கிழக்கு) நாடுகளுக்கு அனுப்பும் முகவர் நிலையம் ஒன்றின் விளம்பரம் அது.

விளம்பரத்தைப்போல, பணிப்பெண்கள் பணி புரியும் இடங்களில் அவர்களின் வாழ்க்கை இனிமையாகவும் - மகிழ்ச்சியாகவும் இல்லை.

கடந்த மாதம் கொழும்புப் பத்திரிகைகள் அனைத்தினதும் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்த தகவல் ஒன்று உண்டு.

"குவைத்திலுள்ள சிறிலங்கா தூதரகத்தில் 250 இலங்கைப் பணிப்பெண்கள் தஞ்சமடைந்துள்ளனர்" என்பதே அந்தத் தலைப்புச் செய்தி ஆகும்.

அரபு எசமானர்களின் அனைத்துவிதமான கொடுமைகளில் இருந்தும் தப்புவதற்காக, அந்த அப்பாவிப் பணிப்பெண்கள் எடுக்கும் தற்காப்பு முயற்சி அது. பெருந்தொகைப் பணிப்பெண்கள் இவ்விதம், தஞ்சமடைந்திருப்பது இதுதான் முதற் தடவை. ஆனால், வீட்டு எசமானர்களின் வன்முறைகளில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக இவ்விதம் பணிப்பெண்கள் தஞ்சமடைவது, மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள சிறிலங்கா தூதராலயங்களுக்குப் பழக்கமான ஒரு செயல்.

வீட்டு எசமானர்களின் பாலியல் வன்முறைகளுக்கும் மற்றும் உடல் ரீதியான தாக்குதல்களுக்கும் இந்தப் பணிப்பெண்கள் உள்ளாக்கப்படுவதுடன், இவர்களுக்கு உணவு கொடுக்க மறுக்கும் நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன. கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு ஆங்கிலவார ஏடு, எசமானனின் 'கோட்டை'க்குள் உணவுக்காகப் போராடிய ஒரு பணிப்பெண்ணின் அவல வாழ்வைச் சித்தரித்திருந்தது. எசமானரின் குடும்ப அங்கத்தவர்களுக்குத் தேவையான உணவைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் அந்தப் பணிப்பெண்ணுக்கு வேலை முடிந்ததும், அவருக்கான உணவை வழங்காது அவரின் விடுதிக்குக் கலைத்துவிடும் காட்டுமிராண்டித்தனம் பற்றி, அந்தப் பணிப்பெண் விபரித்திருந்தார்; பசிக்கொடுமையிலிருந்து தப்புவதற்காகத் தான் தயாரித்த உணவை, தானே திருடும் முறை பற்றி அந்த அபலைப் பெண் விளக்கியிருந்தார்; உணவு தயாரிக்கப்பட்டு முடிந்ததும், தனது உடைகளுக்குள் உணவை மறைத்தபடி தனது விடுதிக்குப் போய்ச்சேரும் அவலக் கதையை அந்தப் பணிப்பெண், பத்திரிகையாளரிடம் விபரித்திருந்தார்.

அன்று ஒரு காலம் - நிலப்பிரபுக்கள் என்றும் அடிமைகள் என்றும் இருந்த காலம் அது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரபுக்களின் வயல்களில் உணவு உற்பத்தியில் ஈடுபடும் அடிமைகளுக்கு உண்ண உணவிருக்காது.

உடை நெய்பவனுக்கு உடுக்க உடுப்பிருக்காது.

அதுபோல, உணவு சமைக்கும் தொழிலில் ஈடுபடும் நவீன அடிமைகளான பணிப்பெண்களுக்கு உண்ண உணவு கொடுக்கப்படுவதில்லை என்பது, இன்றைய யதார்த்தமாகும்!

இந்த அபலைப் பெண்கள் தொடர்பாக அல்லது இவர்களைப் போன்ற பணிப்பெண்களது அவல வாழ்க்கை தொடர்பாக, சம்பந்தப்பட்ட அரசாங்கங்களோ அல்லது மனித உரிமை அமைப்புக்களோ உருப்படியாக எதுவும் செய்யவில்லை. அதேவேளை, தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக நீதி கோரக்கூடிய அளவுக்கு, பணிப்பெண்களுக்கான சட்டப்பாதுகாப்பு அரபு நாடுகளில் இல்லை.

வறுமையும் சமூகத்தின் நிராகரிப்புக்களும், பணிப்பெண்களாகப் பணிபுரிய பெண்களைத் தூண்டுகின்றன என்பது சமூகவியலாளர்களது கருத்து. பணிப்பெண் வேலைக்காக வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்களுள் பெரும் பகுதியினர் சிங்கள யுவதிகளாவர். இரண்டாம் இடத்தை முஸ்லீம் பெண்கள் வகிக்கின்றனர். குறித்த தொகை தமிழ்ப் பெண்களும் பணிப் பெண்களாக வேலை பார்க்கின்றனர்.

பணிப்பெண்களால் சிறிலங்கா அரசுக்கு வருடாந்தம் 150 கோடி ரூபாய்கள் அந்நியச் செலவாணியாக வந்து சேருகின்றன. இந்த அந்நியச் செலவாணியில் அக்கறை காட்டும் சிறிலங்கா அரசு, அதனை ஈட்டிக் கொடுக்கும் பணிப்பெண்களின் அவல வாழ்வைக் கருத்தில் எடுக்காது இருக்கின்றது.

யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை; அந்நியச் செலவாணி நாட்டுக்குள் வந்தால் போதும் என்ற மனநிலையுடன், சிறிலங்கா உட்பட அநேகமான மூன்றாம் மண்டல அரசுகள் இருக்கின்றன. அரசுகளின் இந்த மனநிலை காரணமாக விபச்சாரமும் சிறுவர்களைப் பாலியலுக்குப் பயன்படுத்தும் தொழிலும் அந்நியச் செலாவாணியை ஈட்டித்தரும் லாபகரமான வாணிபமாக, மூன்றாம் மண்டல நாடுகளில் பெருகி வருகின்றன. சமூகச் சீர்கேட்டைக் கொண்டு வந்து எதிர்கால சந்ததியைப் பாழ்படுத்தும் கைங்கரியம் அந்நியச் செலவாணிச் சம்பாத்தியம் என்ற பெயரில் நடைபெறுகின்றது. இதை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களும் மறைமுகமாக ஆதரிக்கின்றன என்பது, ஜீரணிக்கக் கடினமான ஒரு உண்மை.

சிங்கள தேசத்தின் கடற்கரைகளும் - உல்லாசப்பயண விடுதிகளும் இன்று, சிங்கள இனத்தின் பண்பாட்டையும் - அதன் எதிர்காலக் கௌரவத்தையும் நாசமாக்கும் இடங்களாக மாறிவருகின்றன என்று, சிங்கள சமூகவியலாளர்கள் அரசாங்கத்தை எச்சரிக்கின்றனர். பொருளாதார அபிவிருத்தி அடைந்துள்ளதாகப் பெருமை பேசப்படும் சில தென்கிழக்கு ஆசிய நாடுகளில், பாலியல் வாணிபத்திற்காகப் பெண்களும் - சிறுவர்களும் பொருளியல் அடிமைகளாகத் தொழிற்படுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த விவகாரங்களில், அரசியலுக்கு அப்பால் பொருளாதார சக்திகளே ஆதிக்கம் செலுத்துவதால், மனித உரிமை அமைப்புக்களின் அக்கறையை இவை ஈர்க்கவில்லை என்பது ஒரு மனித சோகம் ஆகும்.

★★★

## மாவீரர்நாளை முன்னிட்டு 'எரிமலை' சஞ்சிகை நடத்தும் சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டி

'எரிமலை' சஞ்சிகை மாவீரர் நாளை முன்னிட்டு சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்துகிறது. இப்போட்டிகள், சமகால நிகழ்வுகளை; புலம்பெயர் வாழ்வியல் யதார்த்தக் கோலங்களை; அகதியாக உலகெங்கும் அலையும் தமிழரின் துன்பியல் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்களைக் கொண்டமைதல் விரும்பி வரவேற்கப்படும்.



நிபந்தனைகளும் விதிகளும்

சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கு வயது, பால் வேறுபாடு கிடையாது.

படைப்புக்கள் யாவும் சமகால நிகழ்வை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறுகதைகள், கட்டுரைகள் 1500 சொற்களுக்கு மேற்படாமலும், அமைதல் வேண்டும்.

படைப்பாளி தன்னுடைய பெயர், முகவரி என்பவற்றைத் தனித் தாளில் எழுதி அது தமது ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

பிரதேச பிரதிநிதிகள் மூலமாகவும் படைப்புக்கள் சேர்ப்பிக்கப்படலாம்.

ஆக்கங்கள் முன்பு பிரசுரிக்கப்பட்டவையாகவோ, பிரசுரத்திற்கு அனுப்பப்பட்டவையாகவோ இருக்கக்கூடாது.

போட்டிக்கான ஆக்கங்கள் கார்த்திகை 10ம் திகதிக்கு முன் எமக்குக் கிடைத்தல் வேண்டும்.

போட்டி முடிவுகள் எரிமலை இதழில் அறிவிக்கப்படும்.

முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு மாவீரர் விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மூலையில், 'மாவீரர் நாள் 1996' எனக் குறிப்பிட்டு எரிமலை முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கின்றோம்.

'எரிமலை'
ஆசிரியர் குழு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியத் தேர்தல் முடிவுகள்:



'உலகின் மிகப் பெரிய சனநாயக நாடு' என்றழைக்கப்படும் இந்தியாவின் பதினோராராவது மக்களவைத் தேர்தல் இதுவரை இல்லாத வகையில் பல திருப்பங்களுக்கு வழி வகுத்துள்ளது.

ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற ஆட்சிமாற்றத்திற்குப் பின் ஏறத்தாள நாற்பத்தைந்து ஆண்டுகள் அகில இந்திய காங்கிரஸ் கட்சியே ஆட்சி நடத்தியுள்ளது. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக இதுவரை இல்லாத அளவுக்குக் குறைவான, 28.1 வீத வாக்குகளும் 139 இடங்களும் மட்டுமே பெற்று நிக்கிறது. மகாத்மா காந்தியார் 'காங்கிரஸ் கட்சியைக் கலைத்து விடும்படி' தன் இறுதிக் காலத்தில் கூறிய அறிவுரை செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போனது. ஆனால் ராஜீவ் காந்தியும், தொடர்ந்து வந்த நரசிம்மராவும் தமக்கேயுரிய வழிகளில் தேசபிதாவின் கனவை நனவாக்க முயன்று அதில் வெற்றியும் பெற்றுள்ளனர். ராஜீவ் காந்தி போபர்ஸ், பேர்பாக்ஸ் என்று அடுத்தடுத்த ஊழல்களால் கட்சியைப் பலவீனப்படுத்தி வி.பி.சிங்கிடம் 1989-ல் தோல்வியைத் தழுவினார். ஏதோ அவருடைய மரணத்தால் இரண்டாம்கட்ட வாக்குப்பதிவில் ஏற்பட்ட அனுதாப அலையை அறுவடை செய்து நூலிழையில் தப்பித்து ஆட்சியமைத்தார் நரசிம்மராவ். பங்குச் சந்தை ஊழல், சர்க்கரை பேர ஊழல், ஹவாலா ஊழல், வீட்டுவசதி ஊழல், ரெலிகாம் ஊழல் என்று பல வண்ண ஊழல்களால் ஆட்சியைச் சீரழித்தார். அவரது காலத்தில்தான் காங்கிரசு கட்சி, திவாரி காங்கிரசு, மூப்பனார் காங்கிரசு, சிந்தியா காங்கிரசு என்று பல குட்டிகள் போட்டுப் பலவீனப்பட்டு நிற்கிறது. காங்கிரசு என்ற மிகப் பெரிய தேசியக் கட்சியை உடைத்து, உருமாற்றி, உருப்படமுடியாத நிலைக்கு தள்ளிய பெருமை மேற்சொன்ன தலைவர்களைச் சாரும். இனி யாரும் அக்கட்சிக்குப் புத்துயிரூட்ட முடியாதபடி கட்சி மரணப்படுக்கையிலுள்ளது. கொள்கைகளைவிட தனிநபர் துதியில் கட்சி வளர்த்த காங்கிரஸ் இன்று தன்னைக் காப்பாற்ற அவதாரங்கள் யாருமின்றி, அனாதைப்பட்டு நிற்கிறது.

பாரதீய சனதாக்கட்சி 160 இடங்கள் பெற்று முதலிடத்தில் நின்றாலும், அது வெறும் 23.5 வீத வாக்குகளே பெற்றுள்ளது. அதாவது காங்கிரசு கட்சியின் வாக்குகள் மத்தியப் பிரதேசத்தில் பிளவுபட்டதாலும் உத்திரப்பிரதேசத்தில் பா.ச.க. யின் எதிர்ப்புச் சக்திகள் இரண்டாகப் பிரிந்ததாலும் பீஹாரில் லல்லுவின் எதிர்ப்புச் சக்திகள் பா.ச.க. வுடன் இணைந்ததாலும் பல தொகுதிகளில் மிகச் சிறிய இடைவெளியில் தான் பா.ச.க. வென்று 160 இடங்களைப் பெற்றுள்ளது. மேலும் அக்கட்சி அகில இந்தியத் தன்மை கொண்டிருக்கவில்லை. இன்னும் தெற்கிலும், வடக்கிலும் வேரூன்றவில்லை. வடக்கிலும் சிறுபான்மை முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் அக்கட்சியை ஏற்றுக்கொள்ளவதில்லை. குறுகிய மேல்சாதி ஆதரவுடன் பார்ப்பனீய மேலாதிக்கம் பூண்டு மதவாதக் கட்சியாக 'இந்துத்வம்' என்ற முழக்கத்துடன் அக்கட்சி நிக்கிறது. அதன் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் வரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி இந்தியாவின் பன்முகப்பட்ட கலாச்சாரத் தன்மைக்கு என்றும் நீங்காக் களங்கத்தை ஏற்படுத்தியது. அது ஆறாவடுவாய் ஆழ்மனதில் மக்களிடையே பதிந்துள்ளது. எனவே காங்கிரசின் இடத்தில் ஒரு அகில இந்தியக் கட்சியாக பாரதீய சனதாவைப் பலதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் நிலை அக்கட்சிக்கு ஒருபோதும் இல்லை.

தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ள ஜனதாதளம் பீஹார், ஒரிசா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மேற்குவங்கம், கேரளா ஆகிய மாநிலங்களிலும் மட்டுமே செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே அவையும் பிராந்தியக் கட்சிகளாகவே உள்ளன. அகில இந்தியத் தன்மை இல்லை. எனவே அகில இந்தியக் கட்சியாக யாதொன்றும் இல்லாமல் போனது இத்தேர்தலின் முடிவுகள் கூறும் முக்கிய அம்சமாகும்.

இவை தவிர மாநிலக் கட்சிகள் அல்லது பிராந்தியக் கட்சிகள் கணிசமான இடங்களைப் பெற்றுள்ளன. குறிப்பாக பஞ்சாபில் அகாலித் தளம், தமிழகத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம், ஆந்திராவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "நரசிம்மராவுக்கு நன்றி"



தெலுங்கு தேசம், அசாமில் அசோம் கனபஷித், மகாராஷ்டிரத்தில் சிவ சேனை, ஹரியானாவில் ஹரியானா விகாஸ் கட்சி, பீஹாரில் சமதாக் கட்சி, பஞ்சாபிலும், உத்திரப்பிர தேசத்திலும் பகுசன்சமாஜ் கட்சி போன்றவை குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளன. எந்தவொரு தேசியக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில் இம்மாநிலக் கட்சிகள் மத்திய அரசின் உருவாக் கத்தில் செலுத்தும் செல்வாக்கு மிக அதிகமாயும், தவிர்க்க இயலாது மாயும் உள்ளது. இது இந்திய அரசி யல் அரங்கில் ஒரு குறிப்பிடத்தக்க வரவேற்க வேண்டிய திருப்புமுனை யாகும்.

மாநிலக் கட்சிகள் அகில இந் தியக் கட்சிகளிடமிருந்து பெருமள வில் மாறுபடுகின்றன. அகில இந் திய நலன்களை முன்னிறுத்தி இவை தத்தம் மாநிலங்களில் கட்சி நடத்த முடியாது. அந்தந்தப் பகுதி நலன் களை முன்னிறுத்தியே அவை உயிர் வாழமுடியும். அவற்றின் அடிப்ப டையும் தனித்தன்மையும் அதுவே. இந்தியா மொழிவாரி மாநிலங்க ளாய் அமைந்துள்ளதால், இம்மாநி லக் கட்சிகள் தேசிய இனங்களின் நலன்களைப் பிரதிபலிப்பதைத் தவிர அவற்றுக்கு வேறு வழி இல்லை. எனவே மாநிலக் கட்சிக ளின் வளர்ச்சியும், செல்வாக்கும் தேசிய இனங்களின் மறைமுகச் செல்வாக்கு என்றே கொள்ளலாம். இதனை தமிழ் மாநில காங்கிரசு போன்ற கட்சிகள் உடனடியாக உணராவிடினும் நீண்ட காலகட் டத்தில் இவை ஒரு நிலைப்பாடு எடுத்தே ஆக வேண்டும். இதுவரை இல்லாமல் முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் போன்றோர் தமிழன், தமிழர் என்று பேசத் தொடங்கியிருப்பதன் அடிப்படை அதுவே ஆகும். வேறு நிர்ப்பந்தங்க ளால் மாநிலக் கட்சி தொடங்கிய வர்களுக்குக் கூட, இனிவரும் நிர்ப் பந்தங்கள் இப்படியே இருக்கும்.

தமிழினம் தொடர்பான தமிழீ ழப் பிரச்சனை, தமிழ் கன்னட மாநிலங்களிடையே நிலவும், காவிரி நீர்த்தாவா போன்ற பிரச்சனைகள் முன்னிலும் கூர்மை பெறும். பிராந் திய முரண்பாடுகள் தெளிவாக முன் னிறுத்தப்படும். தேசிய இனங்களின் இன, மொழி உரிமைகள் இன்னும் வளர்ச்சியும், வடிவமும் பெற வாய்ப் புகள் உண்டாகும். உடனடியாகப் பெரிய மாற்றம் நிகழாவிடினும் நிச்சமாய் அதிகமான அதிகாரப் பரவல், கூட்டாட்சித் தத்துவம் இவற்றுக்கு, இவை நடைமுறையில் வழிகோலும். இதுவரை மாநிலங்கள் மத்திய அரசின் பாளையப்பட்டுக் களாய்ச் சீரழியும் நிலை மாறுவதற் கான அறிகுறிகள் இத்தேர்தல் முடிவுகளில் தொக்கி நிக்கின்றன. ஒரு தமிழன் என்ற முறையில் இது நமக்கு ஆறுதல் அளிப்பதாய் உள் ளது. இத்தகைய நிலையை ஏற் படுத்தி, காங்கிரசைப் புதைசேற்றில் தள்ளி, தேசிய இனங்களை மையச் செயற்பாட்டில் நிற்கும் நிலையை உருவாக்கிய நரசிம்மராவுக்கு நாம் என்றும் நன்றிக்கடன் பட்டுள் ளோம். தமிழகத்தின் தன்னுரிமை சிறிதுசிறிதாக முன்னுரிமை பெறும் நிலை வளரட்டும், மலரட்டும்.

— *சேவியர் அருள்ராஜ்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



கூரைநிழல் தஞ்சமன்று
குடைநிழல் தஞ்சம் இன்று
அன்னியன் செய்த அழிவை
அறியுமா இந்தக் குஞ்சு

புகைப்படம்: குணாளன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Vasan Litho Printer (London) - 0181-6404366